பக்கங்கள் : பதினாறு

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆடி 23 சனிக்கிழமை (07-08-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:256





விடுதலைப் புலிகளின் விசேட உந்துகணை செலுத்திப் படையின் ஒரு தொகுதியினர் தமது விசேட பயிற்சிகளை நேற்று நிறைவுசெய்தனர். இதற்கான விசேட நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தேசியத் தலைவர் வே.பிரபாகரன் மற்றும் மாலதி படையணியின் விசேட தளபதி கேணல் விதுசா, வடபோர்முனை கட்டளைத் தளபதி கேணல் தீபன் ஆகியோர் படையணியின் அணிவகுப்பு மரியாதையை ஏற்பதையும், பயிற்சிமுடித்த போராளி ஒருவருக்கு தேசியத் தலைவர் சான்றிதழ் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

### வடக்கு உயர் பாதுகாப்பு வலய விவகாரம்:

# மனுச் செய்தவர் மட்டும் மீளக்குடியமர்வதற்கு

# ஆட்சேபனை இல்லை என்கிறது படைத்தரப்பு

## வழக்கிலிருந்து நழுவும் அரசின் யுக்தி இது

கொழும்பு,ஓகஸ்ட்.7

வடக்கில் உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள தனது வீட்டில் மீளக்குடியமர அனுமதிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட ஒரு வழக்கில் மனுச்செய்தவர் மீளச்சென்று தனது வீட்டில் குடியமர்வதற்கு ஆட்சேபனை ஏதும் இல்லை என்று படைத்தரப்பு உயர் நீதிமன்றத்திடம் தெரிவித்திருக்கின்றது.

மேற்படி வழக்கைத் தாக்கல் செய்தவர் மீளச்சென்று தனது வீட்டில் குடியமர்வதற்கு ஆட்சேபனை இல்லை என்று நீதிமன்றத்துக்குத் தெரிவித்ததன் மூலம் இவ்விவகாரம் விசாரிக்கப்பட்டு, அது தொடர்பாகத் திட்டவட்டமான முடிவு ஒன்று எட்டப்படும் நிலை ஏற்படாமல் பார்த்துக் கொண்டது படைத்தரப்பு.

வடக்கில் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் தங்களது தாயகப்பூமியை இலங்கை அரச படைகள் ஆக்கிரமித்திருப்பதை ஆட்சேபித்து - தங்களின் வீடுகளுக்குத் தாங்கள் திரும்பிச்சென்று மீளக்குடியேறுவதைத் தடுக்கக்கூடாது என்று உத்தரவிடக்கோரி - வடபகுதித் தமிழர்கள் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கில் திட்டவட்டமான தீர்ப்பு வெளியாகாத வகையில் செயற்படப்பார்க்கிறது அரசுத்தரப்பு என்றும்

இதன்மூலம் இந்த விடயத்தில் ஒரு நழுவல் போக்கை அரசு கடைப்பிடிக்க முயல்கின்றது - என்றும் அவதானிகள் குறிப்பிடுகின்றனர்.

அவசரகாலச் சட்டம் காலாவதியாகி விட்ட நிலையில் பொதுமக்களின் வீடு, வாசல்களைப் பலவந்தமாகப் படைத்தரப்பு ஆக்கிரமித்திருப்

(16ஆம் பக்கம் பார்க்க)

### சிங்கள மக்கள் எமக்கு எதிரிகள் அல்லர்

# சொந்தத் தாயகத்தில் கௌரவமாக வாழ்வதே எமது அடிப்படை அபிலாசை

## தென்னிலங்கை அமைப்புகளிடம் தமிழ்ச்செல்வன் விளக்கம்

கிளிநொச்சி,ஓக.7

எமக்கு சிங்கள மக்கள் எதிரிகள் அல்லர். சொந்தத் தாயகத்தில் கௌரவமாக வாழவேண்டும் என்பதே எமது அடிப்படை அபிலாசை.

கொழும்பிலிருந்து நேற்று கிளிநொச்சிக்கு வந்து தன்னைச் சந்தித்த வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதிகளிடம் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் இவ்வாறு தெரிவித்தார்.

தென்னிலங்கையிலிருந்து கத்தோலிக்க திருச்சபையின் குருநாகல் ஆயர் சேர்த் செவென அறக்கட்டளையின் கலேப்பிட்டிய பேமரத்தின தேரர், பௌத்த பிக்குணிகள் அறக்கட்டளையகத்தைச் சேர்ந்த போக மன்ன தர்சிகா தேரணி, ஒருதொட்ட தர்ணயந்தி தேரணி மற்றும் மகா கல் கடவல புன்ன சாரதேரர், சுவர்ணா அறக்கட்டளையின் சுவர்ணா மல்லிமராட்சி, பெண்கள் வணிகச் சம்மேளனத்தின் ராணி ரட்ணாயக்கா, தொழிற்சங்கப் பிரதிநிதிகளான ரவிகுமுதேஸ், சமன் ரட்ணப்பிரிய, இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பெட்டி ரண

(16ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகா-ரணில் விரைவில் சந்திப்பு?

கொழும்பு,ஓக.7

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை விரைவில் சந்தித்துப் பேச்சு நடத்துவதற்கான சாத்தியங்கள் தென்படுவதாகச் செய்தி ஏஜென்ஸி ஒன்று நேற்றுத் தகவல் வெளியிட்டது.

15 ஆம் திகதிக்குப் பின்னர் இச்சந்திப்புக்கான வாய்ப்புகள் இருப்பதாக அது மேலும் தெரிவித்தது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பஸ் நிலையச் சூட்டுச் சம்பவம்; வழக்கை கொழும்புக்கு மாற்ற முயற்சி

யாழ்ப்பாணம்,ஓக.7

யாழ். பஸ் நிலையத்தில் கடந்த வருடம் சிறுவன் ஒருவன் உட்பட இருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்று மூன்று படையினருக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கை கொழும்புக்கு இடமாற்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 9ஆம் திகதி யாழ். பஸ் நிலையத்தில் பத்திரிகை விற்பனை செய்த சிறுவன் உட்பட இருவரைச் சுட்டுக்காயப்படுத்தினர் என்று சிப்பாயான நாகொட விதாரண உட்பட மூன்று படையினர் மீது வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இந்த வழக்கு விசாரணை யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன் இடம்பெற்றுவந்தது. சிலரின் சாட்சியங்களும் பதிவு செய்யப்பட்டிருந்தன.

இந்நிலையில், இந்த வழக்கின் விசாரணையை கொழும்புக்கு மாற்றும்படிகோரி முத

(16ஆம் பக்கம் பார்க்க)

## உயர்தரப் பரீட்சை முடிவுகள் இன்று வெளியீடு

யாழ்ப்பாணம்,ஓக.7

கடந்த மே மாதம் இடம்பெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகள் இன்று அதிகாலை இணையத்தளத்தில் வெளியிடப்படும் என பரீட்சைத் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## சூட்டுச் சம்பவங்கள்

### களுதாவளையில்...

மட்டக்களப்பு மாவட்டத்தில் இலங்கை அரசப் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள களுதாவளைப் பகுதியில் நேற்று நண்பகல் 11.15 மணியளவில் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மட்டக்களப்பு நகரிலிருந்து தெற்கே 20 மைல் தொலைவில் உள்ள களுதாவளை பஸ் நிலையத்தில் நின்ற ஒருவரே மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் சுடப்பட்டார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

### வெலிகந்தையில்...

மட்டக்களப்பு மாவட்ட எல்லையோரத்தில் உள்ள - பொலன்னறுவை மாவட்டத்தில் வெலிகந்தை முத்துக்கல்லில் - கருணா தரப்பினரோடு சேர்ந்து முன்னர் இயங்கியவர் எனக் கருதப்படும் இளைஞர் ஒருவர் நேற்றுக்காலை இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அதே இடத்தைச் சேர்ந்த பூபாலபிள்ளை அழகேந்திரன் (வயது-21) என்பவரே உயிரிழந்தவராவார். மிக அருகில் இருந்து அவர் சுடப்பட்டுள்ளார் என்று பொலீஸார் கூறுகின்றனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

### மன்னாரில்....

கொழும்பு,ஓக.7

மன்னாரில் இனந்தெரியாத ஆயுததாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்துக்கு இலக்காகி இரண்டு இளைஞர்கள் படுகாயமடைந்தனர். அவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சூட்டுச் சம்பவம் நேற்று அதிகாலை 1.20 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

மன்னார் பேசாலையைச் சேர்ந்த தையல் கடைக்காரரான தர்மலிங்கம் முரளி, மீனவரான

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# அமெரிக்கத் தளபதியின் குடாநாட்டு விஜயம் போர் குறித்த பீதியை ஏற்படுத்தி உள்ளது!

யாழ்ப்பாணம்,ஓக.7

அமெரிக்கக் கடற்படையின் பசுபிக் பிராந்தியக் கட்டளையிடும் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் வெலஸ் சீ.கிரிக்ஸன் நேற்றுமுன்தினம் குடாநாட்டுக்கு வந்திருந்தார். இங்குள்ள பாதுகாப்பு நிலைகள் தொடர்பாக அவர் இலங்கைப் படை அதிகாரிகளுடன் கலந்துரையாடினார் என்று தெரிவிக்கப்பட்டது.

இவரது இந்த விஜயம் யுத்தம் பற்றிய அச்ச உணர்வை மீண்டும் தமிழ் மக்களிடையே அதிகரித்துள்ளது என்று இங்குள்ள அமைப்புகள் தெரிவித்துள்ளன.

**தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம்**

அமெரிக்கக் கடற்படை அதிகாரியின் குடாநாட்டு விஜயம் குறித்து தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அமெரிக்கக் கடற்படையின் பசுபிக் பிராந்திய கட்டளையிடும் தளபதி குடாநாட்டுக்கு வருகைதந்தமையானது மீண்டும் ஒரு யுத்தத்திற்கான பலத்தையும் ஊக்கத்தையும் இலங்கை இராணுவத்துக்குக் கொடுப்பதாகவே இருக்கிறது. இந்தச் சமாதானச் சூழலில் இலங்கை இராணுவத்தினருக்கு வெளிநாட்டு இராணுவ அதிகாரிகள் புலனாய்வுத் தகவல்களையும் இராணுவ தொழில்நுட்ப உதவிகளையும் வழங்குவதும் அவர்கள் இங்கு வந்து இராணுவ முன்னரங்க, பின்னரங்க நிலைகளைப் பார்வையி

## பொது அமைப்புகள் கவலை

டுவதும் தமிழ் மக்கள் மத்தியில் பயத்தையும் ஏமாற் றத்தையும் தோற்றுவிக்கின்றன. யுத்தநிறுத்தம் ஏற்படுத்தப்பட்ட பின்னர் இயல்புவாழ்க்கை திரும்பி தமது சொந்த இடங்களுக்குச் செல்லலாம் என எதிர்பார்த்திருந்த தமிழ் மக்கள் மனங்களில் இவ்வாறான செயல்கள் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. எனவே, இந்தச் சமாதான சூழல் தொடரவேண்டுமானால் உடனடியாக தமிழ் மக்களால் முன்வைக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை தொடர்பில் சரியான அழுத்தத்தை இலங்கை அரசிற்கு அமெரிக்கா வழங்கவேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும். மாறாக இலங்கை இராணுவத்தின் நலன்களை முன்னெடுக்கும் செயற்பாடுகளை அமெரிக்கா உடனடியாக நிறுத்தவேண்டும். இதுவே நிரந்தர சமாதானத்திற்கு வழிவகுக்கும். - என்றுள்ளது.

**சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை**

அமெரிக்கக் கடற்படையின் பசுபிக் பிராந்தியத் தளபதியின் விஜயம் மக்கள் மத்தியில் மண்டும் யுத்தம் பற்றிய அச்ச உணர்வை அதிகரித்துள்ளது.

அமெரிக்க அரசின் யுத்தத்தைத் தூண்டும் நடவடிக்கையின் ஒரு கட்டமாகவே இதனைக் கருதவேண்டியுள்ளது.

இன்று சர்வதேசம், தமிழ் மக்களின கோரிக்கைகளை ஏற்று சமாதானப் பேச்சுக்குச் செல்லுமாறு இலங்கை அரசைத் தூண்டவேண்டும். நிரந்த சமாதானம் நிலைக்கவேண்டுமானால் தமிழ்மக்களால் முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பான சரியான தீர்வினை இலங்கை அரசு தமிழ் மக்களிற்கு வழங்கவேண்டும். இதற்கான அழுத்தத்தினை ஸ்ரீலங்கா அரசுக்கு அமெரிக்கா வழங்குவதையே தமிழ் மக்கள் விரும்புகின்றார்கள். மாறாக ஸ்ரீலங்கா அரசினதும் இராணுவத்தினதும் நலன்களை முன்னிலைப்படுத்தும் அமெரிக்க அரசின் இத்தகைய செயலை வன்மையாகக் கண்டிக்கின்றோம் - என்றுள்ளது.

**பெண்கள் பண்பாட்டு மையம்**

அமெரிக்கத் தளபதி ஒருவர் யாழ். குடாநாட்டின் இராணுவ முகாம்களுக்கும் இராணுவ நிலைகளுக்கும் சென்றுள்ளார். இதைப் பத்திரிகைகளில் வாசிக்கின்றபோது தமிழ் மக்கள் மத்தியில் அச்சமும் வெறுப்பும் தூண்டப்படுகின்றன. சமாதானத்திற்காக செயற்பட்டுக்கொண்டிருக்கும் தமிழ் மக்களிடத்து இத்தகைய மன உணர்வுகளைத் தூண்டும் அமெரிக்காவின் இச்செயலை நாம் மிக வன்மையாகக் கண்டிக்கின்றோம். இச்செயல்கள் உலகிற்குப் பயங்கரவாதத்தை ஏற்றுமதி செய்யும் நடவடிக்கையாகவே அமையும் என்றும் -

உலகப் பந்தில் இரத்தத்தைச் சிந்த முயலும் உங்கள் குரூர ஆசையைக் கைவிடுங்கள் என்றும் - சமாதானமான ஓர் அழகிய உலகை கட்டியெழுப்ப வழிவிடுங்கள் என்றும் - சமாதானத்தின் மீதுள்ள பெரு விருப்பின் பேரால் அமெரிக்காவிடம் கேட்டுக்கொள்கிறோம் என்றுள்ளது.

**உயர் தொழில்நுட்ப மாணவர் ஒன்றியம்**

அமெரிக்கப் படைத் தளபதியின் யாழ். விஜயத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அவர் தனது விஜயத்தின்போது குடாநாட்டின் முக்கிய படைத் தளங்களுக்கும் முகமாலை முன்னரங்க நிலைக்கும் சென்று பார்வையிட்டுள்ளார். இந்த நடவடிக்கையானது போருக்கான முன்னேற்பாடென்வே நாம் கருதுகின்றோம். இவ்வாறான நடவடிக்கைகள் நிச்சயமாக ஒரு போருக்கே இட்டுச் செல்லும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை. இவ்வாறான விஜயங்களைக் கட்டுப்படுத்தச் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் அமெரிக்கா இவ்வாறான யுத்த உதவிகளையோ சேவைகளையோ இலங்கை அரசுக்கு வழங்குவதைத் தவிர்த்துக்கொள்ளவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறோம். - என்றுள்ளது.

**கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்**

இதேவேளை - கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம் இலங்கைக்கான அமெரிக்கத் தூதருக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

ஸ்ரீலங்கா அரச படைகளது வடபகுதி கேந்திர நிலைகளை தங்களது பசுபிக் பிராந்திய கட்டளைத் தளபதி லெப். ஜெனரல் வெலஸ் சீ. கிரிக்ஸன் பார்வையிட்டமையானது சமாதானத்தை

(15ஆம் பக்கம் பார்க்க)

## மேர்வினும் சிவாஜிலிங்கமும் உள்ளே மோதல்; வெளியே நட்பு

கொழும்பு,ஓக.7

நாடாளுமன்றில் முஷ்டியை முறுக்கிக் கொண்டு மோதிக்கொள்ள முற்பட்ட எம்.பிக்கள் நாடாளுமன்றுக்கு வெளியே கட்டித் தழுவிக்கொண்டு தாம் சிறந்த நண்பர்கள் என்று கூறுகின்றனர்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றுக்குள் அமளிதுமளியை ஏற்படுத்தி மோதிக்கொள்ள முற்பட்ட அரசுத்தரப்பு எம்.பியான மேர்வின் சில்வாவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பியான சிவாஜிலிங்கமும் அது நடந்து சில மணி நேரத்துக்குள் சமரசமானார்கள்.

சிவாஜிலிங்கம் தனது சிறந்த நண்பர் என்றும், அவர் சபாநாயகரை தாக்கப்போகின்றார் என்று நினைத்து அதைத் தடுக்கவே தான் ஓடிச்சென்றார் என்றும் இப்போது சப்புக் கட்டுக் காரணம் கூறுகிறார் மேர்வின் சில்வா.

அதை ஆமோதிப்பது போல தலையசைத்தார் சிவாஜிலிங்கம்.

நாடாளுமன்றத்தில் மோதிக்கொண்ட வில்லங்கமான இவ்விரு எம்.பிக்களிடமும் இருந்து மேலதிக தகவல்கள் எவற்றையாவது பெற்றுக் கொள்ளலாம் என அன்றைய தினம் நாடாளுமன்ற வளாகத்தில் அவர்களைத் தேடி இருவரையும் சுற்றிவளைத்த நாடாளுமன்ற செய்தியாளர்கள் "ப்பூ! இவ்வளவுதானா இவர்கள் மோதல்!" - என்று மனதுக்குள் விசனித்துக் கொண்டு - கலைந்துவிட்டனர்.

"அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா" என்கின்றனர் பார்வையாளர்கள். (க)

## உயர் தொழில்நுட்ப மாணவர்கள் மறியல்

கொழும்பு,ஓக.7

உயர்தொழில்நுட்பக் கணக்கியல் தேசிய டிப்ளோமா கற்கை நெறி மாணவர்கள் மட்டக்களப்பிலும், திருகோணமலையிலும் நேற்று ஆர்ப்பாட்டம் மற்றும் மறியல் போராட்டங்களை நடத்தினர்.

திருகோணமலையில் உட்துறைமுக வீதியிலும், மட்டக்களப்பின் மஞ்சத்தொடுவாயிலும் இந்த ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

தொழில்நுட்பக் கல்லூரியின் கற்கைநெறியை வர்த்தமானித் தரத்திற்கு ஏற்றுக்கொள் வதாக முன்னர் அரசாங்கம் அறிவித்திருந்தது.

எனினும் அரசு அதனை மறுக்கின்றது. அதே வேளை, அண்மையில் அரசினால் வழங்கப்பட்ட வேலைவாய்ப்புப் பட்டியலில் தேசியக் கணக்கியல் டிப்ளோமாதாரிகளுக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை.

இந்த விடயங்களைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. (க)

## இடைக்கால நிர்வாகம் குறித்து ஒக்ரோபரில் சபை விவாதம்

கொழும்பு,ஓக.7

விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனை தொடர்பான விவாதத்தை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதல் வாரத்தில் நாடாளுமன்றத்தில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் கட்சிகளின் தலைவர்களின் கூட்டம் சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார தலைமையில் நடைபெற்றபோது இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

ஜாதிக ஹெல உறுமயவினர் சபாநாயகரிடம் மேற்படி விடயம் தொடர்பாக விவாதமொன்றை நடத்துவதற்கு மூன்று தினங்களை ஒதுக்கித் தருமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

அக்கோரிக்கைக்கு அமையவே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது. எனினும், விவாதத்தை நடத்த எத்தனை தினங்கள் ஒதுக்குவது என்ற முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை.

நாடாளுமன்றம் எதிர்வரும் 17 ஆம் திகதி மீண்டும் கூடுகின்றது. (க)

## ஈழ அகதிகள் 15 பேர் தாயகம் திரும்பினர்

மன்னார்,ஓக.7

தமிழக அகதிமுகாம்களில் தங்கியிருந்த ஈழ அகதிகளில் 15 பேர் கடந்த புதன்கிழமை தாயகம் திரும்பியுள்ளனர். இவர்களைக் கைது செய்த கடற்படையினர் தலைமன்னார்ப் பொலீஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இவர்களை அழைத்து வந்த இந்திய மீனவர்கள் தலைமன்னார் கடற் பகுதியான உருவலையில் காணப்படும் மணற்திட்டிகளில் இறக்கி விட்டுச் சென்றுள்ளனர்.

இரவு 7 மணியளவில் கடற்படையினர் இவர்களை மீட்டனர். பின்னர் அவர்களைத் தலைமன்னார் பொலீஸில் ஒப்படைத்தனர்.

இந்தப் பயணத்தை மேற்கொள்வதற்காக இந்திய மீனவர்களுக்கு அகதிகள் ஒவ்வொருவரும் தலா இந்திய நாணயப் பெறுமதியில் ஆயிரம் ரூபா செலுத்தியுள்ளார்கள் என்று இராணுவத்தின் பாதுகாப்பு நிலைவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஓக.7

கோபிகா ஆடையகத்தின் ஆதரவில் பாலர் கல்விக்கழகத்தின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் 16 பாடசாலைகளுக்கிடையிலான 39ஆவது வருடாந்த விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு பாலர் கல்விக் கழகத் தலைவர் வ.கிருஸ்ணபிள்ளை தலைமையில் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் பிரதமவிருந்தினராகவும், யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாக உதவி நூலகர் ச.சண்முகதாசன், திருமதி சி.சண்முகதாசன் ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாகவும் கலந்துகொள்வர்.

நல்லூர் கோட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.செழியன் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வார். (10-201)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.7

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் சனசமூக நிலைய முன்பள்ளியின் விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நிலைய முன்றலில் நிலையத் தலைவர் மு.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் விருந்தினர்களாக, முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி லோ.யோகராஜா, தமிழர் புனர்வாழ்வுக்கழக யாழ். மாவட்டப் பணிப்பாளர் சு.ஜெயராஜ் உட்படப் பலர் கலந்துகொள்கின்றனர். (ஜ-15)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.7

நவாலி வடக்கு சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் கலைமகள் முன்பள்ளியின் விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நவாலி மகாவித்தியாலத்தில் நடைபெறும்.

எஸ்.சுதன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவின் பிரதமவிருந்தினராக மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்தலைவர் எஸ்.சிவராஜேஸ்வரன் கலந்துகொள்வார். (ஜ-15)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக7

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 49ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு மின்னொளி விளையாட்டுக் கழகத்தினால் யாழ். மாவட்ட ரீதியிலான மரதன் ஓட்டம் மற்றும் சைக்கிள் ஓட்டப் போட்டிகள் முறையே எதிர்வரும் 11ஆம், 12ஆம் திகதிகளில் நடத்தப்படவுள்ளன. (10-201)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.7

வடக்கு - கிழக்கு மாகாண முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தின் தெல்லிப்பழை பிரதேச விளையாட்டுவிழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு தெல்லிப்பழைப் பிரதேச முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத் தலைவர் செ.நம்பியாரூரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்டத் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் சு.ஜெயராஜ் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

யாழ். அருணோதயாக் கல்லூரியின் உப அதிபர் வி.சிவராசா, யாழ். மாவட்ட முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத் தலைவர் சி.சிவனேயன், வலி.வடக்கு சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.செல்வவிநாயகம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும்,

வலிவடக்கு, அரசியல்துறைப்பொறுப்பாளர் ஈ.சரவணபவன், வலிகாமம் வலய இணைப்பாளர் யோ.கேமநளினி, வலி.தென்மேற்குப் பிரதேச இணைப்பாளர் கா.சந்திரவதனா, ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (10-201)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக07

அமரர் தம்பிஐயா ஸ்ரீரங்கன் ஞாபகார்த்தமாக கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கலாசாரக் கழகம் நடத்திவரும் யாழ்.மாவட்டரீதியிலான மாபெரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டமும், பரிசளிப்பும் இன்று சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு நடைபெறும்.

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் உ.சுரேஸ்காந் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதமவிருந்தினராக இளைப் பாறிய அதிபரும், முன்னாள் கூடைப்பந்தாட்ட பயிற்சியாளருமான வீசோமசுந்தரம் கலந்துகொள்வார்.

இறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ் வி.க. அணியும் யாழ். பல்கலைக்கழக அணியும் மோதுகின்றன. (ஜ-15)

★ ★ ★

வலி.வடக்கு,ஓக.7

அமரர் தம்பிராசா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் கால் இறுதி ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அளவெட்டி அருணோதையாக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளன.

ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

நவாலி சென். பீற்றர்ஸ் வி.க. எதிர் தாவடி காளியம்பாள் வி.க.

அளவெட்டி விநாயகர் எதிர் காந்தி நியூஸ்ரார் வி.கழகம். (10-86)

★ ★ ★

இலங்கை வங்கி, வர்த்தக வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் நடத்தும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு சுதுமலை நாவலர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் கலந்துகொள்ளும் அணிகளின் விவரம் வருமாறு:

☆ மானிப்பாய் ஆனந்தா வி.க. எதிர் கைதடி உதயசூரியன் வி.க.

☆ நாவாந்துறை தென்றல் வி.க. எதிர் உடுவில் ஆலடி சிந்து வி.க. (10-86)

★ ★ ★

கந்தரோடை ஸ்ரீ சுப்பிரமணிய வாசிகசாலை சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கிவரும் முன்பள்ளி பாடசாலையின் விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நிலையத் தலைவர் அ.தற்பரானந்தன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் வலிகாமம் தெற்கு பிரதேச சபை செயலாளர் திருமதி ச. சொக்கலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (152)

உதயன்

## அனுராவின் பிதற்றல்

இலங்கை அரசியலில் 'ஆயா ராம், காயா ராம்' கணக்கில் அடிக்கடி கட்சி மாறும் அரசியல்வாதிகள் என்றால் இரண்டுபேரின் பெயர்கள் நினைவுக்கு வரும். ஒருவர்- பண்டாரநாயக்க தம்பதியினரின் வாரிசான அனுரா பண்டாரநாயக்க. மற்றவர் முன்னாள் அமைச்சர் றொனி டிமெல்.

இவர்களில் அடிக்கடி கட்சியை மாற்றுவதில் மட்டுமல்ல கருத்தை மாற்றுவதிலும் புகழ்பெற்றவர் அனுரா பண்டாரநாயக்க.

கருணா விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் அவர் கிளப்பிய சர்ச்சையும் அது சம்பந்தமாக அவர் வெளியிட்ட கருத்துக்களும் மீண்டும் ஒரு தடவை அவரது குணாம்சங்களை உறுதிப்படுத்தியிருக்கின்றன.

கருணா விவகாரம் தொடர்பாகத் தம்மைச் சம்பந்தப்படுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. சிவாஜிலிங்கம் வெளியிட்ட தகவல் தவறானது என அனுரா நாடாளுமன்றத்தில் கிளப்பிய சர்ச்சை பிழையானது என்று கூற நாம் முன்வரவில்லை. அப்படி விளக்கம் கொடுப்பதும் தமக்கு எதிரான குற்றச்சாட்டு தப்பு என்று மறுப்பதும் அவருக்கு உள்ள உரிமைகள். ஆனால், அப்படி மறுக்கும்போது அவர் வெளியிட்ட சில கருத்துக்கள்தான் தப்பானவை; பொருத்தமற்றவை.

யாழ்.மாவட்ட மக்கள் இரண்டாவது தடவையும் தமது நாடாளுமன்ற உறுப்பினராக சிவாஜிலிங்கத்தை தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கின்றார்கள். அவரை விபத்தினால் கூட்டமைப்புக்குள் வந்தவர் என்று கூறுவதற்கு அனுராவுக்கு என்ன அருகதை உண்டு? அனுராவுக்கு இந்த வாரிசு அரசியல் உரிமை விபத்தினால் வந்தது என்ற சாரப்பட அவரது மாமாவும் முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சருமான ஜெனரல் ரத்வத்தை சிலகாலத்துக்கு முன்னர் பகிரங்கமாக கூறிவந்தார் என்பதை அவர் மறந்திருக்கமாட்டார். எனவே, விபத்தினால் வந்த தமது நிலையில் வைத்து இது விடயமாக சிவாஜிலிங்கம் மீது தாம் சுமத்தும் குற்றச்சாட்டை அவர் நோக்குவது நல்லது.

அனுரா பழைய கதைகளை விரைவாக மறந்து விடுவார் போலும்.

மூன்று மாதங்களுக்கு முன்னர் இதே நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் பேசவிழைந்தபோது 'புலிப் பயங்கரவாதி' என்று கூக்குரலிட்ட அரசுத் தரப்பினரில் அமைச்சர் அனுராவும் முக்கியமானவர்.

இப்போது சிவாஜிலிங்கத்தைத் தூற்றும்போது சம்பந்தர், பரராஜசிங்கம் போன்ற கூட்டமைப்பு எம்.பிக்களை அவர் புகழுகின்றார்.

அது மட்டுமல்ல, மூத்த நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் சபாநாயகரும் சிரேஷ்ட அமைச்சருமான அவர், சம்பந்தர் பேசும்போது 'புலிப் பயங்கரவாதி' என்று கூக்குரலிட்டுக் குழப்பிவிட்டு இப்போது இந்த ஒழுங்கீனமான நாடாளுமன்றத்தில் அமர்வதற்கு தாம் வெட்கமடைகின்றார் எனப் 'போதி மாதவன்' போல தத்துவம் பேசுகின்றார்.

''இது நாடாளுமன்றம்; வன்னிக்காடு அல்ல!'' என்றும் தமிழ்க்கூட்டமைப்பு எம்.பிக்களைப் பார்த்துக் கூச்சலிடுகின்றார் அவர்.

எண்பதுகளின் கடைசியில் ஜனாதிபதித் தேர்தலில் தனது தாயாரை வெல்லச் செய்வதற்கும் நாடாளுமன்றத் தேர்தலில் அப்போதுதான் சார்ந்திருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு வெற்றி வாய்ப்பை பெற்றுத் தருவதற்காகவும் பின்னாளில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக வந்த தமது மாமனார் அனுருத்த ரத்வத்தையையும் கூட்டிக்கொண்டு மாமனிதர்குமார் பொன்னம்பலத்தின் துணையோடு வன்னிக்காட்டுக்குச் சென்று தலைவர் பிரபாவின் பிரதிநிதிகளைச் சந்திக்க காத்துத் தவம்கிடந்ததை அனுரா மறந்திருக்கமாட்டார்.

இலங்கை நாடாளுமன்றத்தின் புகழ் அண்மைக்காலத்தில் கொடிகட்டிப் பறக்கிறது. விடுதலை வேள்வி பரிணமித்த - பரிமளித்த - வன்னிக்காடு அந்த நாடாளுமன்றத்துடன் ஒப்பிடக்கிஞ்சித்தும் பொருத்தமற்றது என்ற அனுராவின் கூற்று ஏற்புடையதே .

1980 ஒக்டோபர் 16 ஆம் திகதி இலங்கை நாடாளுமன்றத்தில் இதே அனுராவின் தாயார் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடியுரிமையைப் பறிக்கும் பிரேரணை நிறைவேற்றப்பட்டபோது இடம்பெற்ற சம்பவங்களை அனுரா மறந்திருக்கமாட்டார்.

168 பேரைக் கொண்ட அந்த நாடாளுமன்றத்தில் ஆளும் ஐ.தே.க.கட்சிக்கு 140 இடங்கள். இரண்டாவது பெரிய கட்சியாக 18 ஆசனங்களுடன் தமிழர் விடுதலைக் கூட்டணி. சிறிமாவோ, அனுரா ஆகியோர் உட்பட ஆக 8 பேரே சுதந்திரக் கட்சியினர்.

பிரேரணை நிறைவேறி எம்.பி. பதவியை இழந்து, சபையைவிட்டு வெளியேற முற்பட்ட தாயார் சிறிமாவோவுக்கு ஆக்ரோஷமாகவிருந்த ஆளும் கட்சிச் சண்டியர்களால் நேரவிருந்த அவலத்தையும், அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் மற்றும் இரா.சம்பந்தர், வீ.சிவசிதம்பரம் போன்ற தமிழ்த் தலைவர்கள் சுற்றிவரக் கைகோர்த்து நின்று ஆளும்தரப்பினரின் கைகூட, இந்த நாட்டின் மிகப் பிரபலமான அந்த மாதுவின் உடலைத் தீண்டாமல் பாதுகாப்பாக வெளியே கூட்டிவந்து சேர்த்ததையும் அனுரா நேரில் கண்டிருப்பார்; அதை மறந்திருக்க மாட்டார்.

அப்படித் தனது தாயாரின் மானம் காத்தவர்களுள் ஒருவரான இரா. சம்பந்தரைப் பார்த்துத்தான் சில மாதங்களுக்கு முன்னர் சபையில் 'புலிப் பயங்கரவாதி' என்று கூச்சலிட்டார் அனுரா.

இந்த நாட்டின் மிகவும் உயர்ந்த அரசியல் பாரம்பரியம்மிக்க குடும்பத்தின் வாரிசு அனுரா. அதை அவர் நிரூபிக்க வேண்டுமானால் - 'தப்புத்தாளம்' என்று அவரது மாமனார் அவரை முன்னர் விமர்சித்ததை பொய்யாக்க வேண்டுமானால் - 'அரசியல் கோமாளி' என்ற பட்டம் தன்னை எட்டாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமானால் - தமது வாயை! அவர் அடக்கி, அரசியல் நாகரிகத்தோடு - கண்ணியத்தோடு நடந்துகொள்வது அவசியமாகும்.

# தீவுப்பகுதிக்கு 24 மணிநேர மின் விநியோகம் வழங்கும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துக!

### ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் மின்சாரசபைக்குக் கடிதம்

கொக்குவில்,ஒக.7

தீவுப்பகுதிக்கு 24 மணி நேரம் மின்வழங்கும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமாறு இலங்கை மின்சாரசபையின் வடபிராந்தியப் பிரதிப் பொது முகாமையாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ் செல்வநாயகம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார். இதுவிடயமாக, மின்சாரசபையின் பிரதிப் பொது முகாமையாளருக்குக் கடிதம் ஒன்றையும் உதவி அரச அதிபர் அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் தீவகப் பிரதேசத்திலும் 24 மணிநேர மின் விநியோகம் இடம்பெற்று வந்தது. இதன் மூலம் பல்வேறு தொழில் முயற்சிகள், தொழில் நிறுவனங்கள், வைத்தியசாலைகள் அரச நிறுவனங்கள், தொழிற் பயிற்சிப் பாடசாலைகள் போன்றவை சீராகவும் சிறப்பாகவும் மக்களின் தேவைகளை நிறைவேற்றி வந்துள்ளன. எனினும் 1990 ஆம் ஆண்டிற்குப் பின்னர் தீவகத்தில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையினால் இடப்பெயர்வுகள் ஏற்பட்டு தீவுப்பகுதி சீரழிக்கப்பட்டது.

1996 ஆம் ஆண்டிலிருந்து மீளக்குடியமர்வு ஆரம்பிக்கப்பட்டது. தற்போது மக்கள் தங்கள் சொந்த இடங்களை, வீடுகளை புனரமைப்புச் செய்து மீளக்குடியமர்ந்து வருகின்றனர்.

மக்களின் சேவைகளுக்கான அரச அலுவலகங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்கள், பொது ஸ்தாபனங்கள் முழுமையாகத் தொழிற்பட்டு வருவதோடு கணனிமயத் தொழிற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன. குளிரூட்டிகள் இருந்தும் வைத்தியசாலையில் சில மருந்துகளை குளிரூட்டியில் வைக்க முடியாத நிலையில் அவற்றை யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டுவர வேண்டியுள்ளது. சில வேளைகளில் மருந்து ஏற்றுவதற்காக நோயாளிகளை யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்ப வேண்டிய நிலையும் உள்ளது.

தீவுப்பகுதிக்கு 24 மணிநேர மின்சாரத்தை வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச அதிபர் மூலமாகவும் தங்கள் சபையிடம் பல கோரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்தன. எனினும், அதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் இன்றுவரை மேற்கொள்ளப்படவில்லை.

எனவே, தீவகப்பிரதேசத்தில் தற்போது பெரும் எண்ணிக்கையானோர் மீளக்குடியமர்ந்து வருவதால் மக்களின் அபிலாஷைகளை - வசதிகளை - தேவைகளை - சேவைகளை நிறைவேற்று முகமாக 24 மணிநேர மின்சார விநியோகத்தினை வழங்குவதற்கான ஏற்பாடுகளை தாங்கள் மேற்கொண்டு கூடிய விரைவில் 24 மணிநேர மின் கிடைக்க ஆவன செய்யவேண்டும் என்றும் - இது தீவகப் பிரதேசத்தின் முழுமையான மீள்க்குடியமர்விற்கும் தொழில் வாய்ப்புகளுக்கும் வழியேற்படுத்தும் என்று குறிப்பிட விரும்புகிறேன். என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-76)

# அரசின் அனுமதியுடனேயே உலகவங்கி வடக்கு -கிழக்கில் அபிவிருத்தி மேற்கொள்கிறது

### இலங்கைக்கான பணிப்பாளர் பீற்றர் ஹரோல்ட் தெரிவிப்பு

கொழும்பு,ஒக.7

இலங்கை அரசாங்கத்தின் பூரண அனுமதியுடனேயே வடக்கு - கிழக்கு மாகாணங்களில் சகல செயற் திட்டங்களையும் உலக வங்கி மேற்கொண்டு வருகின்றது.

இவ்வாறு உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் பீற்றர் ஹரோல்ட் தெரிவித்துள்ளார்.

தேசப்பற்றுள்ள தேசிய அமைப்பினருக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு - கிழக்கு மாகாண அபிவிருத்திப் பணிகளுக்காக மனிதாபிமான ரீதியில் நிதியுதவிகள் வழங்குதல் மற்றும் அந்தப் பிரதேசங்களில் அமைதியான சூழ்நிலையை மேலும் தக்க வைத்துக் கொள்ளும் நோக்குடன் உலக வங்கி அபிவிருத்தி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

இது தொடர்பாக தேசப்பற்றுள்ள தேசிய அமைப்பாளருக்கு ஏதாவது நெருக்கடி இருப்பின் செயற்றிட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் பெற்றுக்கொடுக்கப்படும்.

உலக வங்கிக்கும் புலிகளுக்கும் இடையே நடைபெறுகின்ற எந்த ஒரு சந்திப்பும் அரசாங்கத்தின் அனுமதியுடனேயே நடைபெறுகின்றது - என்றுள்ளது.

உலக வங்கியின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக 2003 ஆம் ஆண்டு 2006 ஆம் ஆண்டுக்கான அறிக்கையின் பிரதி ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் விதிகளை மீறியிருப்பதாக தேசப்பற்றுள்ள தேசிய அமைப்பு சுமத்துகின்ற குற்றச்சாட்டு அடிப்படை அற்றது என்றும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8-7-9)

### வவுனியாவில் நடேசன் நினைவுக் கருத்தரங்கு

நாட்டுப பற்றாளரும் மூத்த ஊடகவியலாளருமான ஐ.நடேசனின் நினைவாக 'ஸ்ரீலங்கா ஊடகத்துறையும் இனப்பிரச்சினையின் இன்றைய நிலையும்' என்னும் தலைப்பில் கருத்துரையும் கருத்துப் பகிர்வும் இன்று பிற்பகல் 3 மணிக்கு வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளன. கனேடிய தமிழ் வானொலியின் அனுசரணையுடன் வவுனியா மாவட்ட ஏற்பாட்டுக் குழு இந்த நிகழ்வை ஒழுங்கு செய்துள்ளது. (ஐ-3-201)

### சிறந்த அஞ்சலர் தெரிவுப்போட்டி

உலக அஞ்சல் தினம் ஒக்டோபர் 9 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது. இத்தினத்தை முன்னிட்டு அஞ்சலகங்களில் கடமையாற்றும் அலுவலர்களுக்கிடையிலான சிறந்த அலுவலர் தெரிவுக்கான போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது. அஞ்சல் திணைக்களம் இதற்கான ஏற்பாட்டினைச் செய்துள்ளது.

அஞ்சல் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்டத்தில் உள்ள அஞ்சலகங்களில் இருந்து சிறந்த அஞ்சலதிபர், அஞ்சலகர், சிறந்த உப அஞ்சலதிபர், சிறந்த தந்தித் தூதுவர்கள், சிறந்த தபாலோட்டிகள் தெரிவுசெய்யப்படுவர். இவ்வாறு தெரிவு செய்யப்படுபவர்களின விவரங்கள் கொழும்பில் உள்ள அஞ்சல் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

அகில இலங்கை ரீதியில் கிடைக்கும் முடிவுக்கமைய முதலிடம் பெறுபவர்களுக்கு பணப் பரிசில், சான்றிதழ் என்பன அஞ்சல் திணைக்களத்தினால் வழங்கப்படும். (எ-6)

# மாவட்ட தமிழ்த்தினப் போட்டிகள் இன்றும் நாளையும் நடைபெறும்

வலி.தெற்கு ஒக.7

யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்மொழித் தினப் போட்டிகள் இன்று சனிககிழமையும் நாளை ஞாயிற்றுககிழமையும் நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள தீவகம், வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், யாழ்ப்பாணம் ஆகிய வலயங்களுக்கிடையே இடம்பெற்ற போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவ, மாணவிகள் மாவட்ட மட்டப் போட்டிகளில் பங்குபற்ற உள்ளனர்.

யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர் மடம், வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, யாழ். மத்திய கல்லூரி ஆகிய இடங்களில் இந்தப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

போட்டிகளும் அவை இடம்பெறும் பாடசாலைகள் பற்றிய விவரங்களும் வருமாறு:-

**இன்று**

★ திருக்குடும்ப கன்னியர்மடம்

வாசிபபு பிரிவு I ,II ஆக்கதிறன் வெளிப்பாடு பிரிவு I, பேச்சு பிரிவு I,II, III,IV,V பாவோதல் - பிரிவு I,II,III, IV,V நடனம் குழு I, நடனம் குழு II, நாட்டிய நாடகம்

★ வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை

இசை தனி - பிரிவு II,III,IV,V நடனம் தனி - பிரிவு I,II,III,IV,V இசையும் அசைவும் - பிரிவு I, தமிழறிவு - வினாடி விடைப் போட்டி

★ யாழ். மத்திய கல்லூரி

வில்லுப்பாட்டு, வடமோடி நாட்டுக் கூத்து, தென்மோடி நாட்டுக்கூத்து

**நாளை**

★ திருக்குடும்பக் கன்னியர்மடம்

சிந்துநடைக்கூத்து, இசை நாடகம், விசேட கூத்து, பிரதேச வாரிக்கூத்து

★ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

இசைக்குழு I, குழு II, விவாதம் .

★ யாழ்.மத்திய கல்லூரி

நாடகம், முஸ்லிம் நிகழ்ச்சிகள். (8-6-7-152)

### சங்கிலியன் மாதர் சங்க ஆண்டு விழாப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஒக.7

நல்லூர் சங்கிலியன் மன்றத்தின் மாதர் சங்கத்தின் முதலாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விளையாட்டுப் போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிமுதல் நடைபெறவுள்ளன.

நல்லூர் திவ்யஜீவன சங்க முன்றலில் போட்டிகள் நடைபெறும். மாதர் சங்கத்தின் தலைவி சி.ஸ்ரீமனோகரி நிகழ்ச்சிக்குத் தலைமை வகிப்பார்.

பிரதம விருந்தினராக யாழ். மாநகர சபையின் முன்னாள் ஆணையாளர் சீ.வி.க. சிவஞானமும் சிறப்பு விருந்தினர்களாக சங்கிலியன் சனசமூக நிலையக் காப்பாளர் பி.ரஜிந்திரன், நல்லூர் கோட்டக் கல்விப் பிரிவுப் பொறுப்பாளர் பூமகள், ஆசிரியா சத்தியபாலன் ஆகியோரும் கலந்துகொள்ள வர். (ஐ)

**நாளை**

ஆடி 24
ஞாயிற்றுக்கிழமை
(08.08.2004)
திதி : அட்டமி
முன்னிரவு 7.55 வரை.
நட்சத்திரம் : பரணி
பிற்பகல் 5.13 வரை.
சுபநேரம்: 9.04 - 10.34
ராகுகாலம்: 4.34 - 6.04
(பழைய நேரப்படி)

# நவாலியூர் சோமசுந்தரப்புலவரின் உருவச்சிலை புதனன்று திரை நீக்கம்

யாழ்ப்பாணம்,ஒக.7



நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் உருவச்சிலை திரை நீக்கம் எதிர்வரும் 11ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிக்கு நவாலி மகாவித்தியாலயத்தில் அதிபர் பு.ஸ்ரீவிக்கினேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் புலவரின் உருவச் சிலையைத் திரைநீக்கம் செய்துவைக்கவுள்ளார். வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் ஆசியுரை வழங்குவார்.

பலாலி ஆசிரிய கலாசாலையின் முன்னாள் அதிபர் சோ.பத்மநாதன் புலவரின் புலமைபற்றியும், யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் புலவரின் தமிழ்ப் பணியின் தகைமை பற்றியும், யாழ். வர்த்தக வங்கியின் முகாமையாளர் எஸ்.ரவீந்திரா மேற்படி வித்தியாலயத்தின் வாழ்வு பற்றியும் உரைகளை நிகழ்த்தவுள்ளனர்.

யாழ்.மாவட்டக் கல்விக்கழகப் பொறுப்பாளர் க.ஆர்வலனின் நயப்புரையும் இடம்பெறும்.

தொடர்ந்து, வித்தியாலய மாணவர்களின் கலைநிகழ்வுகள் இடம்பெறும்.

நவாலியூர் சோமசுந்தரப்புலவரின் உருவச்சிலையை வடிவமைத்த சிற்பக்கலைஞர் நவாலியூர் தில்லைநாதன் சந்திரகுமார் (சந்திரன்) அவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறும். (10-201-100-135-152)

**உதயவாக்கு**

அழகு என்பது சிறிது காலத்துககே உள்ளது. அன்பு என்பது நீண்ட காலத்துக்கு இருக்கும்.

## கண்ணீர் அஞ்சலிகள்

எமது சக மாணவி ஸ்ரெல்லா சிவஜாவின் அன்புத்
தாயார்

### திருமதி சிவந்தா ராணிமலர்

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

16 ஆம் அணி மாணவர்கள்,
விவசாய பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(34987)(29-12-15)


## STUDY IN INDIA

**Engineering, Medicine & Pharamedical**
**ADMISSIONS 2004 - 05**
**VINAYAKA MISSIONS' GROUP OF COLLEGES**
www.vinayakamissions.com

Vinayaka Missions is the leader in the field of education for more than two decades running totally 25 Educational Institutions imparting Medical, Engineering, Management and Computer education, in addition to various other courses.

**A.V. INSTITUTE OF TECHNOLOGY (A.V. I. T)**
(Approved by AICTE, New Delhi, Affiliated to Anna University)
Paiyanoor, Chennai, TAMIL NADU

**B.Eng** - 4 Years
* Electronics & Communication Engineering (ECE)
* Electrical & Electronics Engineering (EEE)
* Computer Science & Engineering (CSE)
* Mechanical Engineering (Mech)

Req. Pass in Maths, Physics & Chemistry at GCE A'Level.

**V.M College of Pharmacy, Salem, TAMIL NADU**
(Affiliated to Tamilnadu Dr.MGR Medical University)

**B.Pharm** - Bachelor of Pharmacy - 4 Years

Req. Pass in Biology, Physics & Chemistry at GCE A'Level.

Other under graduate courses available in
* Homeopathy & Surgery (BHMS)
* Physiotherapy (BPT)
* Optometry (B.Opto)
* B.Sc Nursing

*Contact for more details:-*
**NN EDUCONSULT**
181/1W.A.Silva Mawatha, Colombo-06.
Tel: 011 - 555 88 33 Fax: 011 - 555 88 44
E-mail: nnconsult@sltnet.lk



Jayoda **ஜயோதா** ජයෝද

### உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7307723 முதல் 7320037 வரை
சீட்டிழுப்பு இல. 56 திகதி 05-08-2004

வெற்றி எண்கள் **9 7 7 2 6 7** சுப்பர் எண் **03**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,44,91,025/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,44,91,025/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 10 | 50,000/- | 5,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 109 | 5,000/- | 5,45,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,079 | 500/- | 5,39,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,777 | 50/- | 5,38,850/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 1,06,817 | 10/- | 10,68,170/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 11 | 5,000/- | 55,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 106 | 1,000/- | 1,06,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,076 | 100/- | 1,07,600/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,685 | 20/- | 2,13,700/- |
| மொத்தம் | 1,30,672 | | 56,73,820/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 56,73,820/-

இந்த திங்கட்கிழமைக்கான
சுப்பர் ஜக்பொட்
ரூ. **1,47,90,725/-**

தொடர் இல. 6346544 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 ஆகஸ்ட் 09 ஆம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

ஜயோதா சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் வீட்டுப் பாவனைப் பொருட்களை வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

**7310246-3-92**
**7316280-8-88**
**7315525-4-13**
**7318874-2-80**
**7311828-4-45**

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.


## புலமைப் பரிசில் மாணவருக்கு விசேட கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம்,ஓக.7

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான இறுதி மாதிரிப் பரீட்சையும் கருத்தரங்கு நிகழ்வும் இன்று காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நல்லூர் சயன்ஸ் அக்கடமியில் நடைபெறவுள்ளன. (எ-201)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஓக.7

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான இறுதிக் கருத்தரங்கும், விசேட முன்னோடிப் பரீட்சையும் இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை ஆனைப்பந்தி நாவலர் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளன.

(எ-201)

### கார்ச் சாரதி தேவை

உடன் சாரதி தேவை. நேரில் வரவும்.
தொடர்பு: 55, 57, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (34980)

### தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

**விண்ணப்பத் திகதி நீடிப்பு**

தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கத்தின் பொதுமுகாமையாளர் பதவி வெற்றிடம் நிரப்பல் தொடர்பான விளம்பரத்தில் விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 15.08.2004 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

தலைவர்:
தென் கிழக்கு
ப.நோ.கூ.சங்கம்.
கொடிகாமம் (C/36455)

### பெண் ஆசிரியர் தேவை

கணனிப் பயிற்சியில் ஆரம்பக் கல்வியைக் கற்றுக்கொடுக்கக் கூடிய பெண் ஆசிரியர் தேவை. (M.S.Office) நேரில் வரவும்.

சரவண அச்சகம்,
ஆஸ்பத்திரி வீதி,
C.S.K. சந்தி, யாழ்ப்பாணம். T.P. 0777 298844

## கண்ணீர் அஞ்சலி

எமது பீட மாணவி
செல்வி சி.ஸ்ரெல்லா சிவஜா
அவர்களின் பாசமிகு தாயார்
திருமதி
**சிவந்தா ராணிமலர்**
அவர்களின் திடீர்மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மாணவர் ஒன்றியம் விவசாய பீடம்.
யாழ்.பல்கலைக்கழகம்.

(சி/36456)(29-12-15)

## துயர் பகிர்கின்றோம்

அமரர் உயர் திரு.
**சண்முகம் விஜயரத்தினம்**
(இளைப்பாறிய சிரேஷ்ட பெரும்பாக உத்தியோகத்தர், கமநல சேவைகள் திணைக்களம)



அவர்கள் இயற்கை எய்தியமையையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து அன்னாரின பிரிவினால் துயருறும் துணைவியாரின தும, உறவினர் மற்றும் நண்பர்களினதும் துயரில் பங்கேற்கின்றோம்.

உதவி ஆணையாளரும்
உத்தியோகத்தர்களும்.
கமநல அபிவிருத்தித் திணைக்களம்,
யாழ்.மாவட்டம்.

உதவிப் பணிப்பாளரும்
உத்தியோகத்தர்களும்,
கமத்தொழில் மற்றும்
கமநல காப்புறுதிச்சபை,
யாழ்ப்பாணம்

(C/36459)(43)

## கண்ணீர் அஞ்சலி

திருமதி உ.ஜெயகாந்தனின் புதல்வி

### செல்வி ஜனனி ஜெயகாந்தன்

அவர்களின் திடீர் மறைவையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,
சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை,
சாவகச்சேரி.

(34982)(29-12-15)

## முதலாமாண்டு நினைவஞ்சலி

| உதயம் | | அஸ்தமனம் |
|---|---|---|
| 02 | | 20 |
| 01 | | 07 |
| 1957 | | 2003 |



திதி: 07.08.2004

### திருமதி பரமேஸ்வரி சூரியகுமார்

(கிளிரிச்சர் - சாந்தநாயகி வித்தியாசாலை -மட்டுவில்)

*ஆண்டொன்று சென்றாலும்*
*உங்களுடன் நாம் வாழ்ந்த*
*காலங்கள் என்றும் பசுமையாக உள்ளதம்மா!*

'மணியம்வளவு'
தாமோதரம்பிள்ளை வீதி,
சாவகச்சேரி.

கணவர்
சகோதரி, பெறாமக்கள்.

(34968)(40-12-17)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அனந்தி விஜிதரன்



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி அனந்தி விஜிதரன் 30.07.2004 வெள்ளிக்கிழமை லண்டனில் அகாலமரணமானார்.

அன்னார் விஜிதரனின் அன்பு மனைவியும் கஜானனின் பாசமிகு தாயாரும் செல்வரத்தினம் - கமலாதேவி தம்பதிகளின் அன்புப் புதல்வியும் ரவி (பிரான்ஸ்), நகுலா (ஜேர்மனி), காஜினி (ஜேர்மனி), கணேசன் (பிரான்ஸ்), அகிலா (பிரான்ஸ்), அஜந்தா (ஜேர்மனி), சோபனா, கோமலா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஸ்ரீதாஸ், ஞானவடிவேல், ஜெயசீலன், தர்மானந்தன், சிவமதி, துஷ்யந்தி, சாந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஸ்ரீசங்கர், ஸ்ரீசாரங்கன், ஸ்ரீசாத்வீகன், ஞானலினி ஞாலஜன், ஞாலக்ஷன், ஜெயசங்கரி, ஜதுசன், அபிநயா ஆகியோரின் அன்புச் சித்தியும் மதுராகவனின் அன்பு அத்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் இன்று (07.08.2004) சனிக்கிழமை லண்டனில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இணுவில் மேற்கு,*
*இணுவில்.*

தகவல்:
ந.செல்வரத்தினம்
(தகப்பன்).

(34979)(29-12-15)

### திருமதி மகேஸ்வரி சண்முகரத்தினம்

(முன்னாள் ஆசிரியை, யாழ்.நாவலர் மகா வித்தியாலயம்)

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட மகேஸ்வரி சண்முகரத்தினம் அவர்கள் வியாழக்கிழமை (05.08.2004) காலமானார்.



அன்னார் காலஞ்சென்றவர்களான மட்டுவில் உரையாசிரியரும் பண்டிதர் ம.வே. திருஞானசம்பந்தர், தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியும் திரு.வீ.சண்முகரத்தினம் (முன்னாள் ஆசிரியர், கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலை) அவர்களின் அன்பு மனைவியும சிவகுமாரன் (முன்னாள் ஆசிரியர் யாழ். பரியோவான் கல்லூரி, ஆசிரியர் சைவ மங்கையர் கழகம்-கொழும்பு ) அவர்களின் அன்புத் தாயாரும் வேதவதியின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான வைரவசுந்தரம், திருமதி மனோன்மணி முத்துத்தம்பி (முனனாள் ஆசிரியை, யாழ் இந்து மகளிர் கல்லூரி) மற்றும் திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு (முன்னாள் அதிபர், நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை) ஆகியோரின அன்புச் சகோதரியும் சிவரமணன, சிவப்பிரியா ஆகியோரின் அனபுப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.08.2004) சனிக்கிழமை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் 11 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'சிவகிரி'*
*மாரியம்மன் வீதி,*
*திருநெல்வேலி.*

தகவல்:
வீ.சண்முகரத்தினம்
(கணவர்).

(34985)(29-12-15)

### சோமலிங்கம் சபாபதி

அனலைதீவு, 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோமலிங்கம் சபாபதி அவர்கள் நேற்று (06.08.2004) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமலிங்கம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் பார்வதியின் அன்புக் கணவரும் அமரர் கமலாம்பிகை மற்றும் விஜயலட்சுமி (அனலைதீவு), சுந்தராம்பாள் (கனடா), பவானி (அல்லைப்பிட்டி), சிவராசா (அனலைதீவு), சாரதா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அமரர் சிதம்பரப்பிள்ளை நடராசா (அனலைதீவு), சண்முகநாதன் (கனடா), மகேஸ்வரன் (அல்லைப்பிட்டி), யோகராணி (அனலைதீவு), கருணா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.08.2004) சனிக்கிழமை 3 மணியளவில் அல்லைப்பிட்டியில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்லைப்பிட்டி இந்து மாயனத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*1 ஆம் வட்டாரம்,*
*அல்லைப்பிட்டி.*

தகவல்:
ந.மகேஸ்வரன்
(மருமகன்).

(34984)(29-12-15)

# நூல் வரிசை

ஆசிரிய அனுபவம், ஆசிரியர்களைப் பயிற்றும் அனுபவம் என்பவற்றோடு, கல்வியியல் துறையில் முதுமாணிப் (M.Ed.) பட்டமும் பெற்ற செல்வி மலர் சின்னையா - நான்காம், வாசித்தல், எழுதுதல் என்பவற்றின் படிமுறைக கிரமங்களை நூலாசிரியை என்னுரை வாயிலாக நன்கு வெளிப்படுத்தியுள்ளமை பாராட்டத்தக்கது. மாணவர்களுக்கேற்ற சொற்கவர்ச்சியும் சுவை

நூல்: மலரின் கட்டுரை
ஆசிரியா: மலர் சின்னையா
அச்சுப்பதிப்பு: கங்கை பிறின்டேர்ஸ், யாழ்ப்பாணம்.



யும் பல கட்டுரைகளில் அமைந்திருக்கின்றன என்ற உண்மையை எடுத்துக்கூறி இத்தகைய ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கென எழுதிய தமிழ்க் கட்டுரை நூல் கண்டு உவகையுற்றேன்.

இவருக்கு இத்தகைய நூல்களை எழுதுவதற்கான தமிழறிவு, பாட அறிவு, பிள்ளைகளின் உளவியல் சார்ந்த அறிவு, எழுத்தாற்றல் என்பன போதியளவு அமைந்துள்ளமைக்கு இந்நூல நல்லதோர் எடுத்துக்காட்டு என்பேன்.

பல வழிகாட்டி நூல்களை எதிர்காலத்தில் வெளிப்படுத்தித் தமிழ் மாணவர்களின் அறிவையும் ஆற்றலையும் வளர்க்க வேண்டும் என்று செல்வி மலர் சின்னையாவை வேண்டி அவர் முயற்சியை வாழ்த்துகிறேன்.

**- சொக்கன்.**

---

பிரம்மஸ்ரீ ப.சிவானந்தசர்மா (கோப்பாய் சிவம்) எழுதிய 'இதுதான் இந்து மதம்', 'அருள் வழங்கும் மாரியம்மன்' ஆகிய இரண்டு நூல்கள் அண்மையில் வெளியீடு செய்யப்பட்டுள்ளன.

இந்து சமய தத்துவங்கள், நெறிமுறைகள், ஒழுக்கநெறிகள் என்பவற்றை விளக்கும் நூலாக 'இதுதான் இந்து மதம்' என்ற நூல் அமைந்துள்ளது.

நூல்: இதுதான் இந்து மதம்
ஆசிரியர்: ப.சிவானந்தசர்மா (கோப்பாய் சிவம்)
வெளியீடு: சர்வானந்தமய பீடம், இணுவில்.



இந்து சமயத்தின் வரலாறு அதன் மரபுகள, மறுமலர்ச்சி என்பவற்றைத் தமது 13 கட்டுரைகளிலும் விளக்கிக் கூறியுள்ள ஆசிரியர், ஒவ்வொரு இந்து சமயத்தவரும் எவ்வாறு ஒரு இந்துவாக வாழவேண்டும் - சமய ஒழுக்கத்தைப் பின்பற்ற வேண்டும் என்பதைக் கோடிட்டு காட்டியுள்ளார்.

வெளிநாடுகளைச் சேர்ந்த பிற சமயத்தவர்கள் இந்து சமய உண்மைகளைப் புரிந்துகொண்டு அதனைக் கடைப்பிடிக்க முன்வருகின்ற இன்றைய காலத்தில் எமது சமயத்தவர்கள் ஏன் மதம் மாற விரும்புகிறார்கள் என்பதற்குக் காரணம் காட்டியுள்ளார் ஆசிரியர்.

இளம் வயதிலேயே எமது சமயம் தொடர்பான உண்மைகள் - தெளிவான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு கூறப்பட்டிருந்தால் மதம் மாறும் சிந்தனைகள் எழமாட்டா என்பது ஆசிரியரின் கருத்தாக உள்ளது. சைவசமய சிறப்புகளை அறிந்து கொள்ளாமையும் பிறசமயங்களின கவர்ச்சிகரமான செயற்பாடுகளும்தான் மக்களின் மனதைத் தடுமாற வைக்கின்றன என்பதை தெளிவாக்கி உள்ளார். மந்திரங்களை ஓதும் பாரம்பரிய மரபு முறையினர் நடந்து கொள்ளும தவறான வழிமுறைகள் உலக நன்மைக்குப் பாதகமாக அமைகின்றன. வடமொழி மூலம் மந்திரங்களை ஓதி வழிபடும் முறைகளுடன் வடமொழி துவேஷ எண்ணங்களை மக்கள் நக்கி, தமிழ் மறைகளை ஓதியும் வழிபாடு செய்யலாம் என்பதையும் வலியுறுத்தியுள்ளார்.

தமிழ் வேதம் ஓதும் போது விடப்படும் தவறுகள், பக்திப் பாடல்களில் இடம்பெறும் தவறுகள் பற்றியும் ஆராயப்பட்டு அவற்றைத் திருத்தி உண்மைப் பொருள் மாறாது ஓதப்பழகவேண்டும எனவும் ஆசிரியர் வலியுறுத்துகின்றார்.

இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ளக்கூடிய எளிய முறையில் மாரியம்மன் வழிபாடு பற்றி எடுத்துக கூறப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலே உள்ள பல மாரியம்மன் கோயில்களின் வரலாறுகள் சிறப்புகள் எல்லாம் கூறப்பட்டுள்ளன. மாரியம்மனின் தோற்றம், வளர்ச்சி, இந்து சமய மக்களால் மேற்கொளளப்படும் சக்தி வழிபாடுகள், அதன் தத்துவங்கள், ஆகம கிரியைகள், ஆகமம் சாராத கிரியைகள் போன்றவற்றில் மாரியம்மன் வழிபாடு எவ்வாறு கையாளப்பட்டுள்ளது. என்ற விவரங்களையெல்லாம் கட்டுரைகள் மூலம் ஆராயப்பட்டுள்ளன.

சமயம் தொடர்பான வரலாற்று நூல்கள் அருகி வரும் இன்றைய காலகட்டத்தில் சமய ஆய்வாளர்களுக்கும், மாணவர்களுக்கும் உகந்த பயனுள்ள ஒரு நூலாக - கிராமிய வழிபாட்டு முறைகளை விளக்கும் நூல்க கோப்பாய் சிவத்தின் "அருள் வழங்கும் மாரியம்மன்" நூல் விளங்குகிறது.

**-விஸ்வபரி.**

---

கவிஞர் வேலணையூர் பொன்னண்ணாவின் ஆக்கத்தில் உருவான 'நெஞ்சத்து நெருப்பு', 'உளிகள்' என்கின்ற இவ்விரு கவிதைத்தொகுப்பு நூல்களுமே ஈழத்தமிழர் தம் வாழ்க்கைக்கு ஏற்படும் சோதனைகளையும், அதனால் ஏற்படுகின்ற வேதனையையும் படம்பிடித்துக்காட்டுவதுடன் சமுதாயத்திற்கு உகந்த பல கருத்துக்களையும் கூறிநிற்கின்றன.

ஈழத்தமிழ்நாட்டிலிருந்து புலம்பெயர்ந்து சென்றும் தாய்நாடு மீது கொண்ட பற்றுக் காரணமாக டென்மார்க்கிலிருந்து ஈழத்தமிழர் தொடர்பான பல ஆக்கங்களைக் கவிஞர் முன்



நூல்: உளிகள்
நெஞ்சத்து நெருப்பு
ஆசிரியர்: வேலணையூர் பொன்னண்ணா
வெளியீடு: நிலா பதிப்பகம்,
கிளிநொச்சி.



வைப்பது பாராட்டத்தக்கதாகும்.

'நெஞ்சத்து நெருப்பு' என்ற கவிதைத் தொகுப்பில் 'அகதியாக இடர்படவா வெளிநாடு ஓடி வந்தேன்! வெளிநாடு தேடிவந்தேன்! எண்ணித்தான் பார்க்கிறேன்! என் தாய்மண் காட்சிகளை' என்ற கவிதை வரிகள் மூலம் கவிஞர் தமக்குள்ள தாய்நாட்டுப் பற்றை வெளியிட்டுள்ளமையானது இதற்குச் சான்றுபகர்கின்றது.

கவிஞரவர்கள் கடலுக்குத் தடைபோட முடியுமா? அலைமோத வேண்டாமென்று சுடு மணலுக்குத் தடைபோடமுடியுமா? சுட வேண்டாமென்று விடிகாலைக் கதிருக்குத் துணிபோட்டு மறைத்திட முடிந்திட்டால்! அடிமாலை நிலவைக் குண்டான் சட்டிக்குள் அடைக்க முடிந்திட்டால! தமிழீழ மண்ணுக்கு விடியும் விடியலைத் தடுக்கலாம் என்கின்ற வீர வரிகள் மூலம் தமிழர் தம் போராட்டத்தையும் அவர்களுக்கு ஏற்படும் விடிவையும் எந்த சக்தியாலும் தடுக்க முடியாதென்பதை மிகத் துணிவுடன் கூறி நிற்கின்றார்.

மேலும், 'உலகத் தமிழருக்குத் தனித்தேசம்' என்ற தலைப்பின் கீழ்ப் பாடப்பட்ட 'தமிழ்ச் சங்கம் வைத்தாண்ட தமிழன் இன்று தாழ்வான சினிமாக் கவர்ச்சிக்குள் இழந்திட்டான் தன்னுணர்வை தன்னினத்துக்கு உதவிடவே முடியாத தமிழன் தலைகுனிவு வாழ்க்கைக்குள் சிலையாகி விட்டான்' என்ற கவிதை வரிகளின் மூலம "தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா" என்பதைத் தமிழ்ச் சமூகத்துக்கு மேலும் அறிவுறுத்தும் தன்மையை'க் காணமுடிகின்றது. இதே போன்று இன்னும் எத்தனையோ கவிதைகள் இந்நூலில் தமிழர் தம் சிந்தனைகளைத் தட்டி எழுப்புவதுடன், அவர்கள் தம் பிரச்சினைகளையும் விளக்கி நிற்கின்றன.

அடுத்து, அவரது கவிதைத் தொகுப்பான 'உளிகள்' இல் 'கோயில் முகப்பில் சூலத்துடன் வைரவர் சந்தி முகப்பில் துவக்கோடு இராணுவம்' என்ற வரிகள்மூலம் தமிழீழத்தின் இன்றைய யதார்த்த நிலையை நகைச்சுவையுணர்வுடன் குறிப்பிட்டுள்ளார். இன்னும் அரசின் உறுதியற்ற, அர்த்தமற்ற உறுதிமொழிகள், யாழ்.மீனவருக்கு அரசு காட்டும் பாராபட்சம் என்பவற்றை எடுத்துக்காட்டும வகையில் 'பசியால்' அழும் குழந்தைக்குப் பட்டுச்சட்டை உறுதிமொழி போல் யாழ் குடா மீனவர்களுக்கு மந்திரி உறுதிமொழி' என்னும் கவிதை வரிகள் அமைவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும், 'விளையாட்டுப் பொருள் தமிழன் தலை சிங்கள இராணுவத்துக்கு', 'நாளைய சரித்திரங்கள் இன்றைய செம்மணிப் புதைகுழிக்குள்', 'வரம்பில் கஞ்சியோடு அன்று தோளில் துவக்கோடு இன்று ஈழத்து வீரத்தாய்மார்' என்பன போன்ற கவிதை வரிகளும் இன்றைய தமிழ் ஈழத்தின் யதார்த்த நிலையைப் படம்பிடித்துக் காட்டுகின்றன.

இவற்றைவிட, முதலாளி - தொழிலாளி, ஏழை - பணக்காரன் என்ற வர்க்கவேறுபாடு இன்னும் தொடர்வதையும் ஏழைப்பெண்கள் மீது பணக்காரர்கள் கட்டவிழ்த்துவிடும் காமகொடூரச் செயற்பாடுகளையும் தோலுரித்துக் காட்டும் வகையில் 'ஏழைக்குமரியின் அழுக்குப் பாவாடை கிழியல் ஓட்டை பணக்காரனுக்கு வானத்து நட்சத்திரம்' என்ற கவிதைவரிகளைப் படைத்துள்ளார்.

மேலும், 'சாராயக் குதக்காரன் பெண்டாட்டிக்குப் பிள்ளை பிறந்தது ஈரல் இல்லாமல்' 'மனைவி நெஞ்சில் சந்தேகம் வெடித்தால் அதன் பெயர்தான் பூகம்பம்', 'வயோதிபத்தின் மறுமணம் கனிப்பெண்ணுக்குத் தூக்குக்கயிறு' என்பது போன்ற சமுதாயச் சிந்தைனைக்குரிய நற்கருத்துக்களையும் இந்த 'உளிகள்' மூலம் சிறப்பாகச் செதுக்கியுள்ளார்.

**-சாம்பவி**

# வாசகர் திருமுகம்

## திருநெல்வேலிச் சந்தையின் கட்டட வேலை எப்போது முடியும்?

**யாழ்.**நகரில் பிரதான சந்தையாக விளங்குவது திருநெல்வேலிச் சந்தையாகும். இ[illegible] யின் இன்றைய நிலை தொடர்பாக மிகவும் கவலை தரும் விடயம் என்னவெ[illegible] தொகுதிக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பெற்று அவ்விடங்களில் வியாபாரம் செய்த[illegible] கையளிக்கப்பட்டு ஏனையோருக்கு கொட்டகை அமைத்துக் கொடுக்கப்பட்டாமையால் ஓரளவு வியாபார நடவடிக்கையில் ஈடுபடக் கூடியதாகவிருந்தது.

பின்னர், இவ்விடங்கள் மீண்டும் புனரமைப்புச் செய்வதாகக் கூறிக் கொட்டகைகள் பிரிககப்பட்டன. அந்த இடங்களில் வியாபாரம் செய்தவர்கள் ஆங்காங்கே, வெளியான இடங்களில் கடும் வெயில், மழையென கஷ்டத்தின் மத்தியில் வியாபாரம் செய்கின்றார்கள். அத்துடன், கட்டட வேலைகள் கிழமையில் இரண்டொரு நாள்கள் மட்டும் நடைபெறுகின்றன. எனினும், தற்போது இரண்டு மாதகாலமாக வேலை முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது.

பருவமழைக்காலம் தொடங்குவதனால் பெரும் சிரமங்களை வியாபாரிகள் எதிர்நோக்கலாம். மிகவும் நெருக்கடியான சூழ்நிலையில் எங்களுடைய சமுதாயம் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தாம் பெற்றுக்கொள்ளும் ஊதியத்தோடு நின்றுவிடாது தமது அதிகாரத்துக்கு உட்பட்ட எந்த வேலைத் திட்டங்கள் என்றாலும் சமூகத்திற்குப் பயனுள்ளவையாக இருத்தல் வேண்டும். சந்தையைப் பொறுத்தமட்டில் இனியும் வேலைகள் நடைபெறுமா என்பது கேள்விக்குறியாகவேயுள்ளது.

இவற்றைவிட துப்பரவுத் தொழிலில் ஈடுபடுவோர் தமது கடமைகளை சரிவரச் செய்வதில்லை. பல இடங்களில் கழிவு மரக்கறிகள் கொட்டப்பட்டு பல நாள்களாக அகற்றப்படாமல் துர்நாற்றம் வீசுகின்றது. அவ்விடங்களிலேயே வியாபாரிகள் பொருள்களை வைத்து விற்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. சுத்திகரிப்புத் தொழில் செய்பவர்கள் வியாபாரிகள் செல்லும் முன்பே தமது வேலையை முடித்து விடுகின்றார்கள். பின்பு சேரும் கழிவுகள் வெளியான இடங்களிலும் தற்காலிகமாக வியாபாரம் செய்யும் வியாபாரிகளின் இடங்களிலும் கொட்டப்படுகின்றன. அத்துடன், இவ்விடங்கள் கட்டாக்காலி நாய்களின் கழிப்பிடங்களாக காட்சியளிக்கின்றன. இவ்விடங்களிலேயே அதிகாலையில் வரும் வியாபாரிகள் விரிப்புகளை விரித்து வியாபாரம் செய்யவேண்டிய அவலநிலை. இதன்மூலம் தொற்றுநோய்கள் ஏற்படவும் வாய்ப்புகள் உள்ளது.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கட்டட வேலைகளை விரைவில் செய்துமுடிப்பார்களா? அல்லது பழைய கொட்டகையாவது அமைத்துக் கொடுப்பார்களா? எதைச் செய்தாலும் வியாபாரிகள் ஓரளவாவது திருப்தி அடைவார்கள். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக இந்த வேலையைப் பூர்த்திசெய்து தருமாறு வியாபாரிகள் அங்கலாய்க்கிறார்கள். சமூகத்தின் பிரச்சினைகளை சிரம்மேல் கொண்டு செயற்படுவீர்களா? இல்லையேல் கட்டப்பட்ட கட்டடத்தின் தூண்கள் வெறும் நினைவுச் சின்னங்களாக மட்டும் அமையுமா? உங்களின் நெறிப்படுத்தலில் உள்ளது.

**கொக்குவில்** **ஆ.இரகுநாதன்**

## உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது

"உடலானது ஆன்மா குடியிருக்கும் கோயில்" என்பது எமது அருளாளர்களது வாக்கு. எனவே, உடலை வருத்துதல் ஆன்மாவையும் அதனுள்ளே உறையும் இறைவனையும் வருத்துவதற்கு ஒப்பாகும். இன்று இறைவனின் பெயரால் நாம் செய்யும் பெரும்பாலான திருவிளையாடல்கள் ஏராளம். ஆலயத்திருவிழாக்கள் வழமைபோல அமர்க்களமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. விரதமிருந்து உடலை வருத்தி இரவு நடைபெறும் இன்னிசைக் குழுக்களின் ஆபாசப் பாடல்களை செவிவழி உள்வாங்கி, மனதிலிருந்தி இறையுணர்வை அடையலாம் என்று எந்த வேதமோ ஆகமமோ கூறவில்லையே. நித்திரை விழிப்பு உடல் நலக்கேடு என்பது விஞ்ஞான உண்மை. உறுதியான உடலே உறுதியான உள்ளத்துக்கு உகந்தது. **(A Sound Mind in a Sound Body)** ஆடம்பரத் திருவிழாக்களுக்காக நாம் கொட்டிக் குவிக்கும் லட்சங்கள் வீண்விரயம் என்பது பகுத்தறிவுள்ள அனைவருக்கும் விளங்கும். "உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது" என்பது விபுலானந்தர் வாக்கு. மேலும், "உள்ளம் பெருங் கோயில் ஊனுடம்பு ஆலயம்" என்கிறார் திருமூலர். எனவே, உள்ளத்தை தூய்மையாகவும் உறுதியாகவும் வைத்திருந்தாலே போதும். அது ஆயிரம் ஆலயங்களைத் தொழுவதற்கு சமானமாகும். யப்பானியர்களுக்கும் அமெரிக்கர்களுக்கும் ஆலயம் தொழ நேரமில்லை. அவர்களென்ன கெட்டா போய்விட்டார்கள். நவீன தொழில்நுட்பங்களில் உலகையே வியக்கவைத்து விண்ணைக கிழித்து கோடானுகோடி மைல்களுக்கப்பாலிருக்கும் வேற்றுக் கிரகங்களை ஆராய்கின்றார்கள். அவர்களோ தங்களையும் தங்கள் ஆற்றல்களையும் மட்டுமே நம்புகிறார்கள். அடுத்து என்ன நடக்கப் போகிறது என்பதையறிய அவர்கள் ஆஞ்சநேயரிடமோ அல்லது அம்மனிடமோ சென்று குறிகேட்டு ஆயிரமாயிரமாகக் கொட்டித் தீர்ப்பதில்லை. நாம் மட்டும் ஏன இறைவனின் பெயரால் வாழ்க்கையின் பெரும்பாகத்தையும் பணத்தையும் செலவு செய்ய வேண்டும். கண்களுக்கும் புலப்படாத சூட்சுமப் பொருள்களுக்காகக் கோடி கோடியாகக் கொடடிக் குவிக்கும் நாம் கண்கண்ட தெய்வங்களாக எம்முன்னே நடமாடும் ஏழைகளையும் அநாதைகளையும் வலுவிழந்தோரையும் கண்டும் காணாமல் இருப்பதேன். "ஆடை அணிகலன் ஆடம்பரங்கள் ஆண்டவன் விரும்புவதில்லை. அங்கொரு கண்ணும் இங்கொரு கண்ணும் ஆலய வழிபாடில்லை" என்பது கவியரசு கூற்று. எனவே, நாம் சற்று பகுத்தறிவுடன் விடயங்களை ஆரத்தீர ஆராய்ந்து செயற்படுவோமேயாக இருந்தால் எமது பணத்தையும் நேரத்தையும் சக்தியையும் மீதப்படுத்தி முன்னேற்றகரமான பல காரியங்களை சாதிக்கலாமல்லவா! அதற்காக ஆலயங்களே வேண்டாம். எல்லாவற்றையும் இடித்துத் தள்ளுங்கள் என்று கூறுமளவுக்கு நான நாத்திகனல்ல. வழிபாடு என்பது வாழ்க்கையின் ஒரு அங்கமாக இருக்கட்டும். வாழ்க்கையே வழிபாடு என்றிருந்தால் எமக்கு மிஞ்சப் போவது என்ன!

**யாழ். வதிரிவாசன்.**

## மூடநம்பிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வேண்டும்!

**மே**ற்படி தலைப்பில் 'உதயன் மக்கள் மன்றம்' பகுதியில் பிரசுரமான கட்டுரை தொடாபாக இதனை வரைகிறேன்.

சைவ சமயத்தவர்களும் மற்ற மதத்தினரும் படித்து அலசி ஆராய்ந்து தர்க்கம் செய்யபபடடு வரும் இதிகாசங்கள் இரண்டு உண்டு. மகாபாரதமும், இராமாயணமுமாகும். இவ்விரு கதைகளிலும் சைவ சமயத்தவர் ஏற்றுக்கொள்ளும் முக்கடவுள்களில் ஒருவர் சம்பந்தப்படுகின்றார். அவர்தான் கிருஷ்ணரும் இராமரும். இவர் சம்பந்தப்பட்ட கதைகளில் எத்தனை கொலைகள், அநியாயங்கள் நியாயப்படுத்தும் சம்பவங்கள் வருகின்றன.

பாரதப் போரில் வெற்றி அடைவதற்காக உகந்த காலம் நேரம் பார்த்து அரவான என்னும மாசிலா பெரும் வீரனை களப்பலியாகக் கொடுத்ததாக கதை. இந்த மாவீரனைப் பற்றி மகா பாரதத்தில் பெரிதாகக் காட்டப்படவில்லை. இந்த நரப்பலி - களப்பலி கிருஷ்ணர் இருக்கும் போதே கொடுக்கப்பட்டுள்ளது. அப்படியாயின் கிருஷ்ணர் மூடனே? பலிகொடுப்பது - நரப்பலி - கொடுப்பது பயனற்றது என்று கிருஷ்ணர் கருதியிருந்தால் அப்பலியை வீணே கொடுக்க அனுமதித்திருப்பாரோ?

நாளாந்தம் ஏமது உணவுக்காக எத்தனை மிருகங்களை கொல்கின்றோம். அதில் எத்தனை அவதிப்பட்டு இறக்கின்றன. கோயில் பலியில் ஒரே வெட்டில் தலை துண்டிக்கப்படுகின்றது. அதில் மிருகத்துக்கு உணர்வு மிகக்குறைவு. அது மாத்திரமன்றி பலியான மிருகம் நல் நிலைக்குப் போகின்றது; என்ற கருத்தும் நிலவுகின்றது.

நம் சிவனார் என்ன செய்திருக்கின்றார் - புராணத்தில் - மகனை வெட்டி கறிசமைத்துத் தரும்படி பக்தனைக் கேட்டுள்ளார்.

கிறிஸ்தவரின் பழைய ஏற்பாட்டான விவிலியத்தில் கடவுளே ஆட்டுக்குட்டியையும் - பிள்ளையையும் பலிகொடுக்கும்படி கேட்டுள்ளதாக கூறப்படுகின்றது. அவை மனிதனுக்குத் தண்டனையாக.

எனது கணிப்பில் சைவச் சடங்குகளில் தேங்காயை உடைப்பதும் ஒரு பலியாகவே கருத வேண்டும்.

எனவே, தருமம் செய்பவனைத் தடுப்பது பாவம் என்பது போல் பலிகொடுப்பதைத் தடுப்பதுவும் பாவம்தான். யார் யார் எது உகந்தது என்று கருதுகின்றார்களோ அதைச் செய்து முடிககட்டும் என்று விட்டுவிடுவது நல்லது.

**பருத்தித்துறை** **சுப்பிரமணியம் அழகேசன்.**

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

அலுமாரி, கட்டில், மேசை, செற்றிசெற், சோக்கேஸ், மெலோடிக்கா தட்டச்சு இயந்திரம் (English), குளிர்சாதனப்பெட்டி (சிசில்), நீர் இறைககும் இயந்திரம்,அம்மி, உரல், ஆட்டுக் கல்லு, பூச்சாடிகள், லேடிஸ் சைக்கிள் போன் றன விற்பனைக்குண்டு. தொடர்பு: 115/1, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (34954)

WPGR xxxx தொடர் இலக்கத்தைக் கொண்ட CD200 மோட்டார் சைக்கிள் உடன்விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ம.கட்சன், இல.37, கொண்டடி வீதி, குருநகர், யாழ்ப்பாணம். (34948)

பெற்றோல் மீற்றர் C.50 லான்சர் சாளி (12V), CD.50, CD.90, பேபி கொட் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு:122, சிவன் கோயில் வீதி, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம். T.P.: 222 6366. (34961)

## கார் விற்பனைக்கு

13 சிறி 9XXX தொடர் இலக்கமுடைய மிற்சுபிசி லான்சர் கார் விற்பனைக்குண்டு. வெள்ளைநிறம், 5Gier Outo Shoter Full A/C தொடர்பு: 021 222 5680, இல.200, பலாலி வீதி, கந்தர்மடம் சந்தி (அரசடி வீதி), யாழ்ப் பாணம். (34952)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கொண்வென்ற் வீதியில் 16 பரப்பு 4.125 குழியையும் (V.C) உடைய காணி முழுமையாக விற்பனைக்குண்டு. 150 வருட பழைமையான உறுதியையும் கொண்டது. பகுதியாக விற்பனை செய்யப்படமாட்டாது. தொடர்பு: T.P.: 0112-586350, 0777 301043 (34878)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler (ரூபா40/=), பேட் டுக் குஞ்சுகள் (ரூபா 60/=), 16.08.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். முன்கூட்டிப் பதிவுசெய்ய வும். எமது பருத்தித்துறைக் கிளையிலும் முருகன், சாவகச்சேரியிலும், சூட்டி பாம், வட் டுக்கோட்டையிலும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (34916)

## தவறிவிட்டது

பாலியாறு, வெள்ளாங்குளம் என்னும் முக வரியுடைய செல்வரட்ணம் ரஞ்சித்குமார் என்ப வரின் தேசியஅடையாளஅட்டை (821164907V) கொக்குவிலுக்கும் காரைநகருக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயாளினி வீடியோ சென்ரர், கொக்குவில் மேற்கு, கொக்குவில் என்னும் முகவரியில் ஒப்படைத்து தவவும். (34957)

கைதடி நுணாவிலைச் சேர்ந்த சிவராசா சிவகுமார் என்பவரது தே.அ.அ. (802942915V), வி.அ.அட்டையுடன் பேர்ஸ் 02.08.2004 பல்கலைக்கழகத்திற்கு அருகில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பூபாலசிங்கம் புத்தகசாலை யில் ஒப்படைத்துதவவும். (34956)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட்ஸ் விற்பனைக்குண்டு. புறொயிலர் தேறிய நிறை-280/=, முழுநிறை 180/= தினமும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: தாசன், 158/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (34964)

புறொயிலர் 1 Kg 180/= விற்பனைக்கு உண்டு. சுத்தம்செய்தல் இலவசம். I-NEW R.S.K. Farm, மானஸ் பாடசாலை வீதி, உடு வில. II- New R.S.K. Farm, மானிப்பாய் றோட், மதவடி, உடுவில். (34962)

## காலில் முறிவு

மணல் மூடை ஏற்றிவந்த சைக்கி ளின் சில்லு வீதியி லுள்ள குழியில் வீழ்ந்தபோது தூக்கி வீசப்பட்டதில் குடும் பப் பெண்ணுக்கு கால் முறிந்தது.

இச்சம்பவத்தில் பாலாவியைச் சேர்ந்த சண்முகநாதன் சுகந் தினி (வயது 32) என் பவர் காலில் காய மடைந்தார். (10-117)

## இரும்புக் கதவு அன்பளிப்பு

உசன் இராம நாதன் மகா வித்தி யாலயத்திற்கு 20 ஆயிரம் ரூபா பெறு மதியான இரும்புக் கதவு பொருத்தப்பட் டுள்ளது.

இந்தப் பகுதி யைச் சேர்ந்த திருமதி கந்தையா பாக்கியம் என்பவர் தனது கண வரின் நினைவாக இந்த இரும்புக் கதவை அன்பளிப் பாக வழங்கியுள்ளார். (10-117)

# தடுப்பூசி ஏற்றாத வளர்ப்பு நாய்களுக்கு வலி.தென்மேற்கில் தண்டப்பணம்

யாழ்ப்பாணம்,ஓக.7

உரியகாலத்தில் தடுப்பூசி ஏற்றப்படாது வீடுகளில் வளர்க்கப் படும் நாய்களுக்கு ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடுவதென வலி. மேற்கு மானிப்பாய் பிரதேச சபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

வலி. தென்மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலி நாய்களின் பெருக்கம் அதிகரித்துள்ளதாகவும் -

இதனால் தினமும் கட்டாக்காலி நாய்களால் கடியுண்டு சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதையடுத்தே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகவும் கூறப்பட்டது.

வளர்ப்பு நாய் ஒன்றை முறைப்படி வளர்க்கவே பிரதேச சபை அனுமதிவழங்கும். இதனைமீறி மேலதிகமான நாய்கள் வீட்டு வளவி னுள் காணப்படுமாயின் அவற்றுக்குத் தடுப்பூசி ஏற்றியிருத்தல் வேண்டும்.

தடுப்பூசி ஏற்றப்படாது இருக்கும் வளர்ப்பு நாய்கள் வீட்டு வளவினுள் காணப்படுமாயின் அவை ஒவ்வொன்றிற்கும் ஆயிரம் ரூபா தண்டப் பணம் அறவிடப்படும். அடுத்தமாதம் 01.09.2004 முதல மேற்படி தீர்மானம் நடைமுறைக்கு வரும என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்துவ தற்கான நாய்வளர்ப்புக் குடும்ப அட்டை பிர தேச சபையினால் தயாரிக்கப்பட்டுள்ளது. (எ-185)

## பரீட்சைப் பெறுபேறுகள் அனுப்பிவைப்பு

தென்மராட்சி,ஓக.7

தென்மராட்சிப் பிரதேச அரச உத்தியோ கத்தர்களுக்கு நடத்தப்பட்ட தொலைக்கல்விப் பயிற்சிநெறிப் பரீட்சை முடிவுகள் வெளியாகி யுள்ளன.

கொழும்பு பட்டப்படிப்புகள் முகாமைத்துவ நிறுவனத்தினரால் பிரதேச திணைக்கள பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு இப்பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

பரீட்சை முடிவுகள் சம்பந்தப்பட்ட உத்தி யோகத்தர்களுக்கு நிறுவனத்தினரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (10-117)

## விபத்தில் காயம்!

தென்மராட்சி,ஓக.7

லொறியை முந்திச்செல்ல முயன்ற மோட் டார் சைக்கிள், லொறியுடன் மோதியதில் மோட்டார் சைக்கிளோட்டி காயமடைந்த சம்ப வம் அண்மையில் மீசாலையில் இடம்பெற்றது.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாண வனான நெல்லியடி மகாத்மா ஒழுங்கையைச் சேர்ந்த கே.சிவசுதன் (வயது 28) என்பவரே காயமடைந்தவராவார். இவர் சாவகச்சேரி வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (10-117)

## இன்று முதலாவது பிறந்தநாள்

கணேசன் விபூஷன்



செல்வன் விபூஷன்
சகல சிறப்புக்களையும் பெற்று
நீடூழி வாழ அருளும் வண்ணம் எல்லாம் வல்ல
கருணாகரப் பிள்ளையாரின் திருவடிகளைப்
பிரார்த்திக்கின்றோம்.

உரும்பிராய் மேற்கு, உரும்பிராய். (34965) கணேசன் - அகல்யாவும் குடும்பத்தினரும்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/இணுவில் இந்துக் கல்லூரியில் 8 வருடங்கள் பிரதி அதிபராகக் கடமையாற்றித் தமது சேவையிலிருந்து 07.08.2004 இல் ஓய்வுபெறுகின்ற

**திரு.செல்லத்துரை யோகநாதன்**
**B.A. Dip.in.Ed.**

அவர்களை மனமார வாழ்த்துகிறோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/இணுவில் இந்துக் கல்லூரி.
(34960)(34-12-15)

## துயர் பகிர்கின்றோம்

வனிக்கா மெடிக்கல் உரிமையாளர்
உயர்திரு. இராஜரட்ணம் அவர்களின் அன்பு மாமனார்

**சின்னையா சிதம்பரப்பிள்ளை**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

14, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (34963)(34-12-15)

லம்போ வைத்தியநிபுணர், ஆலோசனை நிலைய நிர்வாகத்தினரும் ஊழியர்களும்.

## ஓவிய வெளியில் 8

துன்பியல் கதாபாத்திரங்கள்

ஆற்றுகையாளர் : 2ம் வருடம்
நாடகமும் அரங்கியலும் துறை மாணவர்கள்

13

யாழ்ப்பாணத்து ஓவியர்களின்
ஓவியங்களின் காட்சி

08.08.2004/ 4.00 p.m. - 5.00p.m.
பிரெஞ்சு நட்புறவுக்கழகம்,
83, பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணத்தில்

ATLAS INTERNATIONAL TRAVELS & TOURS
77, K.K.S. ROAD, JAFFNA.

## திருமண வாழ்வில் ஐம்பதாவது அகவை விழா


(C/364409)

**திரு.பூ.வெற்றிவேலு**
(யாழ். சாவகச்சேரி இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர்)
திருமதி நாகேஸ்வரி தம்பதியினர்
இன்று 07.08.2004 தமது
இல்லத்தில் பொன்விழாவைக்
கொண்டாடிமகிழ்கின்றனர்.
இவர்கள்புதுப்பொலிவுடன் என்றும்
வாழ வாழ்த்துகிறோம்.
வாழ்த்துபவர்கள்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
அக்கா திருமதி மகேஸ்வரி - பொன்னுத்துரை
பினாங், மலேசியா
சிவன் அகம், நுணாவில் தெற்கு, சாவகச்சேரி.

## வாழ்த்துகின்றோம்


(C/36150)

ஆசிரியராய், உப அதிபராய் 14வருடம்.
அதிபராய் சாவகச்சேரி இந்துக்
கல்லூரியை தேசிய கல்லூரி ஆக்கி
கட்டியெழுப்பிய சிற்பியும் எமது
குருவும் ஆகிய அதிபர்

**பூ.வெற்றிவேலு நாகேஸ்வரி**
**தம்பதிகள்**

50ஆவது ஆண்டு திருமண
நிறைவை கொண்டாடும் இந்நேரத்தில்
சகலசௌபாக்கியம் பெற்று
சுகவாழ்வு வாழ வாழ்த்துகிறோம்.

பண்டிதர் வேலுப்பிள்ளை குடும்பம் கல்வயல்
Dr (திரு) அருளானந்தம் குடும்பத்தினர். சங்கத்தானை
சுந்தரம் சின்னத்தம்பி குடும்பம் மந்துவில்.

## கோழிக்குஞ்சுகள் விநியோகம்

Prima சிவப்பு வெள்ளைப் பேட்டுக் குஞ்சு களும் புறொயிலர் குஞ்சுகளும் 09.08.2004 மாலை விநியோகிக்கப்படும்.

தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி,

★ T.P.:3529, 2867
★ P. ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி
★ தாரகை கால்நடைத் தீவன விற்பனை நிலையம்
★ 1 ஆம் கட்டை, பருத்தித்துறை வீதி, ஸ்ரீராம பஸ்நிலையம் முன்பாக, பருத்தித்துறை.

(34958)(34-12-15)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 19 - 05 - 1923



மறைவு 08 - 07 - 2004

**அமரர் இராமன் ஆறுமுகம்**

முப்பத்தொரு நாள்கள் ஆயிற்றே!
ஆறவில்லை எங்கள் துயரம் அப்பா!
நீண்ட தூரம் நீங்கள் சென்றுவிட்டாலும்
எம் மனதில் உங்கள் நினைவுகள் என்றும் மாறாது.

கடந்த 08-07-2004 இல் இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவன் அவர்களின் அந்தியேட்டி வீட்டுக் கிரியைகள் இன்று (07-08-2004) சனிக்கிழமை எமதில்லத்தில் நடைபெறுகின்றன இன்று நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஊரெழு மேற்கு, சுன்னாகம். (34966)(21-12-15)

பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்.

# முறையான பயிற்சியுடன் ஈடுபாடும் இருந்தால் எத்தொழிலிலும் மேன்மை கிட்டும்

## —தொழிலதிபர் சி.சிவலிங்கம்

எந்தத் தொழிலையும் முழு ஈடுபாட்டுடனும் அக்கறையுடனும் மேற்கொண்டால் அத்தொழில் சிறக்கும் என்பது வாழக்க்க நமகுக் கற்றுத்தரும்பாடம். இதற்கு உதாரணமாக விளங்கும் தொழிலதிபர்கள் பலர் எம்மிடையே உள்ளனர்.

அத்தகையவர்களில் ஒருவர்தான் தினேஸ் வெதுப்பகம் மற்றும் பயிற்சிப்பாடசாலை என்ற தொழிலகம் மற்றும் பயிற்சி நிலையத்தை




தாய்வானில் இடம்பெற்ற சர்வதேச வெதுப்பக விஞ்ஞான தொழில்நுட்ப நிறுவனத்தின் செயலமர்வின் முடிவில் அந்த அமைப்பின் தலைவர் வண்டலா தொவ்காயிடம் தொழிலதிபர் சி.சிவலிங்கம் சான்றிதழ் பெறுகிறார்.

வெற்றிகரமாக இயக்கிவரும் சிவமூர்த்தி சிவலிங்கம். வெதுப்பக துறைசார் டிப்ளோமாப் பட்டம் பெற்றவர் இவர். இவரைச்சந்தித்து, அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள நாடினோம்.

மானிப்பாயில் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்த அந்த வெதுப்பகத்திற்குள் நாம் நுழைந்தபோது அங்கு வேலைசெய்யும் தொழிலாளர்கள், தமக்கான சீருடைகளை அணிந்தபடி இயங்கிக்கொண்டிருந்தனர். தொழிலாளரோடு தொழிலாளராகத் தனது பணிகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த தொழிலதிபர் சிவலிங்கம் தனது வேலைச் சுமைகளுக்கிடையே எம்முடன் இணைந்துகொண்டு தனது கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டார்.

### நவீன வெதுப்பகம்

முற்றிலும் இயந்திர மயப்படுத்தப்பட்ட அந்த வெதுப்பகத்தில் சுமார் பதினைந்திற்கும் மேற்பட்ட உணவுவகைகள் தினந்தோறும் தயார் செய்யப்பட்டு விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. சுமார் 5 நிமிட நேரத்தில் 65 கிலோ மாவைக் கலவையாக்கிப் பாணுக்காகப் பதனிடும் இயந்திரம் தொழிலகத்தின் மத்தியில் இயங்கிக்கொண்டிருந்தது. இயந்திரம் பதனிட்டுத் தரும் மாவைச் சுமார் இருபது ஆண், பெண் தொழிலாளர்கள் நிறையிட்டு பாண் உள்ளிட்ட பல்வேறு உணவுவகைகளைத் தயார் செய்துகொண்டிருந்தனர். மூன்று பாரிய வெதுப்பிகளில் (Oven) வெதுப்பப்பட்ட பாண்கள், வேறு உணவுப்பொருள்கள் என்பவற்றைப் பொதிசெய்து ஒழுங்கமைத்துத் தட்டுக்களில் வரிசையாக அடுக்கி வைத்திருந்தனர். தென்னாபிரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அவ்வியந்திர சாதனங்கள யாழ். தொழில்நுட்பவியலாளர் ஒருவரின் உதவியுடன் இங்கு பொருத்தப்பட்டதாகக் கூறுகிறார் தொழிலதிபர் சிவலிங்கம்.

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் ஜி.சீ.ஈ சாதாரணதரம்வரை கல்விகற்ற பின்னர் தொழில் ஆர்வத்தால் இவரும் இவரது நண்பரும் கடை ஒன்றைத்தொடங்கினர். வெதுப்பகங்களுக்குத் தேவையான மாவை இவர்கள் விநியோகித்து வந்தனர். மாவைப் பெற்ற பலர் அதற்கான பணத்தைச் செலுத்தாததால் கடை நஷ்டத்தில் ஓடத்தொடங்கியது. இதனைச் சீர்செய்ய 1980களில் தானே வெதுப்பகத் தொழிலில் இறங்கினார் சிவலிங்கம்.

ஆனால், தொழில் அனுபவமின்மை, அவரிடம் வேலைசெய்த தொழிலாளர்களின் தவறான செயற்பாடுகள் என்பவற்றால் வெதுப்பகத் தொழிலும நஷ்டத்தில் ஓடத் தொடங்கியது; அவரது சொத்துக்களும் அழிந்தன.




### மறக்கமுடியாத காலகட்டம்

அது எனது வாழ்வின் மறக்கமுடியாத காலகட்டம் என்கிறார் சி.சிவலிங்கம்.

அந்த நேரத்தில் என் தந்தையார் எனக்குக் கூறிய அறிவுரை 'முதலில் தொழிலை நீ கற்றுககொள்' அதன் பின் நீயே நேரடியாகத் தொழிலில் இறங்கு என்பதாகும். அதனை வேதவாக்காக ஏற்று 1988 இல் அனுராதபுரத்தில் நடைபெற்ற வெதுப்பக அடிப்படைப் பயிற்சி நெறி ஒன்றில் பங்குபற்றினேன். அதுவே எனக்கு ஒரு திருப்புமுனையாக அமைந்தது. அங்கு கிடைத்த பயிற்சியின் அடிப்படையில் தொழிலில் இறங்கினேன். யுத்த காலத்தில் மா சீராகக் கிடைககாத நேரத்தில் கூட ஐந்து கிலோ மாவில் நானே பாண் தயாரித்து வெதுப்பகத்தை இயக்கினேன். எந்தச் சந்தர்ப்பத்திலும் தேங்காயெணணெய், சக்கரின் கலரிங் என்பவற்றை உணவில் சேர்த்துக் கொள்ளாது பொருளின் தரத்தைப் பேணினேன். எனக்கு என் உற்ற நண்பர் சிறிஸ்கந்தராஜாவும் சிரேஷ்ட ஊழியர் யோகராசாவும் கைகொடுத்து உறுதுணையாயிருந்தனர். - 1995 இல் என்னைப் படையினர் பிடித்து வைத்திருந்த போதுகூட இவர்களே வெதுப்பகத்தை இயக்கினர். இப்படி நெருக்கடிகளைச் சந்தித்த போதும் இந்தத் தொழிலை நான் நேசித்தேன். என் தந்தையார் குண்டுவீச்சில் சிக்கி இறந்த போது அதற்கு நஷ்டஈடாகக் கிடைத்த ஐந்தாயிரம் ரூபாவைப் பயன்படுத்தித் தொழிலை விஸ்தரித்தேன். என் தந்தையாரே எனக்கு வழிகாட்டியானவர். அவரின் அறிவுரைப்படியே 1994 இல் மலேசியா சென்று அங்குள்ள வெதுப்பகங்களைப் பார்வையிட்டேன். 1998 இல் பெல்ஜியத்தில் நடைபெற்ற வெதுப்பகப் பயிற்சி ஒன்றில் பங்குபற்றினேன். இறுதியாக பாங்கொக்கில் 2003 இல் நடைபெற்ற சர்வதேச வெதுப்பக விஞ்ஞான தொழிநுட்பப் பயிற்சி நெறியில் கலந்துகொண்டு சான்றிதழ் பெற்றுள்ளேன். இந்தப் பயிற்சிகளும் என் முயற்சியுமே என் இன்றைய வளர்ச்சிக்குக் காரணம் என்றார் தொழிலதிபர் சிவலிங்கம்.

### தூய்மை, சுத்தம், தரம்

தூய்மை, சுத்தம், தரம் என்பவற்றைச் சிறப்பாகக் கையாண்டு இயங்கிவரும் இந்தத் தொழில் ஸ்தாபனத்தில் 24 பெண்கள் உட்பட 54 பேர் பணிபுரிகின்றனர். சுன்னாகம், மானிப்பாய், திருநெல்வேலி என்பவற்றில் விற்பனை நிலையங்களைக் கொண்டுள்ள 'தினேஷ் பேக்கரி' சுமார் 8 கிலோமீற்றர்கள் தூரம்வரை நாளதோறும் 3 முறைபாண் விநியோகம் செய்துவருகிறது. மானிப்பாயிலுள்ள இதன் கிளையில் எந்நேரமும் சுடச்சுடப் பாண் பெறமுடியும். 'பேஸ்ரி' (Pasty) எனப்படும் உணவுவகையை குடாநாட்டிற்கு சிவலிங்கமே அறிமுகப்படுத்தியுள்ளார்.

'நாம் ஈடுபடும் தொழிலில் ஏற்படும் நட்டங்கள், தடைகளைக் கண்டு மனம் கோணாது போராடவேண்டும். அதைவிடச் செய்யும் தொழில் சார்ந்த அறிவும் பயிற்சியும் நமக்கிருக்கவேண்டும். இதுவே வெற்றிக்கு வழி என்கிறார் தொழிலதிபர் சிவலிங்கம்.

தனது மன நிறைவுக்காக இத் தொழிலதிபர் உடுவிலில் இயங்கிவரும் 'வாழ்வகம்' சிறுவர் இல்லத்திற்குக் காலை உணவைத் தினந்தோறும் இலவசமாக வழங்கிவருகின்றார். இவரது தொழிலும் தொண்டும் சிறப்புற நடக்க 'உதயன்' சார்பில் வாழ்த்தி விடைபெற்றோம்.

சந்திப்பு:
**ஆர்.மார்க் அன்ரனி**

# வர்த்தகத் துறையை மேம்படுத்த குடாநாட்டிற்கென விசேட திட்டம்

## அபிவிருத்தி அமைச்சின் செயலர் விளக்கம்



குடாநாட்டில் சிறு மற்றும் நடுத்தர வர்த்தகத்துறையை மேம்படுத்த விசேட திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவிருக்கிறது. வர்த்தகத்துறையில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு பயிற்சிகள், கடன்கள், வெளிநாட்டு ஏற்றுமதிகளுக்கான தொடர்புகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இத்திட்டம் அமையவிருக்கின்றது.

சிறு மற்றும் நடுத்தர வர்த்தக அபிவிருத்தி அமைச்சின் செயலாளரும் தொழில்நுட்ப மற்றும் தொழில் பயிற்சி அமைச்சின் மேலதிக செயலருமான எஸ்.லீலரத்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த அவரைச் சந்தித்தோம்.

அப்போது அவர் தெரிவித்ததாவது:-

புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்த சமயம் இங்கு வருகைதந்திருந்தேன். அச்சமயம் கிளிநொச்சி மற்றும் சாவகச்சேரிப் பகுதிகளில் யுத்தத்தின் வடுக்களைக் கண்டேன். ஆனால், இப்போது அங்கெல்லாம் புதுப் புதுக் கட்டடங்களைப்பார்த்தேன். வர்த்தக அபிவிருத்தியைக் கண்டேன். சமாதான செயற்பாடுகளுக்கு இவை நல்ல சமிக்ஞைகள்.

### உற்பத்தித்துறை மேம்பாடு

வடக்கு - கிழக்கில் முக்கிய உற்பத்தித் துறைகளான விவசாயம், கடற்றொழில் ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்குடன் விசேட நிலையங்களை ஆரம்பித்துள்ளோம். சிறு மற்றும் நடுத்தர வர்த்தகத்துறையை ஊக்குவிக்கும் நோக்குடன் அமைக்கப்பட்ட இந்த நிலையங்கள் பலவேறுபட்ட உதவிகளை வழங்கி வருகின்றன.

யாழ்.மாவட்டத்தில் திறக்கப்பட்டுள்ள இந்த நிலையத்தில் சிறு மற்றும் நடுத்தர வர்த்தகத்தில் ஈடுபடுபவர்கள் பதிவு செய்யவேண்டும் அவர்களுக்குக் கடன் வசதிகள், தொழில் நுட்ப ஆலோசனைகள்,வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஏற்றுமதிக்கான தொடர்புகள் ஆகிய வசதிகளை இந்த நிலையம் வழங்கும்.

### கைத்தொழில் வாய்ப்புக் குறித்து ஆய்வு

மீன்பிடி மற்றும் விவசாயத்துறைகள் சார்ந்த கைத்தொழில்களை ஆரம்பிக்கும் சாத்தியம் குறித்து இந்த நிலையம் ஆய்வுகளை மேற்கொண்டுவருகின்றது. கடல் உணவுகளைப் பதப்படுத்திப் பொதிசெய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் கைத் தொழிலை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மாம்பழம், வாழைப்பழம், திராட்சைப்பழம் ஆகியவை அதிகம் விளையும் காலத்தில் அவற்றைப் பதப்படுத்தும் தொழிற்சாலைகளை ஆரம்பிக்கவும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

### கடன் திட்டம்

இத்தகைய தொழிற்சாலைகளை வர்த்தகர்கள் அமைக்க விசேட கடன் திட்டம் ஒன்றை வகுத்துவருகின்றோம். ஆசிய அபிவிருத்தி வங்கி, சுவிஸ் அரசு ஆகியவை வழங்கும் கடன் உதவிகளுடன் இத்திட்டத்தை நடைமுறைப் படுத்த ஏற்பாடுசெய்கின்றோம். அடுத்த மூன்று, நான்கு மாதங்களில் இந்த விசேட கடன் திட்டம் நடைமுறைக்கு வரும் என நம்புகின்றோம்.

இத்திட்டத்தின் கீழ் குறைந்த வட்டியில் கடனைப் பெற்றுத் தமது தொழில்களை வர்தகர்கள் மேம்படுத்தமுடியும். இத்திட்டத்துக்கு அரசும் தனது பங்களிப்பை வழங்கும்.

இத்திட்டத்தின் கீழ் 2 லட்சம் ரூபா முதல் 5 லட்சம் ரூபா வரையான உதவியை வர்த்தகர்கள் பெறமுடியும். அதன் மூலமாகப் பாரிய கைத்தொழில்களை வர்த்தகர்கள் அரம்பிக்கச் சந்தர்ப்பம் கிட்டும்.

விவசாயத்துறையில் கூடுதல் வருமானத்தை விவசாயிகள் ஈட்ட உதவியாக நல்ல ரக விதைகளை வழங்கவும் நவீன தொழில் நுட்பத்தை அறிமுகம் செய்யவும் எமது அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. விவசாயம் மற்றும் மீன்பிடித் தொழில்களுடன் இணைந்து வர்த்தகத்துறையை மேம்படுத்தவே அமைச்சு விசேட திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றது - என்றார் அவர்.

தொழில்நுட்பக்கல்வி மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சு ஊடாக மேற்கொள்ளப்படும் திட்டங்கள் குறித்து அவர் தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்கில் தொழில்நுட்பக்கல்வி மற்றும் தொழில் பயிற்சிகளை ஊக்குவிக்க விசேட திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்துக்குப் பலநாடுகள், நிறுவனங்கள் உதவ முன்வந்துள்ளன.

**நேர்காணல்: குகா**

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த 4 கோடி 50 லட்சம் ரூபா தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கான நிதி கிடைத்ததும் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

வடக்கு - கிழக்கில் வீடுகள், கட்டடங்கள் பெரிய அளவில் அமைக்கப்படவிருக்கின்றன. இந்தப் பாரிய வேலைகளை மேற்கொள்ளப் பெரும் எண்ணிக்கையான தொழிலாளர்கள் தேவைப்படுவர் அவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டிய தேவை உள்ளது.

இதற்காக யாழ்தொழில்நுட்பக் கல்லூரியைத் தரம் உயர்த்திப் பயிற்சி பெற்ற தொழிலாளர்களை உருவாக்கத் திட்டமிட்டுள்ளோம்.

அத்துடன், நடமாடும் பயிற்சிப் பிரிவு ஒன்றையும் ஆரம்பிக்கவிருக்கின்றோம். கிராமப் புறங்களுக்கு நேரில் சென்று பயிற்சி அளிக்க இந்தப் பிரிவு உதவும் - என்றார் அவர்.(ஒ-3)

## சிறுவர்களின் எதிர்காலத்துக்கு கொமர்ஷல் வங்கி வழங்கும் 'அருணலு'

சிறுவர்களின் எதிர்காலத்துக்குப் பாதுகாப்பு அளிக்கும் நோக்குடன் 'கொமர்ஷல்' வங்கியானது 'அருணலு' சிறுவர் சேமிப்புக் கணக்குத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.

குழந்தைப் பருவம் தொடக்கம் பராயமடையும்வரை பிள்ளைகளின் வாழ்வில் ஒவ்வொரு கட்டத்தையும் சிறப்பாக மேற்கொள்ள 'அருணலு' சேமிப்புக் கணக்கு உதவுகின்றது.

'கொமர்ஷல்' வங்கி கல்வியின் முக்கியத்துவத்தை நன்கு அறிந்துள்ளது. இதனால், அருணலு சிறுவர் சேமிப்புக் கணக்கு சிறுவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்குத் தேவைப்படும் நிதியை வழங்கி அவர்களின் அறிவாற்றல் விருத்திக்கும், சுபீட்சமான எதிர்காலத்துக்கும் வழிவகுக்கின்றது.

ஒவ்வொரு வருடமும் 'கொமர்ஷல்' வங்கி தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளில் பாடசாலை மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுக்கொள்ளும் சிறார்களுக்குப் பணப்பரிசில்களை வழங்குகின்றது. சென்ற வருடம் கூட யாழ்.மாவட்டத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சிறப்பாகச் சித்தி பெற்ற 10 பாடசாலைகளைச் சேர்ந்த 12 குழந்தைகளுக்குப் பணப்பரிசுகள் வழங்கி கௌரவப்படுத்தியது.

இந்தத் திட்டத்தினூடாகப் பின்வரும் நன்மைகளை 'கொமர்ஷல்' வங்கி வழங்குகின்றது.

- வட்டியானது நாளாந்தம் நிலுவையின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட மாதாந்த முடிவில் கணக்கில் சேர்க்கப்படும். பிள்ளையின் அவசர வைத்திய மற்றும் கல்வித்தேவைகளுக்குப் பணத்தை மீளப்பெறமுடியும்.

இவ்வருடம 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை நெருங்கி வருவதால், 'அருணலு' சிறுவர் கணக்கை ஆரம்பிக்கும் நடவடிக்கைகளை கொமர்ஷல் வங்கி இலகுபடுத்தியுள்ளது. பரீட்சை நடைபெறும் திகதிக்கு முன்பாக ரூபா 5000 இற்குக் குறையாத மீதிக் கணக்கிலிருந்து, பாடசாலை மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெறும் சிறார்களுக்குப் பணப்பரிசில்களை வழங்க இந்த வருடமும் கொமர்ஷல் வங்கி தயாராகி வருகிறது.

-கொமர்ஷல் வங்கி வெளியீடு

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### இராசரத்தினம் பிரபாகர் (பிரபு)

திதி: 08.08.2004

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 12-12-1973 | 20-08-2003 |

ஆண்டு ஒன்று சென்றாலும்
ஆறாதய்யா நம் துயரம்
ஆண்டவன் திருவடி சென்ற நாள் தொட்டு
மாறாத்துயருடன் தவிக்கின்றோம்
உன் வாழ்வு மலருமென காத்திருக்க
காலனவன் உன்னை கவர்ந்து சென்றானே!
மற்றுமொரு பிறவியெடுத்து எம்முடன்
இம்மண்ணுலகத்தில் வந்துசேரப்பா
மகனே நின் நினைவுகளுடன் தினம்
மன்றாடுகிறோம் இறைவனடியையே.

நாளை (08.08.2004) ஞாயிற்றுக்கிழமை மதியம் எமதில்லத்தில் நடைபெறும் கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
இ.சுதன்
குச்சம் ஒழுங்கை,
வல்வெட்டித்துறை. (34930)(34-11-12-29)

தாய், சகோதரர்கள்,
மைத்துனர்மார்.

## MATHS CENTER
M.M.V. Road, Nelliady.

மூன்றாம் தவணைக்குரிய வகுப்புகள்
Gr.4 - Gr.11 வரை
ஆரம்பம்: 06.07.2004 வெள்ளி
(சி-36441)(34) p.m. 3.30 (ப.நே.)

## நெஞ்சில் நீங்கா ஓராண்டு நினைவுடன்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 21 - 06 - 1976 | 05 - 08 - 2003 |



### மகாலிங்கம் மகேஸ்வரன் (ரகு)

(ஏழாலை மத்தி, ஏழாலை – கலைவாணன் வெதுப்பக உரிமையாளர்)

அன்புடனும் பண்புடனும் சிறப்புடனும்
நாங்கள் வாழ
காலமெல்லாம் கண்விழித்து எம்மை
காத்த ரகுவே - நீ
உனக்கென வாழாத உள்ளம்
கொண்டவனல்லோ!
சகோதரனே! எம்மைப் பிரிந்து - நீ
ஓராண்டு ஆனாலும் - உன் அன்பை
என்றும் நாம் மறவோம் - நீ
வட்டுச்சென்ற வழியில் நாம் செல்வோம்.

உன் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
ம.கமலாதேவி,
ஏழாலை மேற்கு. (34885)(24-29-11-12)
அம்மா, அண்ணா,
தம்பிமார், தங்கை.

### 'அருள் ஒளி' வெளிவந்தது

வலி.தெற்கு,ஓக.7

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தினரின் மாதாந்தச் சஞ்சிகையான 'அருள் ஒளி' ஆடிமாத இதழ் வெளிவந்துள்ளது.

மாதந்தோறும் வெளிவரும் இச்சஞ்சிகைக்குப் பொருத்தமான தரமான, சமயசம்பந்தமான ஆக்கங்களை அனுப்பிவைக்குமாறு அதன் ஆசிரியர் கேட்டுள்ளார்.

சைவத்திற்கும் தமிழுக்கும் அளப்பரிய தொண்டாற்றிவரும் துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் சேவையைக் கௌரவித்து 2005 ஆம் ஆண்டு தை மாத இதழை "சிவத்தமிழ்" சிறப்பிதழாக வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது. (எ-152)

### புற்றுநோய் வைத்தியசாலை இணைப்பாளராக தெய்வேந்திரன் நியமனம்

குருநகர்,ஓக.7

தெல்லிப்பழையில் இயங்கவுள்ள புற்றுநோய் ஆஸ்பத்திரியின் இணைப்பாளராக வைத்திய கலாநிதி இ.தெய்வேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வைத்தியசாலையை விரைவில் இயக்குவதற்காக உயர்மட்டக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், இவ்வைத்தியசாலைக்குத் தேவையான இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் அலுவலகம் மூலம் தெரியவந்தது. (எ-51)

அமரர் தம்பிஐயா ஸ்ரீரங்கன்
ஞாபகார்த்தமாக
கோப்பாய் ஐக்கிய விளையாட்டு
கலாசாரக் கழகம்
மின்னொளியில் நடத்தும்
யாழ். மாவட்ட ரீதியிலான மாபெரும்
கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின்
இறுதிப்போட்டியும் பரிசளிப்பு விழாவும்
இடம்:
யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி
கூடைப்பந்தாட்டத்திடல்
காலம்:
07.08.2004 சனிக்கிழமை பி.ப. 6.30 மணி
இறுதிப்போட்டி:
சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம்
எதிர்
யாழ். பல்கலைக்கழக அணி
மூன்றாம் இடத்திற்கான போட்டி
கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கழகம்
எதிர்
ஜெனியன்ஸ் விளையாட்டுக் கழகம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றனர்.

கோப்பாய் மத்தி,
கோப்பாய். (34978)(11-12-29)
கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கலாசாரக் கழகம். (34928)

## தமிழீழ வைப்பகம்

### பணிநிலை வெற்றிடம்

தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணி நிலைக்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

01) பணிநிலை : பண்ணை முகாமையாளர் (தரம் 03)

தகைமை : ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் விவசாய விஞ்ஞான பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.

அல்லது

ஏற்றுக்கொள்ளப்பட்ட விவசாயக் கல்விநிறுவனமொன்றின் பொருத்தமான கற்கை நெறியினைப் பூர்த்தி செய்திருப்பதுடன் பண்ணை முகாமைத்துறையில் குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் பட்டறிவு உடையவராக இருத்தல் வேண்டும்.

அல்லது

பண்ணை முகாமைத்துறையில் குறைந்தது ஏழு (07) ஆண்டுகள் பட்டறிவுடையவராக இருத்தல் வேண்டும்.

அகவை : 30 ஆண்டுகளுக்கு மேற்பட்டவராக இருக்கவேண்டும்.

மாதாந்த ஊதியம் : 8,000-12,000 + 4,000
200 X 20

02) பணிநிலை: பண்ணை மேற்பார்வையாளர் (தரம்-03)

தகைமை : பண்ணை மேற்பார்வை தொடர்பில் ஆகக்குறைந்தது ஐந்து (05) ஆண்டுகளிற்குக் குறையாத பட்டறிவு உடையவராக இருக்கவேண்டும்.

அகவை : 30 ஆண்டுகளிற்கு மேற்பட்டவராக இருக்கவேண்டும்.

மாதாந்த ஊதியம் : 6,000-9,000 + 4,000
150 X 20

மேற்காட்டப்பட்ட பணிநிலைகளுக்குத் தகுதியானவர்கள் தம்மால் தயாரிக்கப்பட்ட சுயவிளக்கங்களுடனும் கீழ்க்காட்டப்படும் ஆவணங்களுடனும் திருநகர், கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பக நடுவப்பணியகத்திற்கு 2004/08/11 ஆம் நாள் புதன்கிழமை காலை 10.00 மணிக்கு நேரில் வருகை தருமாறு வேண்டப்படுகின்றனர்.

01) கல்வித் தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்
02) ஏனைய தகைமைகளையும் பட்டறிவையும் உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்
03) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்
04) நற்சாட்சிப் பத்திரங்கள்

மேலாளர்,
ஆளுகைப் பகுதி,
நடுவப்பணியகம்,
தமிழீழவைப்பகம்.

(சி-36700)(11-12-29)

## எங்கள் தெய்வத்திருத்தந்தையின் மூன்றாவது நினைவுத்திருவஞ்சலி

எங்களுக்காக விழிநீர்சொரிய

| | |
|---|---|
| 01 | 11 |
| 07 | 08 |
| 1938 | 2001 |



### அமரர் பொ. சங்கரப்பிள்ளை அவர்கள்

(முன்னாள் அதிபர், உடுத்துறை ம.வி.) (J.P).

திதி : ஸப்தமி - 07.08.2004

காற்றொடு புயல்வந்து
பிரளயமே பிளந்தாலும்
அரணாய், அன்பாய்
ஆதரவாய் எமையணைத்து
கண்ணின் மணியாக
எம்மை
காத்திருந்த தெய்வமே!
காற்றுத்துகள் பட்டுக்கூட
எங்கள் கண்கள்
கலங்கிவிடாது

இமைபோல்
எமைக்காத்த
எங்கள் இமயமே - ஐயா
மானிடநேயத்தின்
மகத்தான உருவகமாய்
வாழ்ந்த எம் மன்னவரே!
ஆவணி பதினொன்று
இரண்டாயிரத்து ஒன்று மாலை
எம் வீட்டில்
வீழ்ந்த புயல்
இன்னும் அகலவில்லை - எம்
விழி நீரும் ஓயவில்லை

எங்கள் திருத்தந்தையின் ஆத்மா
சாந்தியும் சமாதானமும் பெற
இறைவன் திருவடிகளை இறைஞ்சுகின்றோம்

நிரந்தர முகவரி
உடுத்துறை தெற்கு
தாளையடி

தற்காலிக முகவரி
புலோலி தெற்கு
பருத்தித்துறை

என்றும் உங்கள் நினைவுகளுடன்
வா(ழு)ம்
பாசமிகு குடும்பத்தினர். (34895)

# குருவின் பெயர்ச்சியால் எத்தகைய பலன் கிட்டும்?

**6** குருபகவான் தற்போது சிம்மராசியில் இருந்து கன்னி ராசிக்குச் செல்கிறார். குரு பெயர்ச்சி வாக்கியப் பஞ்சாங்கப்படி இந்த ஆண்டு (2004) ஓகஸ்ட் மாதம் 19ஆம் திகதியன்று நடக்கிறது. (திருக்கணித பஞ்சாங்கப்படி ஓகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி குருபெயர்ச்சி நிகழ்கிறது) இவர் 2005ஆம்ஆண்டு செப்ரெம்பர் மாதம் 4ஆம திகதி வரை கன்னி ராசியில் இருப்பார்.

குரு பெயர்ச்சியினால் 12 இராசிகளின் பலன் மாற்றங்கள் தொடர்பான தகவல்கள் இங்கு தொடர்ந்து பிரசுரமாகின்றன. நேற்றைய பத்திரிகையில் தனுசு, மகரம் ஆகிய ராசிகளின் பலன்கள் வெளியாகி இருந்தது தெரிந்ததே.

## கும்பம்

கும்ப ராசி அன்பர்கள் சுய கௌரவத்தோடு வாழ்பவர்கள். நீங்கள் உங்களை விடத் தகுதி கூடியவர்களிடம் மட்டும் சகவாசம் வைத்து இருப்பீர்கள். எந்த நிலையிலும் யாருடைய தயவையும் நாடாமல் இருக்கவிரும்புவீர்கள்.

உங்களுக்கு இதுவரை குருபகவான் 7ஆம் இடத்தில் இருந்து பல்வேறு நன்மைகளைச் செய்து கொண்டிருந்தார். அவரால் நீங்கள் பல்வேறு உன்னதமான பலன்களை அடைந்திருக்கலாம். உங்கள் செல்வாக்கு உயர்ந்திருக்கும். நினைத்ததை நிறைவேற்றி இருப்பீர்கள்.

பணப் புழக்கம் அதிகரித்திருக்கும். தேவைகள் பூர்த்தியாகி இருக்கும். பொருளாதார வளம் மேம்பட்டிருக்கும். வீடு, மனை வாங்கி இருப்பீர்கள் அல்லது வசதியான வீட்டிற்குக் குடிபுகுந்து இருப்பீர்கள். சிலர் வாகனம் வாங்கி இருக்கலாம்.

இந்த நற்பலன்கள் மட்டுமன்றி, ராகுவும் 3ஆம் இடத்தில் இருந்து மேலும் நற்பலனைக் கொடுத்திருப்பார். ஆனால் சனி 5ஆம் இடத்தில் இருப்பதால் குடும்பத்தில் சிற்சில பிரச்சினைகளைச் சந்திக்கலாம்.

9ஆம் வீட்டில் இருக்கும் கேது உங்கள் முயற்சியில் அவ்வப்போது தடைகளைத் தந்திருப்பார். ஆனாலும் ராகுவும், குருவும் சேர்ந்து உங்களை முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் சென்று இருப்பார்கள்.

இந்த நிலையில் இப்போது குருபகவான் 8ஆம் இடத்திற்கு அடியெடுத்து வைத்திருக்கிறார். இது அவ்வளவு சிறப்பான நிலை அல்ல. 8ஆம் இடத்தில் இருக்கும் குருபகவான் பொதுவாக மன வேதனையும், நிலையற்ற தன்மையும் கொடுப்பார். பொருளாதாரச் சரிவை ஏற்படுத்துவார்.

வீண் விரோதத்தை உருவாக்குவார். பல்வேறு தொல்லைகளைக் கொடுப்பார் என்பது பொதுவான ஜோதிட வாக்கு. ஆனால், இதனைக் கண்டு நீங்கள் அஞ்ச வேண்டாம். குரு சாதகமற்ற நிலையில் இருந்தாலும் அவரது 7ஆம் இடத்துப் பார்வைக்குத் தனிச் சக்தி உண்டு.

அந்தப் பார்வை உங்களுக்குச் சாதகமாக உள்ளது. குருவின் பார்வையால் கோடி நன்மைகளை அடையலாம் என்பது ஜோதிட வாக்கு. அந்த வகையில் உங்களுக்கு எந்த இடையூறுகள் வந்தாலும் அதைக் குருவின் பார்வை முறியடித்து வெற்றிக்கு வழிவகுக்கும்.

எனவே, குரு சாதகமற்ற நிலையில் இருக்கிறாரே என்று நீங்கள் கவலைகொள்ள வேண்டாம். அப்படியே குரு சிற்சில இடையூறுகள் தந்தாலும் அது உங்களுக்குப் பாடம் புகட்டுவது போலத்தான் இருக்குமே அன்றித் தண்டனை கொடுப்பதாக அமையாது.

குரு கன்னி ராசியில் இருக்கும் காலத்தில் சனி பகவான் தொடர்ந்து 5ஆம் இடத்திலேயே இருப்பார். இது சுமாரான நிலைதான் என்று ஏற்கனவே சொல்லி இருக்கிறேன். ஆனால் சனியின் 7ஆம் இடத்துப் பார்வை சிறப்பாக உள்ளது. அதன்மூலம் பல்வேறு நற்பலன்களைக் கிடைக்கப் பெறலாம்.

28.02.2005 அன்று ராகு – கேது பெயர்ச்சி வருகிறது. அதன்பின் 3ஆம் இடத்தில் இருந்து 2ஆம் வீட்டிற்கு வருவார். இது சிறப்பான இடம் அல்ல. அதனால் குடும்பத்தில் சிற்சில பிரச்சினைகள் வரலாம்.

அதே நேரம் கேது 9ஆம் இடத்தில் இருந்து 8ஆம் இடத்திற்கு வருகிறார். இதுவும் சுமாரான இடம்தான். அதன்பின் உங்கள் தடைகள் விலகும். ஆனால் உடல் உபாதைகளைத் தரலாம்.

மேற்கண்ட நிலையில் இருந்து விரிவான பலன்களைக் காணலாம்.

சனியின் பார்வையால் பொருளாதார வளம் சிறப்பாக இருக்கும். காரியம் அனுகூலம் அடையும். உங்கள் முயற்சியில் தடைகள் வரலாம். அந்தத் தடையைக் குருவின் பார்வையால் எளிதில் உடைத்தெறிவீர்கள். செலவுகள் அதிகரிக்கும். சிக்கனம் தேவை. மதிப்பு, மரியாதை சீராக இருக்கும்.

வீண் விவாதங்களில் ஈடுபடாமல் பொறுமையாக இருப்பது நல்லது. உங்கள் ஜாதகத்தில் தசாபுத்தி சிறப்பாக அமைந்திருந்தால் அவர்கள் வீடு, மனை வாங்க யோகம் உண்டு. ஆனாலும் ஒன்றுக்கு பத்துமுறை சிந்தித்து காரியத்தில் இறங்குவது நல்லது. யாரையும் எளிதில் நம்பிவிட வேண்டாம்.

குடும்பம்– பெரியோர்கள், ஆன்றோர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது. குடும்பத்தில் மகிழ்ச்சிக்குக் குறையிருக்காது. குடும்பத்தில் திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள் நடக்கத் தடை ஏதும் இல்லை. ஆனால், அதற்காக அதிகமாக அலைய வேண்டியிருக்கும்.

மனைவி வகையில் சிறுசிறு பிரச்சினை வரலாம். பெப்ரவரிக்கு பிறகு தம்பதியினரிடையே கருத்து வேறுபாடு வர வாய்ப்பு உண்டு. உங்களின் சாமர்த்தியத்தால் எந்த பிரச்சினையும் இல்லாமல் அமைதியைக் காணலாம். உறவினர்களிடையே எதிர்பார்த்த அனுகூலம் இருக்காது.

உத்தியோகம்– சீரான நிலையில் இருப்பர். பிற்போக்கான நிலை வரவாய்ப்பில்லை. உங்கள் வேலைப்பளு அதிகரிக்கும். அதற்கான வருவாயைக் காணலாம்.

உங்கள் பொறுப்புகளை வேறு நபர்களிடம் ஒப்படைத்து விட வேண்டாம். நீங்களே செய்து விடுவது நல்லது. மேல் அதிகாரிகளிடம் அனுசரித்துப் போகவும். சிலருக்கு இடமாற்றம் ஏற்படலாம். அதன் காரணமாக குடும்பத்தை விட்டு தற்காலிகமாக பிரிய நேரிடலாம்.

வியாபாரம்– தொடர்ந்து சீராக இருக்கும். பணப்புழக்கம் ஏற்படும். அவ்வப்போது வரும் தடைகளை உடைத்தெறிவீர்கள். எதிரிகள் வகையில் சற்றுக் கவனம் தேவை.

அவர்கள் மூலம் பண இழப்பு ஏற்பட வாய்ப்பு உண்டு. யாரிடமும் பார்த்துப் பழகவும். புதிய வியாபாரம் செய்ய நினைப்பவர்கள் அதிக முதலீடு செய்ய வேண்டாம். இருப்பதை வைத்து அதிக உழைப்பைச் சிந்தி முன்னேற்றம் காணலாம்.

## மீனம்

மீன ராசி அன்பர்கள் ஞானிகளிடமும் பெரியோர்களிடமும் மிகுந்த மரியாதை கொண்டவர்கள்: நீங்கள் ரகசியங்களைப் பாதுகாப்பதில் வல்லவர்கள். எந்த பிரச்சினையிலும் சிக்காமல் நழுவி விடும் தன்மை படைத்தவர்கள்.

உங்களுக்கு இந்த குரு பெயர்ச்சி நல்ல சிறப்பைத் தரும். இது மிகவும் சிறப்பான காலம். உங்கள் வாழ்க்கை செழித்தோங்கும் நேரம். படிப்படியாக முன்னேற்றம் காணும் காலம். கடந்த ஓராண்டாக எந்த முக்கிய கிரகங்களுமே சாதகமாக இல்லை.

இதனால் பல்வேறு இன்னலுக்குள்ளாகி இருப்பீர்கள். குருபகவான் உங்கள் ராசிக்கு 8ஆம் இடத்தில் இருந்தார். அவர் மன நிம்மதியை இழக்கச் செய்திருப்பார். உங்கள் நிலையில் இருந்து தடுமாற்றத்தை உண்டு பண்ணியிருப்பார்.

பொருளாதார சரிவு ஏற்பட்டிருக்கும். வீண் பகையும், விரோதமும் உருவாகியிருக்கும். பல்வேறு தொல்லைக்ளை அனுபவித்து இருப்பீர்கள்.

அதேபோல சனி 4ஆம் இடத்தில் இருந்தும் ராகு 2ஆம் இடத்தில் இருந்தும் குடும்பத்தில் பிரச்சினையை உருவாக்கி இருப்பார்கள். 8ஆம் இடத்தில் உள்ள கேது உடல் உபாதைகளைக் கொடுத்திருப்பார்.

இந்த நிலை இனி மாறும். தற்போது குருபகவான் 6ஆம் இடத்தில் இருந்து 7ஆம் இடத்திற்கு செல்கிறார். இது மிகவும் உயர்வான நிலை. மேலும் குருவின் 5ஆம் இடத்துப் பார்வையும் சிறப்பாக உள்ளது. எனவே, குரு குடும்பத்தில் மகிழ்ச்சியை அதிகரித்து சுப நிகழ்ச்சியை தருவார்.

செல்வாக்கு மேம்படும். பணப்புழக்கம் அதிகரிக்கும். தேவைகள் பூர்த்தியாகும். எண்ணற்ற பல வசதிகள் கிடைக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு உயர்வு தருவார்.

பொதுவாக கோச்சார பலனில் ஒரு கிரகத்தை மட்டும் கணக்கில் எடுத்துக் கொண்டு பலனைப் பார்க்கக் கூடாது. மற்ற முக்கிய கிரகங்களையும் கணக்கில் கொள்ளவேண்டும். அந்த வகையில் நாம் ஏற்கனவே கூறியபடி சனி பகவான் 5ஆம் இடத்தில் நிலை கொண்டே இருப்பார்.

அவரால் சிறுசிறு பிற்போக்கான நிலை வரலாம். ஆனால் சனியின் 3ஆம் இடத்து பார்வை உங்களுக்கு பக்க பலமாக இருக்கிறது. இதன்மூலம் அவர் பொருளாதாரத்தை வளப்படுத்துவார். 2005 பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி ராகு–கேது பெயர்ச்சி நடக்கிறது.

அப்போது ராகு உங்கள் ராசிக்கு வருகிறார். அதன்பின் அவரால் இருந்து வந்த குடும்பப் பிரச்சினை மறையும். ஆனால் அவர் அதிக அலைச்சலைத் தருவார். அதேநேரம் கேது உங்கள் ராசிக்கு 7ஆம் இடத்திற்கு வருவார்.

இதுவும் சிறப்பான இடம் என்று சொல்ல முடியாது. ஆனால், கேது இடம் மாறுவதால் உடல்நலம் பூரண குணம் அடையும். எது எப்படியானாலும் குருவின் பக்க பலத்தாலும் சனியின் பார்வையாலும் வளம் கிடைக்கும்.

மேற்கண்ட நிலையில் இருந்து பொதுவான பலனை இனிக் காணலாம்.

உறங்கிக் கொண்டிருந்த நீங்கள் விழித்து விட்டீர்கள். உற்சாகமான பலனைக் காண தொடங்கலாம். பட்ட கஷ்டங்கள் அனைத்தும் பனிபோல் விலகும். வாழ்க்கையில் வசந்தத்தை எதிர்நோக்கலாம்.

சோதிட வித்தகர்
**காழியூர் நாராயணன்**

எடுத்த காரியம் கைகூடும். பணப்புழக்கம் அதிகரிக்கும். தேவைகள் பூர்த்தியாகும். மதிப்பு மரியாதை சிறப்பாக இருக்கும். செல்வாக்கு மேம்பாடும். உங்கள் சொல்லுக்கு ஊரே கட்டுப்படும் நிலை உருவாகும்.

குடும்பம்– குதூகலம் ஏற்படும். வெகு நாள்களாக தடைபட்டு வந்த திருமணம் நடைபெறும். சுபநிகழ்ச்சிகள் நிகழும். விருந்து விழா என சென்று வருவீர்கள். கணவன்–மனைவி இடையே இருந்த பிரச்சினை பெப்ரவரிக்கு பிறகு மறையும்.

அதன் பிறகு குடும்பம் ஒன்றுபடும். வீட்டுக்கு தேவையான ஆடம்பரப் பொருள்களை வாங்குவீர்கள். சிலர் புதிய வீடு கட்ட வாய்ப்பு உண்டு. அல்லது வசதியான வீட்டுக்கு குடிபுகுவர். உறவினர்கள் வகையில் அனுகூலமான போக்கு காணப்படவில்லை.

உத்தியோகம்– கடந்தகால கசப்பான நிலையில் இருந்து விடுபடுவீர்கள். நல்ல வளர்ச்சி காணலாம். உங்கள் முன்னேற்றத்திற்குத் தடையாக இருந்தவர்கள் தவறை உணர்ந்து உங்களிடம் சரணடைவர். பதவி உயர்வு கிடைக்கும்.

வியாபாரம்– நல்ல வருமானத்தைக் காண்பர். புதிய தொழில் தொடங்கலாம். வேலைஇன்றி இருப்பவர்கள் தொழில் தொடங்குவதன் மூலம் நல்ல வளத்தைக் காணலாம். லாபம் அதிகரித்துக் கொண்டே இருக்கும். கூட்டாளிகளிடையே ஒற்றுமை ஏற்படும்.

உடல்நலம்– சிறப்படையும். கேதுவால் பித்தம், மயக்கம், சளி தொடர்பான உபாதைகள் குணம் ஆகும். விபத்து பயம் நீங்கும்.

(முற்றும்)

# பதவியுயர்வுக் குளறுபடிகளுக்கு பொலீஸ் திணைக்களம் பொறுப்பல்ல

## பொலீஸ்மா அதிபர் தெரிவிப்பு

பொலீஸ் திணைக்களத்தினால் பொலீஸ் அதிகாரிகளுக்கு அண்மையில் வழங்கப்பட்ட பதவியுயர்வுகளில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல் மோசடிகளுக்கு தேசிய பொலீஸ் ஆணைக்குழு மீதோ பொலீஸ் திணைக்களத்தையோ குற்றம் சுமத்தமுடியாது எனப் பொலீஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா தெரிவித்தார்.

பொலீஸ் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்:

கடந்த இரு தசாப்தங்களாக பொலீஸ் திணைக்களத்தினால் எந்தப் பதவி உயர்வும் வழங்கப்படவில்லை. ஒவ்வொரு பொலீஸாருக்குமான தனிப்பட்ட கோவைகள் கூட ஒழுங்காகப் பேணப்படவில்லை.

மேலும் கடந்த காலங்களில் பொலீஸார் ஒரு இடத்தில் வேலை செய்வதும் பிறிதொரு இடத்தில் சம்பளம் பெறுவதுமாக இருந்தனர்.

இவ்வாறானதொரு நிலைமைக்கு நிர்வாகச் சிக்கல்களும், சீர்கேடுகளுமே காரணமாகும் எனப் பொலீஸ் மா அதிபர் தெரிவித்தார்.

அத்துடன், இந்த விடயங்கள் தொடர்பாக இதுவரை சுமார் 30 முறைப்பாடுகள் பொலீஸ் திணைக்களத்திற்குக் கிடைத்தன எனவும் தேசிய பொலீஸ் ஆணைக்குழுவுடன் இது தொடர்பாகக் கலந்துரையாடி இதற்கான சரியான தீர்வுகாணப்படும் என்றும் பொலீஸ்மா அதிபர் கூறினார்.

அண்மையில் தேசியப் பொலீஸ் ஆணைக்குழுவினரினால் 143 பொலீஸ் இன்ஸ்பெக்டர்களுக்கு சிரேஷ்ட பொலீஸ் இன்ஸ்பெக்டர்களாக பதவியுயர்வுகள் வழங்கப்பட்டன.

இந்தப் பதவி உயர்வுகளுக்கான தகவல்களைப் பொலீஸ் திணைக்களமே வழங்கியது. இவ்வாறு வழங்கப்பட்ட தகவல்கள் தவறானவை என்று தேசிய பொலீஸ் ஆணைக்குழுத் தலைவர் ரஞ்சித் அபேசூரிய பொலீஸ் திணைக்களத்தை குற்றஞ்சாட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (க-8)

### விழிப்புலன் வலுவிழந்தவர்களுக்கு வாழ்வகத்தில் அனுமதிகள்

சுன்னாகத்தில் உள்ள வாழ்வகம் விழிப்புல வலுவிழந்தோர் இல்லத்தில் பார்வைக் குறைபாடுடைய மாணவர்களுக்கு அனுமதிகள் வழங்கப்படவுள்ளன.

பார்வையற்ற கண்ணாடி அணிந்தும் எழுத, வாசிக்க முடியாத பார்வைக்குறைபாடுடைய பிள்ளைகள் இங்கு அனுமதிக்கப்படவுள்ளனர்.

தலைவர், வாழ்வகம், சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம் என்ற முகவரியில் அமைந்துள்ள மேற்படி இல்லத்துடன் தொடர்புகொண்டு விண்ணப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். (10-201)

### பிரெஞ்சு மொழி வகுப்பு ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஓக.7

யாழ். பிரெஞ்சு நட்புறவுக் கழகத்தில் விரைவில் பிரெஞ்சுமொழி வகுப்புகள் ஆரம்பமாக உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வகுப்பில் கலந்துகொள்ள விரும்புவோரை இல.83, பலாலி வீதி, கந்தர்மடம் என்ற முகவரியிலுள்ள அதன் அலுவலகத்தில் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். பிரெஞ்சு நட்புறவுக் கழகம் பிரெஞ்சு மொழி கற்பித்தலுடன் கலை, கலாசார நடவடிக்கைகளை முன்னெடுத்தலையும் நோக்காகக் கொண்டு இயங்கும். (9)

# கிறிஸ்தவ தேவாலயங்களின் புனரமைப்புக்கு நிதி வழங்க அமைச்சரவை அங்கீகாரம்

கிறிஸ்தவ விவகார அமைச்சரின் சிபார்சின் பேரில் வடபகுதியில் சேதமடைந்த கிறிஸ்தவ ஆலயங்களின் புனரமைப்புக்கு நிதி வழங்குவதென அமைச்சரவை முடிவுசெய்துள்ளது.

கடந்த புதன்கிழமை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் கிறிஸ்தவ ஆலயங்களின் புனரமைப்புக்கு 48 லட்சத்து 40ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்ததெனவும் -

கிறிஸ்தவ விவகார அமைச்சரின் சிபார்சின் பேரில் யாழ்ப பாணம், பள்ளிக்குடா, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய இடங்களில் உள்ள ஆலயங்களுக்கு நிதியைப் பகிர்ந தளிப்பது என்றும் - தீர்மானிக்கப்பட்டது.

அமைச்சரவையில் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய முக்கிய தீர்மானங்கள் வருமாறு:-

☆ *அதிவேகப் பாதை அபிவிருத்திக்கு 471 கோடி 90 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு:-*

பிரதமரும் பெருந்தெருக்கள் போக்குவரத்து அமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷவின் சிபார்சுகளுக்கமைய பேஸ்லைன வீதி அதிவேகப் பாதை அபிவிருத்தியின் மூன்றாவது கட்ட வேலைகள் ஆரம்பிக்கப்படும். ஹைலெவல் ரோட்டில் இருந்து ரத்மலானை சந்தி வரையிலான பாதை இதன்கீழ் அபிவிருத்தி செய்யப்படும். இதற்கான செலவுகளாக 471 கோடி 90 லட்சம ரூபா அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

☆ *அரசகாணிகள் மோசடி தொடர்பான விசாரணைகள் பொலீஸாரிடம் ஒப்படைப்பு:-*

காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்த மான 3124 ஹெக்டேயர் காணிகள் எந்தவிதமான நடைமுறை ஒழுங்குவிதிகளையும் கடைப்பிடிக்காமல் அரசியல்வாதிகளுக்கும் அவர்களின் உறவினர் களுக்கும் மற்றும் ஆதரவாளர்களுக்கும் வழங்கப் பட்டுள்ளன. இதுவரை இதுபோன்ற 528 சம்பவங் கள கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் முன்னாள் காணி அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன, முன்னாள் காணி சீர்திருத்த ஆணைக்குழுத்தலைவர் ஆகியோர் சம்பந்தப்பட்டிருககிறார்கள எனத் தெரியவந்துள்ளது. எனவே, உண்மையான நிலையை அறிய இந்த மோசடி தொடர்பான விசாரணைகள் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்படும்.

☆ *நில அளவையாளர் பட்டம் பெற்றவர்களுக்கு உடனடி நியமனங்கள்:*

சப்ரகமுக பல்கலைக்கழகத்தில் நிலஅளவையாளர்களாகப பட்டம்பெற்றவர்கள் அனைவருக்கும் நில அளவைத் திணைக களத்தில் நியமனங்கள் வழங்கப்படும். மூன்றுமாதப் பயிற்சிக குப் பின் நில அளவையாளர் இரண்டாம், மூன்றாம் தரத்தில் நிரந்தர நியமனங்கள் வழங்கப்படும். இத்தரத்திலான உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் அனைத்துச் சலுகை களும் இவர்களுக்கு வழங்கப்படும்.

☆ *கண்டிவாவி அபிவிருத்திக்கு ஆறரைக் கோடி ரூபா நிதி ஒதுக்கீடு:*

பல வருடங்களாக எந்தவிதமான அபிவிருத்தி நடவடிக்கை களும் மேற்கொள்ளப்படாமல் கண்டிவாவி சேதமடைந்த நிலையில் இருக்கின்றது. அப்படியே அதைவிட்டுவிட்டால் அது பாரிய பின்விளைவுகளையும் ஏற்படுத்தும். எனவே, உடனடியாக இவ்வாவியைப் புனரமைப்புச்செய்யவேண்டும். புனரமைப்புப் பணிகளுக்கு ஆறரைக்கோடி ரூபாவை வழங்க அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. (எ-க)

## ஆசிரிய கலாசாலைப் பரீட்சைகள்

யாழ்ப்பாணம்,ஓக7

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை யின் இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்களுக கான இறுதிப் பரீட்சை எதிர்வரும் 21ஆம் திகதி முதல் 28 ஆம திகதி வரையும் -

முதலாம் வருட இறுதித்தேர்வு எதிர் வரும் 30ஆம், 31ஆம் திகதிகளிலும் கலா சாலையில் நடைபெறும என்று அதிபர் ஆர்.சதா சிவமூர்த்தி அறிவித் துள்ளார். (10)

## இடமாற்றம்

தென்மராட்சி,ஓக.7

பளை ஆஸ்பத்திரி யில் பொறுப்பதிகாரி யாகக் கடமையாற் றிய டாக்டர் திருமதி கே.நடராசா புன்னா லைக்கட்டுவன் மத்திய மருந்தகத்திற்கு இட மாற்றம் செய்யப்பட் டுள்ளார்.

இவரின் இடத் திற்குத் தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையில் கடமை யாற்றிய டாக்டர் திருமதி செல்வராசா இடமாற்றம் செய்யப் பட்டுள்ளார். (10-117)

## ஆலயத் தொண்டர் கௌரவிப்பு

கோப்பாய்,ஓக.7

கோப்பாய் கண் ணகை அம்மன் ஆல யச் சுற்றாடலில் முப் பதுக்கு மேற்பட்ட மரக்கன்றுகளை நட்டு அவற்றைப் பெரிய விருட்சங் களாக வளர்த்த கோப்பாய் வில்லை யடியைச் சேர்ந்த ஆலயத் தொண்டர் க.வீரவாகுதேவர் அண்மையில் நடை பெற்ற ஆலய விழா வில் வைத்துப் பொன னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டார்.

இந்த மரங்களில் பெரும்பாலானவை 1994ஆம் ஆண்டு தமி ழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத் தால் மானியமாக வழங்கப்பட்டவை யாகும். (10-72)

---

## இரண்டாவது ஆண்டு நினைவலை

தோற்றம் 27 - 05 - 1959



மறைவு 01 - 08 - 2002

### நட்சத்திரம் விமலா

(வர்த்தகத் திணைக்கள உத்தியோகத்தர்)

திதி: 07-08-2004

அன்பினால் உயிரில் நிறைந்த மனைவியே!
பாசத்துடன் அரவணைத்த அன்புத் தாயே!
ஒளி விளக்காய்த் திகழ்ந்த மகளே!
வழி காட்டியாய் வாழ்ந்த சகோதரியே!
எம் இதயத்தில் வைத்து வணங்குகின்றோம்
நீங்கா நினைவுடன்!

கணவர், பிள்ளைகள், தாய், சகோதரர்கள்.

*நீர்வேலி தெற்கு, நீர்வேலி.*

(34894)(42-21-19)

---





சிமெந்து உற்பத்தியில் நீண்டகால நிபுணத்துவமுடைய
லங்கா சிமெந்து நிறுவனம்
உயர்தர நிர்ணயத்திற்கமைவாக தரச் சான்றிதழ்பெற்ற
டயமண்ட் சிமெந்து
(பிரித்தானிய தரம் B.S.S.12-1991
இலங்கை தரக்கட்டுப்பாடு சான்றிதழ் S.L.S. 107, கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் N.B.R.O., யாழ்ப்பாணம் கட்டட திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டது).

நேரடி விநியோகம் இலவசம்
தேவைகளுக்கு/விற்பனைக்கு அழையுங்கள்........
தொலைபேசி இலக்கம்: 222 - 5574

டயமண்ட் சிமெந்து

Lanka Cement

லங்கா சிமென்ட் லிமிட்டட்,
விற்பனை நிலையம்
இனுவில், கொக்குவில்.

(சி-36444)(34)


---


யாழ்ப்பாணத்தில் SAAMSTECH இன்

## ஆங்கில மற்றும் சிங்கள நேரடி வகுப்பு

இன்று இலங்கையில் புதிய முறையிலான இலகுவான ஆங்கில வகுப்பினை 35000 பேருக்கு மேல் வழங்கிய சாம்ஸ்டெக் நிறுவனத்தினால் முதல் முறையாக யாழ்ப்பாணத்தில் நேரடி ஆங்கில மற்றும் சிங்கள வகுப்புகள் ஆரம்பிக்கப்படுகிறது.

நீங்கள் விரும்பிய நாள்களில் காலை 8.00 மணி முதல் மாலை 8.00 மணி வரை உங்களுக்கு வசதியான நேரங்களில் வாரங்களில் மூன்று நாள் வீதம் தினமும் 2 மணிநேரம்.

(சனி, ஞாயிறு வகுப்புகளும் உண்டு)
முழுமையாக கதைக்கலாம்
பாடநெறியின் முடிவில் டிப்ளோமா சான்றிதழ்

காலம்: 2 மாதங்கள்
கட்டணம்: ஆங்கிலம் 6000/-, சிங்களம் 4000/-

SAAMSTECH
Psalm Institute of Engineering and Technology
22-¼, Galle Road, Dehiwala
5540200, 0714104100


குறிப்பு:
தேசிய ஆங்கில டிப்ளோமாவிற்கான அடுத்த தொகுதி பாடப்புத்தகங்கள் 6ஆம்,7ஆம்,8ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் விநியோகிக்கப்படவுள்ளது.

(சி-36425) (26-19)


---

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 10 - 04 - 1956



விண்ணில் 31 - 07 - 2002

### அமரர் மரியநாயகம் யோகநாதன்

திதி: 07.08.2004

அன்புத் தெய்வமே! அப்பா!
ஓயாது எம் துயரம்!

மனைவி, பிள்ளைகள்.

*சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய்.*

(34947)(34-21-19-17)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 19 - 04 - 1966



உதிர்வு 25 - 07 - 2003

### அமரர் வல்லிபுரம் நாகேஸ்வரன்

திதி: 07-08-2004

எம் இதய தெய்வமே!
ஆனதே ஆண்டு ஒன்று
ஆறவில்லை எம் துயர் ஈரவிழி என்ன
இன்னும் காயவில்லை ஓராண்டுகள் என்ன
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்கள்
நினைவுகள் என்றும் அழியவே அழியாது!
*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

உங்கள் பிரிவால்:
மனைவி, அக்காமார், அத்தான்மார்.
சவூதியில் இருக்கும் தம்பி,
மச்சான்மார், மச்சாள்மார்,
மருமக்கள், உற்றார், உறவினர்.

*முத்துமாரியம்மன் கோயிலடி, அல்வாய்.*

(34932)(21-19)

---

## மரண அறிவித்தல்

### பொன்னையா சுந்தரலிங்கம்



சாவகச்சேரி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சுந்தர லிங்கம் (S.P.S.) அவர்கள் 04.08.2004 புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - பொன்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும புனிதவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பொன்னையா - வள்ளிப்பிள்ளை தம்பதியின் அன்பு மருமகனும் Dr.பிறேம்ராஜ் (அமெரிக்கா), Dr.பிறேமகிருஸ்ணா (தேசிய வைத்தியசாலை, கொழும்பு), கலாநிதி பிறேமசிறி (பொறியியலாளர், கனடா), பிறேமசீலன் (சுவிஸ்), Dr.பிறேமினி (போதனா வைத்தியசாலை, கண்டி) ஆகியோரின் அன்புத் தந்தையும் Dr.தியாகசீலி (அமெரிக்கா), ஜெயசிறி, Dr. அனுஷியா (அமெரிக்கா), தவமலர் (சுவிஸ்), Dr.ராஜேந்திரன் (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சரவணமுத்து (கனடா), தவமணிதேவி,. தியாகராஜா (Chairman) பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்), காலஞ்சென்ற இராசம்மா, பூமணிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சியாமளி, ஆரபி, வீதுரன், பிரவீண், அபிர்தன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.08.2004) ஞாயிற்றுக் கிழமை 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*மடத்தடி, சாவகச்சேரி வடக்கு,சாவகச்சேரி.* (34915) (24-21-11-18)

தகவல்: குடும்பத்தினர்.

# ஜே.வி.பியின் நாடாளுமன்றச் செயற்பாடுகள் சாத்தான்கள் வேதம் ஓதுவதற்கு ஒப்பானவை



## முன்னாள் அமைச்சர் மஹிந்த விஜேசேகர சாட்டை

ஜே.வி.பியினரால் 38 வங்கிகளில் கொள்ளையடிக்கப்பட்ட பலகோடி ரூபா பெறுமதியான தங்கம் எங்கே?

"எனது வீட்டைக் கொள்ளையடித்து, எனது சகோதரியின் தங்க ஆபரணங்களையும் அபகரித்துச் சென்றவர்கள் இப்போது இந்தச் சபையில் வந்து அமர்ந்து கொண்டு வீராப்புப் பேசுகின்றனர். இது சாத் தான்கள் வேதம் ஓதுவதற்கு ஒப்பாக இருக் கின்றது."

- இவ்வாறு முன்னாள் கடற்றொழில் நீரியல்வள அமைச்சர் மஹிந்த விஜேசேகர ஜே.வி.பியினருக்குச் சாட்டையடி கொடுத்தார்.

கடந்த இரண்டு தினங்களாக களை இழந்து போயிருந்த நாடாளுமன்றம் நேற்று முன்தினம் மீண்டும் களை கட்டியது. முஷ்டியை முறுக்கி மல்யுத்தம் புரிய அரச மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாராகினர்.

சபையில் அமைதியை ஏற்படுத்துவதற்கு சபாநாயகர் பெரும் சிரமப்பட வேண்டியவரானார்.

ஆளும் கட்சியின் பின்வரிசை உறுப்பினர்கள் சபையையே ஒரு சந்தைக் கடையாக்கி விட்டனர். இவர்கள் போட்ட கூச்சலில் பேசும் நபர் யார், அவர் என்ன பேசுகிறார் என்பதும் புரியவில்லை.

கடந்த புதன்கிழமை முன்னாள் அமைச்சர் மஹிந்த விஜேசேகர சபையில் இல்லாதபோது, தற்போதைய கடற்றொழிலியல், நீரியல்வள அமைச்சரும் ஜே.வி.பி. பிரமுகருமான சந்திரசேன விஜேயசிங்க பல்வேறு குற்றச்சாட்டுக்களைச் சுமத்தினார்.

அரசுக்குச் சொந்தமான பொருள்களை அமைச்சர் விஜேசேகர மீண்டும் ஒப்படைக்கவில்லை என்று குற்றஞ்சாட்டி 70 வகையான பொருளகளின் பட்டியலை அவர் அப்போது சபையில் வாசித்தார்.

இவ்விடயம் தொடர்பாக சபாநாயகரின் அனுமதியுடன் முன்னாள் அமைச்சர் மஹிந்த விஜேசேகர நேற்றுமுன்தினம் சபையில் விளக்கம் அளித்தார்.

கொலைகாரர்களும் கொள்ளைக்காரர்களும் இன்று சபைக்கு வந்துவிட்டனர். அது ஒரு விபத்து.

ஜே.வி.பியினர் தேசிய சொத்துக்களைத் தவைத்துக் கொளுத்தினர், வங்கிகளைக் கொள்ளையடித்தனர். பொதுமக்களின் உடைமைகளைச் சூறையாடினர்.

பதிவுசெய்யப்பட்ட புகார்களின்படி 38 வங்கிகளில் கோடிக் கணக்கான பணத்தையும் தங்கத்தையும் கொள்ளையடித்தவர்கள் ஜே.வி.பியினர், இப்போது அவற்றை எங்கே பதுக்கி வைத்திருக்கிறார்கள்? இப்போது நாடாளு மன்றத்துக்கு வந்து ஊளையிடுகின்றார்கள். நான் உங்களைப் போல் பிச்சைக்காரன் அல்லன் அரச சொத்துக்களைக் கொண்டு போக வேண்டிய தேவை எனக்கு இல்லை.




நான் அமைச்சராக இருந்தபோது கொரிய நிறுவனம் பெறுமதி மிக்க கணனிகளை எனக்குத் தனிப்பட்ட முறையில் அன்பளிப்பாக வழங்கியது. நான் அவற்றை எனது வீட்டுக்குக் கொண்டுபோகவில்லை. எனது தொகுதியல் உள்ள பிரதேச சபைகளுக்கும், பொலீஸ நிலையங்களுக்கும் வழங்கியுள்ளேன்.

ஜே.வி.பியினர் எனது வீட்டைச் சூறையாடினார்கள். என் சகோதரியின் வீட்டைக் கொள்ளையடித்து, தங்க ஆபரணங்களை அபகரித்துச் சென்றனர். இப்போது போதி மாதவன்கள் போல் பேசுகின்றனர். - என ஜே.வி.பியினருக்குச் சாட்டையடி கொடுத்தார் முன்னாள் அமைச்சர் மஹிந்த விஜேசேகர.

இவர் பேசும்போது ஆளும் கட்சி உறுப்பினர்கள் கூச்சலிட்டுக் குழப்பினர். சபாநாயகரின் கட்டளைகளுக்குக் கட்டுப்படவில்லை. இதனால் ஆளும்கட்சி உறுப்பினரான மேர்வின் சில்வாவை சபையில் இருந்து வெளியேற்ற நேரிடும் எனச் சபாநாயகர் எச்சரிக்கை விடுத்தார்.

இந்தச் சச்சரவுகள் ஓரளவு தீர்ந் தபோது அனுரா - கருணா விவகாரம் சபையில் அமளி துமளியை ஏற்படுத்தியது. கருணாவை அனுரா சிங்கப்பூருக்கு அழைத்துச் சென்றுவிட்டார் எனக கடந்த மாதம் நாடாளு மன்றத்தில் தமிழ்க் கூட்டமைப்பின் எம்.பி.சிவாஜிலிங்கம் தெரிவித்திருந்தார். இதற்குப் பதிலளிக்கும் விதமாக ஒரு மணித்தியாலம் தனக்கு ஒதுக்கித் தருமாறு முன்கூட்டியே சபாநாயகரிடம் கேட்டதற்கு அமைய அனுராவுக்குப் பேச அனுமதி அளித்தார் சபாநாயகர்.

அவர் உரையாற்றும்போது தனது பெயருக்கும் தனது குடும்பத்துக்கும் அபகீர்த்தி ஏற்படும் வகையில் சிவாஜிலிங்கம் நடந்துள்ளார் என்றும் கருணா விவகாரத்தைத் தன்னோடு சம்பந்தப்படுத்தியிருப்பதால் தனது உயிருக்கு ஆபத்து என்றும் அவர் சபாநாயகரிடம் பிரஸ்தாபித்தார். அவர் தனது உரையில் தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், மாவை சேனாதிராஜா மற்றும் ஜோசப் பராராஜசிங்கம் போன்றோரைப் போற்றவும் தவறவில்லை. சிவாஜிலிங்கம் தற்செயலாகக் கூட்டமைப்புக்குள் புகுந்துகொண்டவர் அவர் கூறிய கூற்றை பிரபாகரனும் நம்பமாட்டார் - என்றார்.

முப்பதுக்கும் மேற்பட்ட தற்கொலைக் குண்டுதாரிகள் கொழும்பில் ஊடுருவியுள்ளனரா என்ற தனது சந்தேகத்தையும் வெளியிட்டார் அனுரா. அவரது உரையைத் தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் மிகவும் அமைதியாக அவதானித்துக்கொண்டிருந்தனர்.

'லங்காதீப' பத்திரிகையைக் கடுமையாகச் சாடிய அவர், முன்னாள் அமைச்சர் ஜோன் அமரதுங்கவைக் குற்றஞ்சாட்டவும் தவறவில்லை. இடைக்கிடை ஜோன் அமரதுங்க மீது குற்றங்கள் சுமத்திய அவர், ஐ.தே.கவில் இருந்தபோது ஜோன் அமரதுங்கவுடன் கியூபாவுக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்த சமயத்தில் அவர் ஹோட்டலில் இருந்து மாயமாகிப் போன சுவாரஸ்யமான கதையொன்றையும் கூறிச் சபையைச் சிரிக்கவைத்தார்.

தமது உரையை அவர் முடித்துக்கொண்டு இருக்கையில் அமரவும் எதிர்த்தரப்பிலிருந்து ஆவேசமான ஒரு தமிழ்க் குரல் எழுந்தது. சபையில் உள்ளவர்களின் கவனமும் கலரியில் இருந்தவர்களின் கவனமும் அவர் மீது திரும்பின. தனது சிறப்புரிமை மீறப்பட்டுவிட்டது எனச் சத்தமிட்டுக்கொண்டு தனது இருக்கையில் இருந்து கீழே இறங்கிவந்தார் கூட்டமைப்பு எம்.பிசிவாஜிலிங்கம், அனுராவின் உரைதொடர்பாகத் தான் விளக்கம் தரவேண்டும் எனவும் தனக்கு அவகாசம் வேண்டும் எனவும் சபாநாயகரிடம் அவர் கேட்டார். அதற்கு சந்தர்ப்பம் தரமுடியாது எனச் சபாநாயகர் உறுதிபடக்கூறினார். இந்த உரையாடல்கள் இடம்பெற்ற அந்த நேரத்துக்குள் சிவாஜிலிங்கம் சபாநாயகரின் ஆசனத்துக்கு அண்மித்த பகுதியை எட்டி இருந்தார்.

அச்சமயத்தில் ஆளும் தரப்பினர் பக்கம் இருந்து முஷ்டியை முறுக்கிக்கொண்டு சிவாஜிலிங்கத்தைத் தாக்குவதற்கு ஓடிச்சென்றார் மேர்வின் சில்வா. இருவரும் மோதிக்கொள்வர் என்ற நிலை ஏற்பட்டதைக் கண்டு சபையின் இருபகுதியிலும் இருந்து உறுப்பினர்கள் சபா மண்டபத்துக்கு வந்தனர். நாடாளுமன்றில் மீண்டும் ஒரு மோதல் நிலையேற்பட்டுவிடுமோ என்ற ஓர் அச்சம் அங்கு காணப்பட்டது. அமைச்சர் திஸ்ஸ கரலியத்த, மேர்வின் சில்வாவைத் தொடர்ந்து செல்லவிடாமல் தடுத்தார். மறுபுறம் மஹிந்த விஜேசேகர சிவாஜிலிங்கத்தைத் தடுத்தார்.

சபையைக்கட்டுப்படுத்த முடியாத சபாநாயகர், ஐந்து நிமிடம் சபையை ஒத்திவைக்கிறார் என அறிவித்தார். எனினும், சுமார் 15 நிமிடங்களின் பின்னரே மீண்டும் சபை கூடியது. இதற்கிடையில் அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோ புள்ளே மற்றும் சில ஆளும்தரப்பு எம்.பிக்கள், தமிழ்க் கூட்டமைப்பின் எம்.பிக்களிடம் சென்று சமரசத்தில் ஈடுபட்டனர். இதனையடுத்து சிவாஜிலிங்கம் தனது செயலுக்கு சபாநாயகரிடம் மன்னிப்புக் கோரினார்.

இந்த நேரத்தில்தான் ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார் அனுரா பண்டாரநாயகா. சபாநாயகரைத் தாங்கச்சென்ற சிவாஜிலிங்கத்தை மேர்வின் சில்வா தடுக்கவே சென்றார் என்று அவர் கூறினார். உடனடியாக சிவாஜிலிங்கத்தை சபையைவிட்டு வெளியேற்றுங்கள் என்று சபாநாயகரிடம் அவர் கோரினார். அதைச் சபாநாயகர் செவிமடுக்கவில்லை.

இப்படியோர் அமளிதுமளி சபையில் ஆரம்பத்தில் ஏற்பட்டபோதும் மதிய உணவுக்குப் பின்னர் சோபையிழந்தே காணப்பட்டது.

(க-8)

# புலிகள், ஜே.வி.பியுடன் சுதந்திரக்கட்சியை சிண்டு முடிந்துவிடப் பார்க்கிறது ஐ.தே.க.



## அமைச்சர் பெர்னாண்டோபுள்ளே குற்றச்சாட்டு

விடுதலைப் புலிகளையும் ஜே.வி.பியினரையும் சுதந்திரக் கட்சியுடன் சிண்டுமுடிந்து வேடிக்கை பார்க்க ஐதேக. முயல்கிறது. தோல்வியடைந்தவர்களுடன் கைகோக்க நாம் தயாரில்லை.

- இப்படிக் கூறுகிறார் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே.

கடந்த புதன்கிழமை நாடாளுமன்றத்தில் சபை ஒத்திவைப்பு வேளையில் பெற்றோல் விலை அதிகரிப்புத் தொடர்பான பிரேரணை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் மேலும் கூறியதாவது:

எமக்கு ஆதரவு தருவதாகக் கூறுகிறீர்கள். மறுபுறம் பெற்றோல் விலை அதிகரிப்பைக் கண்டித்து அரசைக் கவிழ்க்கும் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளீர்கள்.

எமது கூட்டை உடைக்க சதித்திட்டம் தீட்டுகிறீர்கள். பெற்ரோல் விலை உயர்வு உலக சந்தையின் அதிகரிப்புக்கு ஏற்பவே கூடியுள்ளது. கடந்த மார்ச் மாதம் முதல் இந்த அதிகரிப்பு ஏற்பட்டது.

நாம் தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவோம். எமது அரசுக்கு எதிராக மக்களை வீதியில் இறக்கிப் போராட்டம் நடத்தப்போவதாக ஐ.தே.கவினர் மிரட்டுகின்றனர். மக்கள் அவர்களுடன் வீதிக்கு இறங்கிப் போராடத் தயாராக இல்லை.

ஐ.தே.க. எமக்கு ஆதரவு வழங்குவதாகக் கூறுகிறது. நாம் ஐதே.கவின் ஆதரவை எதிர்பார்க்கமாட்டோம். எமக்கு அவர்களின் ஆதரவு தேவையும் இல்லை. விரைவில் ஜி.சீ.ஈ உயர்தரம்வரை படித்தவர்களுக்குத் தொழில் வழங்கவிருக்கின்றோம். அந்த வேலைவாய்ப்புக்கள் வழங்கி முடிந்தவுடன் மக்கள் அனைவரும் நம் பக்கமே இருப்பார்கள். கடந்த காலத்தில் ஐ.தே.கவின் கோட்டைகளாக இருந்த நீர் கொழும்பு, குளியாப்பிட்டி, கண்டி போனற இடங்களைக் கடந்த தேர்தல்களில் கைப்பற்றி சாதனை படைத்துள்ளோம் என அவர் மேலும் கூறினார்.



# தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்காமல் பொருளாதாரத்தை முன்னேற்ற முடியாது

## நாடாளுமன்றில் ரவிராஜ் எம்.பி.தெரிவிப்பு

தமிழர்களின் விவசாய நிலங்கள் இராணுவத்தினரின் சப்பாத்துக்களால் ஆக்கிரமிக்கப் பட்டுள்ளன. இச்சமயத்தில் நாட்டின் பொருளாதாரம் பற்றி இச்சபையில் பேசப்படுகிறது. தமிழரின் பிரச்சினையைத் தீர்க்காமல் பொருளாதாரத்தை முன்னேற்றமுடியாது.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சுங்கவரிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழர் கூட்டமைப்பு எம்.பியான என்.ரவிராஜ் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

வடக்கிலே தமிழர்களின் ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்களும் குடியிருப்புகளும் அரச படையால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. அந்த நிலங்கள் உடன் விடுவிக்கப்படல் வேண்டும்.

பொன்விளையும் பூமியாகத் திகழும் தமது சொந்த நிலங்களைப் பறிகொடுத்துவிட்டு இன்று தமிழர்கள் பரிதவிக்கிறார்கள். தமது நிலமும் குடியிருப்புகளும் தமக்குக் கிடைக்காதா என்ற ஏக்கத்துடன் வாழ்கின்றனர். சமாதான ரீதியாகத் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்போம் என்று கூறியவர்கள் கடந்த நான்கு மாதங்களாகப் பிரேத பரிசோதனை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். சமாதானம் மூலம் பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் இந்த நாட்டின் பொருளாதாரம் அதள பாதாளத்துக்குத் தள்ளப பட்டுவிடும் என்பதை வலியுறுத்திக்கொள்ள விரும்புகின்றேன.

எந்த அரசாக இருந்தாலும் சமாதான வழிகளில் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க முன்வருமானால் தமிழர் கூட்டமைப்பு அவர்களுக்கு முழுமையாக ஆதரவை வழங்கும் என்பதை உறுதிபடக் கூறுகிறேன்.

ஜே.வி.பி. சகோதரர்களே! உங்கள் தலைவர் ரோஹண விஜேவீர ஒரு மனிதப் பண்பாளர். வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்கு அவர் விஜயம் செய்தபோதெல்லாம் சுயநிர்ணய அடிப படையில் தமிழர் பிரச்சினை தீர்க்கப்படல் வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தார். அவர் கைது செய்யப்பட்டுக் கோட்டைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தபோது தமிழ் இளைஞர்கள் அவருக்கு உதவிசெய்தார்கள். அவரைப்போன்று தாடி வைத்துக்கொண்டார்கள். அப்படிப்பட்ட ஒரு தலைவர் கைதுசெய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டதற்கும் காரணம் இந்த பயங்கரவாதத் தடைச்சட்டம்தான். தமிழ் இளைஞர்கள் மட்டுமன்றி ஆயிரக்கணக்கான ஜே.வி.பி உறுப்பினர்கள் கொல்லப்பட்டதற்கும் இந்தச் சட்டமே காரணமாகும். எனவே, இந்தச் சட்டத்தை இல்லாதொழிக்க நீங்கள் பாடுபடாதது ஏன்?

ஸ்ரீலங்காப் பொலஸ் இன்ஸ்பெக்டர்கள் சங்கம் இந்தச் சட்டத்தை நீக்கக்கூடாது எனவும் அதைத் தொடர்ந்து பயன்படுத்தவேண்டும் எனவும் கோரியுள்ளது. இந்த நாட்டில் அமைதி ஏற்பட இடைக்கால நிர்வாகத் தன்னாட்சிசபை அமைக்கப்படுவது அவசியம். தமிழர்கள் தமது பிரதேசத்தை மீளக் கட்டியெழுப்ப இந்தத் தீர்வைத் தவிர வேறு ஒரு வழியும் கிடையாது. நாம் சமாதானத்தை விரும்புகின்றோம். மீண்டும் எம்மை யுத்தத்துக்கு அழைத்துச்செல்ல முயற்சிக்க வேண்டாம் - என்றார் அவர். (க-8)

# நுவரெலியா சோலை அனல் மின்நிலையம் நிறுவும் திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படும்

## கைத்தொழில் அமைச்சர் தெரிவிப்பு

நுரைச் சோலை அனல் மின்நிலையத்தை நிறுவ அரசு முன்வந்துள்ளது. விரைவில் அதற்கான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும்.

இப்படிக் கூறுகிறார் தொழில் அமைச்சர் அதாவுட செனவிரத்ன. மின்சார சபை சட்ட ஒழுங்கு விதிகளின் சட்டம் தொடர்பான விவாதம் கடந்த புதன்கிழமை நாடாளுமன்றில் நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் மேலும் கூறியதாவது :-

ரஷ்ய அதிபராக இருந்த தோழர் லெனின் இரண்டு விடயங்களுக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என வலியுறுத்தினார். அதில் முதலாவது விடயம்தான் நாட்டின் சகல பகுதிகளுக்கும் மின்சாரம் வழங்கப்பட வேண்டும் என்பதாகும். அவர் முழு ரஷ்யாவிலும் அதை அமுல் படுத்திக்காட்டினார்.

நுரைச் சோலை அனல் மின்னிலையம் அமைப்பது தொர்பாக இருந்து வந்த எதிர்ப்புக்கள் இப்போது குறைந்துள்ளன. சுற்றாடல் பாதிப்பு இல்லை எனக் கூறப்பட்டுள்ளது. எனவே, விரைவில் அந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. நாட்டில் முன்னேற்றம் ஏற்பட மின்சாரம் அத்தியாவசியமானது என அவர் மேலும் கூறினார். (க-8)

# வார இறுதியில் நடப்பவை...

யாழ்ப்பாணம்,ஓக.7

தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒழுங்கமைப்பின் ஏற்பாட்டில் லண்டன் சிறி கனகதுர்க்கை அம்மன் இலவச கணனிப் பயிற்சி நிலையத் திறப்புவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சாவகச்சேரியில் நடைபெறவுள்ளது. (எ.201)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஓக7

சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத்தின் பொதுச்சபைக் கூட்டம் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு சிவஸ்ரீ பரமேஸ்வர மனோகரக் குருக்கள் தலைமையில் பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தியிலமைந்துள்ள தலைமைச் செயலகத்தில இடம்பெறவுள்ளது. (எ-201)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஓக.7

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின விசேட பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மேற்படி சங்கப் பணிமனையில் நடைபெறும். (எ-201)

☆ ☆ ☆

தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும் (எ-201)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஓக.7

பி.எஸ்.எம்.எஸ். பட்டதாரிகளின் விசேட பொதுக கூட்டம் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கைதடி சித்த மருத்துவத்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ-201)

☆ ☆ ☆

குடத்தனை,ஓக.7

குடத்தனை தென்னிந்தியச் சபையின் கல்வி வளாக ஆங்கில மன்றம் நடத்தும் வருடாந்த ஆங்கில தினப்போட்டி நிகழ்வுகள் இன்று காலை மேற்படி திருச்சபை வளாகத்தில் நடைபெறவுள்ளன. (எ-78-201)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஓக.7

யாழ்.மத்திய கல்லூரியின் முறைசாராக் கல்விப் பிரிவில் வாகனச்சாரதி பயிலுநர் பயிற்சி நெறியை முடித்தவர்களுடைய ஆவணங்கள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குச் சரிபார்க்கப்பட்டு, பயிலுநர் கையொப்பமிட வேண்டியிருப்பதால் சாரதிப் பயிலுநர்களை கல்லூரிக்கு தவறாது சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான நிலைய முன்னோடிப் பரீட்சை எதிர்வரும் 14 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு யாழ். மத்தியகல்லூரியில் நடைபெறும். (எ-201)

☆ ☆ ☆

தென்மராட்சி,ஓக7

கைதடி சித்தமருத்துவ பீட மாணவர்களின ஏற்பாட்டில் சாவகச்சேரி றோ.க.த.க பாடசாலையில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மாணவர்களுக்கான சமூக மருத்துவம் தொடர்பான கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

தொடர்ந்து பிற்பகல் 2 மணிக்குப் பொது மக்களுக்கான மருத்துவ சிகிச்சை முகாமும் இடம்பெறவுள்ளது. (எ-117-201)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஓக.7

யாழ்.மாவட்டக் கிராம அலுவலர்களின் ஆற்றலை மேம்படுத்துவதற்கான பயிற்சி நெறியின் ஐந்தாவது தொகுதியினருக்கான பயிற்சிகள் இன்றும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 8.30 மணிமுதல் மாலை 5மணி வரை யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளன. (எ-139-201-175)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஓக.7

யாழ்.பல்கலைக்கழகத் திரைப்பட வட்டத்தினின் ஏற்பாட்டில் புகழ் பெற்ற கன்னடநெறியாளர் 'கிரிஷ்கர்னாட்' இயக்கத்தில் உருவான 'கனூறு ஹெக்கடித்தி' என்னும் கன்னடத் திரைப்படக்காட்சி நாளை ஞாயிற்றுக்கிழமை பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ-201-204)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஓக.7

வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று சனிக்கிழமை கல்லூரியின் ஒட்லி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தென்னிந்திய திருச்சபைப் பேராலயத்தில் காலை 9 மணிக்கு இடம்பெறும் வழிபாட்டைத் தொடர்ந்து 2004 - 2005ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகசபைத் தெரிவும், அமரத்துவமடைந்த கல்லூரிப் பழையமாணவர்களுக்கான ஆராதனையும் இடம்பெறும். (எ-185-201)

☆ ☆ ☆

பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபாவின் இளமைக கால அற்புத லீலைகள் மற்றும் பக்திப்பாடல்கள் அடங்கிய 'சீரடி சாயி - பர்த்தி சாயி (பாகம் II)' என்னும் தமிழ் மொழி மூல வீடியோ படக்காட்சி இன்று நடைபெறவுள்ளது.

திருநெல்வேலி இராமநாதன் வீதியில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தில் இந்தப் படக்காட்சி பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும். (ஐ)

குருநகர்,ஓக.7

யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு நிகழ்வு இன்று சனிக்கிழமை அதிபர் அருட்சகோதரி யோலண்ட் மத்தியாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது. (எ-51-201)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஓக.7

அகில இலங்கை டி.ஏ.எம் பட்டதாரிகள் வைத்திய சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30மணிக்கு லங்கா சித்த ஆயுர்வேத வைத்திய கல்லூரி மண்டபத்தில் டாக்டர் எஸ். பரமசிவம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது. (எ-201)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஓக.7

உயர் தேசிய கணக்கியல், உயர் தேசிய வர்த்தக முகாமைத்துவப் பட்டதாரிகளுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு உயர் தொழில்நுட்ப நிறுவன பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (3-201)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஓக.7

தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாலயத்தின் பெற்றோர் தின விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் மு.ஜெயகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கானை கோட்டக் கல்விப்பணிப்பாளர் எஸ். செல்லையா பிரதம விருந்தினராகவும், எஸ். பாலச்சந்திரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஓக.7

உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலையின் பரிசளிப்பு வைபவம் இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. (எ-201)

☆ ☆ ☆

வலிகாமம் தெற்கு,ஓக.7

அமரர் பிரம்மஸ்ரீ க.மங்களேஸ்வரக்குருக்களின் ஞாபகார்த்தமாக, காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் தேவஸ்தான குரு கலாநிதி பிரம்மஸ்ரீ க.வைத்தீஸ்வரக்குருக்கள் வெளியிடும் 'அபரக கிரியைகள் - சில விளக்கங்கள்' என்னும் நூலின் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நல்லூர் சிவன் கோயில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நியந்த்ரீயின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள இவ்வைபவத்துக்கு பேராசிரியர் ப.கோபால கிருஷ்ண ஐயர் தலைமை வகிப்பார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரம்மஸ்ரீ ஆ.சுப்பிரமணிய சர்மாவின் வரவேற்புரையும், இணுவில் காயத்திரிபீடம் பிரம்மஸ்ரீ தா.மகாதேவக் குருக்களின் நூல் அறிமுக உரையும் இடம்பெறும்.

காரைநகர் கலாநிதி தியாகராசா மத்திய மகாவித்தியாலய அதிபர் பண்டிதர் மு.க. வேலாயுதபிள்ளை சிறப்புரையாற்றுவார்.

நூலாசிரியர் பிரம்மஸ்ரீ ச.சோமாஸ்கந்தக் குருக்களின் ஏற்புரையைத் தொடர்ந்து நூலின் முதற் பிரதியை அரியாலை பிரம்மஸ்ரீ இ.சுப் பிரமணியக் குருக்கள் பெற்றுக்கொள்வார். (எ-152)

☆ ☆ ☆

மானிப்பாய்,ஓக.7

மானிப்பாய் மேற்கு திருவள்ளுவர் சனசமூக நிலைய முன்பள்ளிச் சிறார்களின் வருடாந்த விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு க.திருஞானசம்பந்தர் தலைமையில் மேற்படி நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது. (எ-90-201)



சமீபத்தில் யாழ்.வந்த கொழும்பு பங்குப் பரிவர்த்தனை பிரதிநிதிகள், யாழ்ப்பாண வர்த்தக கைத்தொழில் மன்றத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட ஆய்வுக் கருத்தரங்கில் கலந்துகொண்டனர்.

அந்த நிகழ்வில் யாழ்ப்பாண வர்த்தக கைத்தொழில் மன்றத்தின் தலைவர் ம.இராமதாஸ் உரையாற்றிக் கொண்டிருப்பதனையும், வலமிருந்து இடமாக மலிக் காதர் (இயக்குநர் - இலங்கை பிணைகள் பரிமாற்று ஆணைக்குழு), பாலித சில்வா குணவர்த்தன (இயக்குநர்நாயகம் - இலங்கை பிணைகள் பரிமாற்று ஆணைக்குழு), இராஜீவ பண்டாரநாயக்க (சிரேஷ்ட முகாமையாளர் - சந்தைப்படுத்தல், மனிதவள முகாமைத்துவம் - கொழும்பு பங்குப் பரிவர்த்தனை), பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை (யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்), வி.நிரஞ்சன் (நிதி முகாமையாளர் - யுரோவீல் முதலீட்டு நிறுவனம்) ஆகியோர் அமர்ந்திருப்பதனையும் படத்தில் காணலாம்.

## உடுவில் பிரதேச செயலர் பிரிவில் டெங்குநோய்த் தடுப்பு நடவடிக்கை

வலிகாமம்தெற்கு,ஓக7

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் டெங்குக காய்ச்சல் பரவுவதைத் தடுப்பதற்கு வேணடிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள், கிராம சேவையாளர்கள் ஆகியோருடன் விவசாய சம்மேளனங்கள், சனசமூக நிலையங்கள், பாடசாலைகள் ஆகியன இணைந்து இந்தக் காய்ச்சலைக கட்டுப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் எஸ்.திருவாகரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர், கிராம சேவையாளர்கள், விவசாய சம்மேளனங்களின் உறுப்பினர்கள், சனசமூக நிலையங்கள் மற்றும் ஏனைய சமாசங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள இக்கூட்டத் தில் கலந்துகொண்டனர்.

டெங்குக் காய்ச்சலைக் கட்டுப்படுத்துவதற்கு பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்வது என்று அந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

☆ பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களின் உதவியுடன் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவது தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்தவது.

☆ பிரதேச சபை ஊழியர்கள் மூலம் விழிபபுணர்வைத் ஏற்படுத்தக் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தல், விளம்பரங்களைப் பார்வைக்கு ஒட்டுதல்.

☆ பாடசாலைகள், நிறுவனங்கள் மற்றும் பொது இடங்கள் போன்றவற்றில் நுளம்புகள் பெருகக்கூடிய இடங்களை அடையாளம் காணுதல்.

☆ பிரதேச சபை தொழிலாளர்கள் மூலம் நகர வீதிகளில் குவிந்துள்ள கழிவுப்பொருள்களை அகற்றுதல்: வீதி ஓரங்களில் வளர்ந்துள்ள செடிகொடிகள் மற்றும் பற்றைகள் என்பவற்றை அழித்து துப்பரவு செய்தல்.

☆ நீர் தேங்கி நிற்கக்கூடிய பேணிகள், வெற்றுப் பாத்திரங்கள், ரயர்கள் போன்றவற்றை சேகரித்து அழிப்பதற்கு நிறுவனங்களதும் பொது மக்களினதும் ஒத்துழைப்பை பெற்று மேற் கொள்ளுதல். (8-152)

## வேலணை உள்ளூராட்சி விழாவில் விழிப்புலனிழந்தோரின் இன்னிசை

யாழ்.விழிப்புலன் வலுவிழந்தோர் சங்கத்தின இசை நிகழ்ச்சி ஒன்று அண்மையில் வேலணை பிரதேச சபையின் உள்ளூராட்சி வார இறுதி நாள் விழாவில் இடம்பெற்றது.

விழிப்புலன் இழந்த பாடகர்கள், இசையமைப்பாளர்களைக் கொண்ட 'சாகித்தியம்' என்னும் இசைக்குழுவினரின் இசை நிகழ்ச்சியே விழாவில் இடம்பெற்றது.

முதன்முதலாக தீவக மண்ணில் தங்களை அரங்கேற்றி உற்சாகமும் ஊக்கமும் அளித்தமைகாக சங்கத்தினர் வேலணை பிரதேச சபையினருக்கு நன்றி தெரிவித்தனர்.

வேலணை பிரதேச சபையின் உள்ளூராட்சி வார நிறைவு நாள் கடந்த மாதம் 26ஆம் திகதி திங்கட்கிழமை இரவு 7.00 மணி முதல் மறுநாள் செவ்வாய்க்கிழமை அதிகாலை 5 மணிவரை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் நடனம், நாடகம், இன்னிசை விருந்து, பரிசில்கள் வழங்குதல் என பல நிகழ்வுகள் இடம்பெற்றன. தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்றுறை துணைப் பொறுப்பாளர் (யாழ்.மாவட்டம்) செம்மணன் அதில் கலந்து சிறப்பித்தார். பிரதம விருந்தினராக ஊர்காவற்றுறை பிரதேச செயலர் ஜே.எக்ஸ் செல்வநாயகம் கலந்துகொண்டார். (ஐ)

### தெல்லிப்பழைக்கு புதிய பிரதேச செயலர்

தெல்லிப்பழை பிரதேச செயலாளராக திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் நியமிக்கப்பட்டுள்ளார். இதுவரை தெல்லிப்பழை பிரதேச செயலராகப் பதவி வகித்து வந்த கலாநிதி க.குணராசா யாழ்.மாநகர ஆணையாளராக நியமிக்கப்பட்டதை அடுத்து அவரது இடத்திற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவின் உதவிப் பிரதேச செயலராக பதவிவகித்த இவர், தெல்லிப்பழை பிரதேச செயலராக நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ-202,204)

## அமைதிப் பேச்சு விடயத்தில் ஜே.வி.பி. நிலையில் தளர்வு?

### பொறுப்புக்களை பகிர்ந்துகொள்ள புலிகளுக்கும் அழைப்பு

கொழும்பு,ஓக.7

அமைதிப்பேச்சுகளை மீளத்தொடங்குவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளும் அரசைப் போலவே பொறுப்புகளைப் பகிர்ந்துகொள்ள முன்வரவேணடும் என்று ஜே.வி.பி. அமைச்சர் அனுரகுமார திஸ்ஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இருதரப்பிலிருந்தும் அமைதிப்பேச்சின் பால பற்றுறுதி காணப்படவேண்டும். நாம் அமைதியில் பற்றுறுதி கொண்டுள்ளோம். ஐக்கிய மகக்கள் சுதந்திரமுன்னணி போதுமான அளவு தளர்வினைக் காட்டியுள்ளது. விடுதலைப் புலிகளும் அதன் தளர்வுப்பாட்டை வெளிப்படுத்துவதுடன அமைதிப்பேச்சுகள் தொடர்பாக அதன் பற்றுறுதியையும் வெளிப்படுத்தவேண்டும் என்று தெரிவித்துள்ளார் அமைச்சர் திஸ்ஸநாயக்க.

அரச பேச்சாளர் மங்கள சமரவீரவின் தலைமையில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவிக்கையில், விடுதலைப் புலிகளின் தளர்வுநிலைப்பாடு அரசியல் எதிரிகளையும் ஏனையவர்களையும் அவர்கள் தீர்த்துக்கட்டுவதில் வெளிப்படக் காணவில்லை.

பத்திரிகையாளர் கேள்வி ஒன்றுக்குப் பதில அளிக்கையில் காலத்தின் மாற்றத்துக்கு ஏற்ற வகையில் எந்தவொரு அரசும் தன்னை இணைத்துக்கொள்ள வேண்டும் - என்றார்.

எமது நிலைப்பாடு என்னவென்றால் இறுதித தீர்வோடு இணைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக அமைப்பு ஒன்றைப் பற்றிய பேச்சுகளை ஆரம்பிக்க நாம் தயாராய் இருக்கின்றோம் என்றார் அமைச்சர்.

அமைதிச் செயற்பாட்டை முன்னகர்த்தும் செயற்பாட்டில் அரசுக்கு உதவ ஜே.வி.பி. தன் நிலைப்பாட்டில் தளர்வு நிலையைக் கடைப்பிடிக்க விரும்புகின்றது என்று கூறிய அமைச்சர் 1995, 1997, 2000 ஆகிய ஆண்டுகளில் மக்கள் முனனணி முன்வைத்த முன்மொழிவுகளை கருத்தில் வைத்துக்கொண்டு புதிய சில யோசனைகளை அரசு தயாரித்துள்ளது. அதன்மீது கருத்துப் பரிமாறல் இடம்பெற்று வருகின்றது. அபிவிருத்தி, புனர்நிர்மாணம், மனிதாபிமான உதவிகள் மற்றும் இடைக்கால நிர்வாகம் முதலிய விடயங்களை அடிப்படையாக வைத்து இப்புதிய ஆலோசனைப் பொதி தயாரிக்கப்பட்டுள்ளது.

இவை நிரந்தரமானதும் நிலைத்திருக்கக்கூடியதுமான தீர்வினை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும் என்றும் தெரிவித்தார்.

புதிய யோசனைகள் பற்றிய விவரத்தை வெளியிட அமைச்சர் மறுத்துவிட்டார். ஆனால், அவை விரைவில் வெளியிடப்படும் என்று உறுதியளித்தார்.

அமைச்சர் சமரவீர கருத்து வெளியிடுகையில், போர்நிறுத்த உடன்பாடு நாட்டுத் தலைவரின் அங்கீகாரமின்றியே கையெழுத்திடப்பட்டிருந்தபோதிலும் அரசு அதனை நல்லமுறையிலேயே பேணிவந்துள்ளது என்றார். (ப)

# அமெரிக்காவை அல்லாட வைக்கும் இஸ்லாமியத் தீவிரவாதம் - ஈராக்

ஈராக்கில் கடந்த முதலாம் திகதி கிறிஸ்தவ தேவாலயங்களை இலக்கு வைத்துத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. ஈராக் வரலாற்றில் கிறிஸ்தவ தேவாலயங்களை இலக்காக தீவிரவாதிகள் கொள்வது இதுவே முதல் தடவையாகும்.

கடந்த வருடம் ஏப்ரல் மாதத்தில் சதாம் ஹுசைன் ஆட்சி அகற்றப்பட்டது. அதன் பின்னர் கிறிஸ்தவர்கள் - அவர்களது வர்த்தக நிலையங்களை - குறிவைத்துத் தாக்கப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. ஆனால், மதக் குறியடாக உள்ள - தேவாலயங்கள் தாக்கப்பட்டமை இதுவே முதல் தடவையாகும்.

ஈராக்கில் நிலைகொண்டிருக்கும் வெளிநாட்டுப் படைகளுக்கும், அவற்றின் அரவணைப்பில் உள்ள இடைக்கால அரசுக்கும் எதிராகக் கிளர்ச்சியாளர்கள் தாக்குதல்களை நடத்துவது ஒன்றும் புதிதல்ல. ஆனால், கிறிஸ்தவ தேவாலயங்கள் மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல்கள் ஈராக்கில் வாழும் கிறிஸ்தவர்களிடம் மட்டுமன்றி மத்திய கிழக்கில் - குறிப்பாக அரபு நாடுகளில் வாழும் கிறிஸ்தவர்கள் மதத்தியில் எதிர்காலம் குறித்த அச்ச உணர்வை பரப்பியுள்ளது. இந்த அச்சம் அரபு நாடுகளில் வாழும் மற்றைய சிறுபான்மை இன, மதத்தவர்களிடமும் தொற்றுநோயாகப் பரவி அவர்களை வாட்டுகிறது. வளர்ந்து வரும் இஸ்லாமியத் தீவிரவாதத்தின் பசிக்குத் தாமும் இரையாக நேரிடலாம் என்று அவர்கள் அஞ்சுகின்றனர்.

### ஈராக்கிய கிறிஸ்தவர்கள்

ஈராக்கில் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அந்தப் பிரதேசம் மொசப்பத்தேமியா என்ற புராதன நகராக இருந்த காலத்தில்



அங்கு கிறிஸ்தவர்கள் வாழ்ந்துவருகின்றனர் என்பது சரித்திரம்.

பெரும்பாலான ஈராக்கிய கிறிஸ்தவர்கள் சல்டியன் என்ற கத்தோலிக்கர்கள். இவர்கள் பாப்பரசரின் நிர்வகத்தை அங்கீகரிப்பவர்கள் ஆயினும் சுயாதீன மதப்பிரிவாகவே செயற்படுகின்றனர். இவர்களில் கணிசமானவர்கள் இயேசுபிரானின் தாய்மொழி என்று நம்பப்படும் அரமைக் என்ற மொழியையே இன்றும் பேசுகின்றனர். ஈராக்கிய கிறிஸ்தவர்களில் குறிப்பிடத்தகுந்த மற்றொரு பிரிவினர் அஸிரியர்கள் புராதன சாம்ராஜ்ஜியங்களான பபிலோனியா மற்றும் அஸிரியா ஆகியவற்றின் வழித்தோன்றல்கள் இவர்கள். கிறிஸ்துவுக்கு முன் 6 ஆம் 7 ஆம் நூற்றாண்டுகளில் இவர்களது சாம்ராஜ்ஜியங்கள் தகர்ந்து போக மத்திய கிழக்குப் பிரதேசத்தில் இவர்கள் பரவினார்கள். கிறிஸ்துவுக்குப் பின் முதலாம் நூற்றாண்டில் அஸிரியர்கள் கிறிஸ்துவத்தைத் தழுவிக் கொண்டனர். இவர்களே ஈராக்கின் புராதன கிறிஸ்தவர்கள் என்று கருதப்படுகின்றனர்.

இதேவேளை, அஸிரியர்களில் சிலர் கிறிஸ்து மதப் பிரிவுகளான சல்டிகன் சபை, சிரிய அடிப்படை கிறிஸ்தவ சபை, புரட்டஸ் தாந்து ஆகியவற்றையும் பின்பற்றுகின்றனர்.

### நவீன ஈராக்கில்

1991 ஆம் ஆண்டு வளைகுடாப் போர் இடம்பெறுவதற்கு முன்னர் ஈராக்கில் சுமார் 10 லட்சம் கிறிஸ்தவர்கள் வாழ்ந்தனர். இந்த எணணிக்கை தற்போது 8 லட்சமாகக் குறைநது விட்டது.

சதாம் ஹுசைன் ஆட்சியில் - இஸ்லாமிய அரசில் - சில கிறிஸ்தவர்கள் வளம்பெற்று வாழ்ந்தார்கள். கிறிஸ்தவர்கள் ஈராக்கின் பொருளாதாரத்திலும், அரசியலிலும் செல்வாக்குச் செலுத்துவதைத் தடுக்க அவர்களுக்கெதிரான வன்முறைகள் அவ்வப்போது தூண்டிவிடப்பட்டாலும் அவை கிறிஸ்தவ சமுதாயத்துக்கு எதிரான கலவரங்களாக மாறுவது சதாம் ஆட்சியில் தடுக்கப்பட்டே வந்தது.

ஆனாலும் வளைகுடாப் போரினாலும் அதனைத் தொடர்ந்து ஈராக் மீது நடைமுறைப்படுத்தப்பட்ட தடைகள் காரணமாகவும், கணிசமான ஈராக்கியக் கிறிஸ்தவர்கள் மேற்கத்தைய நாடுகளுக்கு புலம் பெயர்ந்தனர்.



### இன... குழுக்களின் தனி...திட்டங்கள்

சதாம் ஹுசைனின் மதச்சார்பற்ற ஆட்சியில் கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டுப்படுத்தப்பட்டாலும் , கிறிஸ்தவர்கள் பொருளாதா... கருதி உள்நாட்டில் ஓரிடத்திலிருந்து ம...றார் இடத்துக்கு குடிபெயர்ந்த சமயங்களில் முஸ்லிம்களுடன் பிணக்குகளும் மோதல்களும் உருவாவதைத் தவிர்க்கமுடியவில்லை.

ஈராக்கில் பக்தாத், வடபகுதி நகர்களான கிர்குக், கிர்பில் மற்றும் - புராதன மொசப்பத்தேமியாவின் வர்த்தக நகர் நைன்வேஹ் எனப்பட்ட - மொசூல் ஆகியவற்றில் கிறிஸ்தவர்கள் செறிந்து வாழ்ந்தனர். பெற்றோலிய வளங்கள் மிக்க பகுதிகளுக்கு இவர்கள் குடிபெயர்ந்தபோது அங்கு பெரும்பான்மையினராக வாழ்ந்த முஸ்லிம்களுக்கும் இவர்களுக்கும் பிணக்குகள் உருவாகின.

### படுகொலைகள்

ஈராக்கில் கிறிஸ்தவர்களுக்கெதிரான வன்முறை உச்சமாக இடம்பெற்றது நாடு சுதந்திரம் பெற்ற 1932 ஆம் ஆண்டுக்காலப் பகுதியாகும்.

பிரிட்டனின் காலனித்துவத்திலிருந்து ஈராக் விடுதலை பெற்ற கையோடு, ஈராக்கிய இராணுவம் கிறிஸ்தவர்கள் மீதான படுகொலை நடவடிக்கையை மேற்கொண்டது. குறிப்பாக பிரிட்டனுடன் ஒத்துழைக்காத காரணத்தால் 'அசிரியன்' பிரிவினர் பாரிய எண்ணிக்கையில் படுகொலையுண்டனர். அவர்களது கிராமங்கள், வழிபாட்டிடங்கள், மடாலயங்கள் அழிக்கப்பட்டன.

அசிரியர்கள் மட்டுமன்றி, சிரிய அடிப்படைச்சபை சிரீயன் கத்தோலிக்கசபை, ஆர்மேனிய சபை போன்றவற்றைச் சேர்ந்தவர்களும் படுகொலைகளில் இருந்து உயிர்தப்புவதற்காக அயல் நாடான துருக்கியில் தஞ்சம் புகுந்தனர்.

எது எவ்வாறாயினும், சிறிய எண்ணிக்கையினரான அங்கிலிகன் மற்றும் வொன் ஜெலிகஸ் ஆகிய பிரிவினர் உட்பட சுமார் 8 இலட்சம் கிறிஸ்தவர்கள் தற்போது ஈராக்கில் வாழ்கின்றனர்.

### இஸ்லாமியத் தீவிரவாதம்

சதாம் ஆட்சி அகற்றப்பட்ட பின்னர் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகளுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்து வந்தன. சதாம் கைது செய்யப்பட்ட பின்னர் இத்தாக்குதல்கள் ...றையுமென்றே அமெரிக்கா நம்பியது.

ஆனால் ...றைகள், கார்க்குண்டுத் தாக்குதல்கள், ...கொலைத்தாக்குதல்கள் என்று விஸ்வரூபம் எடுக்கத்தொடங்கின.

இதற்கிடையில் இஸ்லாமியத் தீவிரவாதம் ஈராக்கில் காலூன்றத் தொடங்கியது. குறிப்பாக கடந்த ...ல் மாதத்தில் அமெரிக்கப் படைவீரர் ஒருவரைப் பணயக் கைதியாக தீவிரவாதிகள் பிடித்துச் சென்றனர். பின்னர் அவரை அவர்க... கொன்றனர். அதன்பிறகு மேலும் பலர் பணயக்கைதிகளாகப் பிடித்துச் செல்லப்பட்ட... ...தில் தீவிரவாதிகள் தாம் நினைத்ததைச் சாதிப்பதில் வெற்றி கண்டுள்ளனர் என்றே ...வேண்டும்.

இஸ்லாமியத் தீவிரவாதத்துக்கு இதில் கிடைத்த மு... வெற்றி பிலிப்பைன்ஸ் படைகள் ஈராக்கிலிருந்து வெளியேறியமையாகும்.

ஈராக்கி... ...யாற்றிய பிலிப்பைன்ஸ் நாட்டவர் ஈராக்கில் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டார். ஈராக்கில் அமெரிக்க இராணுவத்தின் தலைமையில் இயங்கும் பிலிப்பைன்ஸ் படைகள அங்கிருந்து வெளியேறவேண்டுமென்று தீவிரவாதிகள் நிபந்தனை விதித்தனர். இந்த நிபந்தனையை ...றுக்கொண்டு, தீவிரவாதிகளிடம் சிக்கியுள்ள தமது நாட்டவரைக் காக்கும்படி பிலிப்பைன்ஸில் பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் நடத்த ஆரம்பித்தார்கள். இது பிலிப்பைன்ஸ் அதிபர் குளோரியா அரோயோவுக்கும் அவரது அரசுக்கும் பெரும் அழுத்தத்தைக் கொடுத்தது. இதனைத் தொடர்ந்து ஈராக்கிலிருந்து பிலிப்பைன்ஸ் படைகளை மீளப்பெற்றது.

இதனைத் தடுக்க அமெரிக்கா பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டது. அமெரிக்க இராஜாங்கச் செயலர் கொலின்பவல், அதிபர் புஷ் என்று பெரும் தலைகள் எல்லாம் . பிலிப்பைன்ஸ் அதிபரிடம் பேசிப்பார்த்தும் பிலிப்பைன்ஸ் படைகள் ஈராக்கிலிருந்து வெளியேறுவதை அவர்களால் தடுக்க முடியவில்லை. இது இஸலாமியத் தீவிரவாதத்திடம் அமெரிக்கா தோல்வியடைந்ததைக காட்டுவதாகவே கருதபபடுகிறது.

இந்த வெற்றி இஸ்லாமியத் தீவிரவாதிகளை உற்சாகப்படுத்தியது என்றே சொல்ல வேண்டும். அதிலும் அமெரிக்காவுடன் ஒத்துழைக்கும் இஸ்லாமிய நாடுகளைச் சேர்ந்தவர்களையே தீவிரவாதிகள் முதலில் குறிவைத்தனர். இதனால் அமெரிக்காவுக்காக நாம் ஏன் அல்லற்படவேண்டும் என்ற ரீதியில் சம்பந்தப்பட்ட முஸ்லிம் நாடுகள் சிந்திக்கத் தலைப்பட்டன.

### அபுகிராய்ப் சித்திரவதைகள்

அபுகிராய்ப் சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்ட ஈராக்கியக் கைதிகளை அமெரிக்கப்படையினர் கொடூரமான முறையில் சித்திரவதை செய்ததை நிருபிக்கும் புகைப்படங்கள் வெளியாகி அரபுலகத்தை கொதிப்படைய வைத்திருந்தது. அந்தவேளையில் ஈராக்கில இஸ்லாமியத் தீவிரவாதிகள் பணயக் கைதிகளை பிடித்து நிபந்தனைகளை விதிக்கத் தொடங்கியமை அவர்களுக்கு சாதகமாகியது. இஸ்லாமிய நாடுகளைச் சேர்ந்த குறிப்பாக ஜோர்டான், குவைத் போன்ற நாடுகளின் நிறுவனங்கள் ஈராக்கிலிருந்து வெளியேறின. இந்த நிறுவனங்கள் கூட்டுப்படையினருக்கான விநியோகப் பணிகளிலும் அமெரிக்க நிறுவனங்களின் உப ஒப்பந்தப்பணிகளிலும் ஈடுபட்டிருந்தன. இந்த நிலையில் அவை தமது பணிகளில் இருந்து திடீரென்று ஒதுங்கிவிட்டதால் அமெரிக்கா தடுமாறிவருகிறது.

### இஸ்லாமியப்படை

ஈராக்கிய இடைக்கால அரசின் கீழ் அரபு நாடுகளின் இராணுவங்களைக் கொண்டு ஓர் இஸ்லாமியப் படையை உருவாக்கவும் -

அதனைக் கொண்டு கிளர்ச்சியாளர்களைச் சமாளிக்கவும்-

அதன் மூலம், ஈராக்கியர்களைக் கையாள்வதில் அமெரிக்க இராணுவம் எதிர்நோக்கும் எதிர்ப்புகளைத் தவிர்ப்பதுடன், தீவிரவாதிகளின் தாக்குதல்களில் மேற்கத்தைய நாடுகளின் துருப்புக்கள் கொல்லப்படுவதைத் தவிர்கக்கவும்-

அமெரிக்கா திட்டமிட்டு வருகிறது. இந்தத் திட்டத்துக்கு இஸ்லாமியத் தீவிரவாதிகளின் பணயக் கைதிகள் மூலம் நிபந்தனைகளை நிறைவேற்றும் செயல் பெரும் குந்தகத்தை விளைவித்துள்ளது.

### பணபலம்

இதற்கிடையில் ஈராக்... செயற்படும் தீவிரவாதிகளுக்கு பெரும் பணபலம் கிடைக்கிறது என்று செய்திகள் வெளியாகி வருகின்றன.

ஈராக்கில் இயங்கிவரும் குவைத்தின் கே.ஜி.எல்.நிறுவனத்தில் பணியாற்றிய 3 இந்தியர்கள், 3 கென்யர்கள், ஒரு துருக்கியர் என ஏழுபேரை இஸ்லாமியத் தீவிரவாதிகள் கடந்த 21 ஆம் திகதி கடத்திச் சென்றனர்.

ஈராக்கைவிட்டு கே.ஜி.எல் நிறுவனம் வெளியேறவேண்டும், பாலூஜா நகரில் அமெரிக்கப் படைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்கவேண்டும் இல்லாவிட்டால், பணயக் கைதிகளின் தலைகள் துண்டிக்கப்படும் என்று தீவிரவாதிகள் நிபந்தனை விதித்தனர்.

தற்போது தீவிரவாதிகளின் கோரிக்கைகளை ஏற்க குவைத் நிறுவனம் சம்மதம் தெரிவித்துள்ளது. இதன்படி கோடி கோடியாக பணம் தீவிரவாதிகளுக்கு வழங்கப்படப்போவதாகவும் கூறப்படுகிறது. அதிலும் குவைத் நிறுவனம் மட்டுமல்லாது, தத்தமது நாட்டவர்களை மீட்பதற்காக இந்தியா, கென்யா, துருக்கி ஆகியவையும் தத்தமது பங்குக்குப் பணம்கொடுக்கப்போவதாக தெரியவருகிறது.

இது ஒரு புறமிருக்க பணயக்கைத்தியாகப் பிடிக்கப்பட்டுப் பின்னர் விடுதலையான ஜோர்டான் நாட்டுவர்த்தகரான அதுல் உபைதுல்லா 'எனது விடுதலைக்காக தீவிரவாதிகளுக்கு ஒரு லட்சம் டொலர்களை எனது குடும்பத்தினர் கொடுத்தனர்' என்று கூறியுள்ளார்.

இவற்றை வைத்துப் பார்த்தால் ஈராக்கில் காலூன்றியுள்ள இஸ்லாமிய தீவிரவாதத்துக்கு பணபலம் கிட்டுகிறது என்றே கூற வேண்டும்.

### தேவாலயங்களில் குண்டுவெடிப்பு

இந்த நிலையில்தான் ஈராக்கில் உள்ள கிறிஸ்தவத் தேவாலயங்கள் மீது இஸ்லாமியத் தீவிரவாதிகள் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

ஒரே நாளில் 5 தேவாலயங்களின் மீது தற்கொலைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இத்தாக்குதல்களுக்கு 'அல்டவ்கிட்' என்ற அமைப்பு உரிமைகோரியுள்ளது. அபு முசாப் அல் ஜர்குவி என்ற ஜோர்டானியரால் இந்த அமைப்பு வழிநடத்தப்படுவதாக நம்பப்படுகிறது. இதற்கு ஒஸாமா பின்லேடனின் அல் கெய்டா அமைப்பு ஆதரவளிப்பதாகவும் கருதப்படுகிறது.

மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் செயற்படும் பிற இஸ்லாமிய தீவிரவாத அமைப்புக்களுக்கும் இதற்கும் கொள்கை அளவில் மாறுபாடெல்லாம் கிடையாது. ஈராக்கில் தங்களுக்குள் மோதிக்கொள்ளும் ஷியா மற்றும் சுனி என இரு இஸ்லாமியப் பிரிவுகளைச்



சேர்ந்தவர்களும் இந்த அமைப்பில் அங்கம் வகிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்க தகவலாகும். இவை எல்லாவற்றையும் விட அமெரிக்காவை அச்சமுறவைக்கும் தகவலொன்றும் வெளியாகியுள்ளது. 'இஸ்லாத்தின் எதிரிகள் எங்கெல்லாம் இருக்கிறார்களோ, அங்கெல்லாம் அவர்கள் மீது தாக்குதல் நடத்துவது' என்ற அல்கெய்டாவின் கொள்கையை இந்த அமைப்பின் தலைவர் அல்ஜர்குவி கண்ணை மூடிக கொண்டு பின்பற்றுகிறார் என்பதே அத்தகவலாகும்.

### புனிதப்போர்

'அல் டவ்கிட்' என்ற அமைப்பின் இணையத்தளத்தில் ஈராக்கில் தற்போது இடம்பெறுவது 'இஸ்லாமியர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்குமிடையிலான புனிதப்போர்' என்று வர்ணிக்கப்பட்டுள்ளது. அதைவிட பல்கேரியர் ஒருவரையும் கொரியர் ஒருவரையும் தலைகளைத் துண்டித்துக்கொலை செய்யும் காட்சிகளின் கீழ் 'அல்லாவை நம்பாத இந்தப் பன்றிகள் அமெரிக்க இராணுவத்துக்கு பொருள்களை விநியோகிக்கும் கிறிஸ்தவ நிறுவனத்தில் பணியாற்றின. அந்த நிறுவனம் தனது வருமானத்தில் 10 சதவீதத்தை இஸ்லாமிய நாடுகளில் செயற்படும் கிறிஸ்தவ மிஷனறிகளுக்கு வழங்குகின்றது. அத்துடன், இந்தப் பன்றிகளின் நாடுகள் இஸ்லாத்துக்கு எதிராகப் போர் நடத்த அமெரிக்காவுக்... உதவுகின்றன' என்று அந்த இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இத்தகைய நிகழ்வுகளைக் கூட்டிக் கழித்துப் பார்க்கும் போது ஈராக்கில் இடம்பெறும் மோதல் ஈராக்கியர்களுக்கும், ஈராக்கில் நிலைகொண்டுள்ள வெளிநாட்டுப்படையினருக்கும் இடையேயானது என்ற நிலைமாறி வருவதாகவே தோன்றுகிறது. இஸ்லாமியர்களுக்கும் அவர்களுக்கு எதிரானவர்களுக்கும் இடையேயான புனிதப்போராக ஈராக் பிரச்சினை உருவெடுத்துள்ளதையே தேவாலயங்கள் மீதான தாக்குதல்கள் எடுத்துக்காட்டுகின்றன. மேலும் விஸ்வருபம் எடுக்குமானால் எந்த இஸ்லாமியத் தீவிரவாதத்தை முன்வைத்து ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்ததோ, அதே இஸ்லாமியத் தீவிரவாதத்துக்கு பல உயிர்களைப் பலிகொடுக்கவேண்டிய நிலை அமெரிக்காவுக்கு ஏற்படும். ▲

# ஈராக்கில் பணிபுரிந்து வரும் இந்தியர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்க முடியாது

## கையை விரித்தது அமெரிக்கா

வாஷிங்ரன்,ஓக.7

ஈராக்கில் இருக்கும் இந்தியர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கமுடியாது என்று அமெரிக்கா அறிவித்திருக்கிறது.

ஈராக்கில், இந்தியச் சாரதிகள் 3 பேர் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டநிலையில், ஈராக்கில் உள்ள இந்தியர்களுக்கு அமெரிக்கா பாதுகாப்பு அளிக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

ஈராக்கிற்கு இந்திய இராணுவத்தை அனுப்ப வேண்டும் என்ற அமெரிக்காவின் கோரிக்கையை இந்தியா நிராகரித்தநிலையில் ஈராக்கில் உள்ள இந்தியர்களுக்கு அமெரிக்கா பாதுகாப்பு அளிக்குமா என்ற கேள்விக்கு அமெரிக்கா பதில் அளித்திருக்கிறது.

இது குறித்து அமெரிக்க வெளியுறவுத் துறை செய்தித்தொடர்பாளர் ரிச்சர்ட் பவுச்சர் கூறியதாவது:-

ஈராக்கில் உள்ள ஒவ்வொரு இந்தியர்களுக்கும், அமெரிக்கப் படையினரால் பாதுகாப்புக் கொடுக்கமுடியாது. இந்தியர்கள் மட்டும் அலல, பாகிஸ்தான், வங்காளதேசத்தைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கும் பாதுகாப்பு உறுதி அளிக்கமுடியாது.

ஈராக் ஓர் ஆபத்தான பகுதி, அங்கு அமெரிக்கக் கூட்டுப்படைகள் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்துகிறார்கள். மேலும் பல ஆபத்துக்களும் அங்கு இருக்கின்றன.

அங்கு அமைதியான சூழ்நிலை ஏற்படுத்த முயற்சி எடுத்துவருகிறோம். ஈராக் அரசுடன் இணைந்து செயற்படுகிறோம். ஆனால், ஒவ்வொரு தொழிலாளிக்கும் நாங்கள் பாதுகாப்பு அளிக்கமுடியாது.

ஈராக் நாட்டைப் புதுப்பிக்கும் பணியில் எங்களுடன் இணைந்து செயற்படும் ஈராக்கியர்களும் தாக்கப்படுகிறார்கள். எனவே, ஒவ்வொரு ஈராக் மக்களுக்கும் எங்களால் பாதுகாப்புக் கொடுக்கமுடியாது.

நாங்கள் ஈராக்கியர்களுக்குப் பயிற்சி கொடுக்கிறோம். அவர்களே தங்களுக்குத் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவுகிறோம். ஆனால், தீவிரவாதிகளை எதிர்ப்போம் - என்றார். (8)

## காஷ்மீரில் நிலச்சரிவு; 11 பேர் பலியானார்கள்

காஷ்மீர் மாநிலம் உதம்பூர் மாவட்டத்தில் வைஸ்ணவ தேவி ஆலயத்திற்குச் செல்லும் வழியில் நிலச்சரிவு ஏற்பட்டதால் 11 தொழிலாளர்கள் பலியானார்கள் நேற்று அதிகாலை இச்சம்பவம் நடைபெற்றது.

வைஷ்ணவதேவி ஆலயத்திற்குச் செல்லும் வழியில் சாலைப் பராமரிப்பில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் கூடாரம் ஒன்றில் தூங்கிக் கொண்டிருந்தனர் அப்போது நிலச்சரிவு ஏற்பட்டதால் தூங்கிக் கொண்டிருந்தவர்களில் 11பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். காயமுற்றவர்கள் அருகிலுள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## ரஷ்யாவில் ஹெலி விழுந்து பயணிகள் 15 பேர் பலி

ரஷ்யாவில் ஹெலிகொப்ரர் ஒன்று திடீர் கோளாறு காரணமாக கீழே விழுந்து விபத்துக்குள்ளானதில், அதில் பயணம் செய்த 15 பேர் பலியானார்கள்

ரஷ்யாவின் நைபீரிய பகுதியில் நேற்றுமுன தினம் போக்குவரத்து ஹெலிகொப்டர் ஒன்று பறந்து கொண்டிருந்த போது திடீரென கோளாறு ஏற்பட்டு கீழே விழுந்து நொறுங்கியது. இந்த விபத்தில் ஹெலிகொப்டரில் பயணம் செய்த மூன்று விமானிகளும், 12 பயணிகளும் உடல் சிதறி பலியாயினர். (8)

### பிலிப்பைன்ஸ் நாட்டில்

# ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகள் வெற்றிகரமாகப் பிரிக்கப்பட்டன

பிலிப்பைன்ஸ் நாட்டைச்சேர்ந்த ஒரு தம்பதியினருக்குக் கடந்த 22 மாதங்களுக்கு முன் இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. அந்த இரட்டை ஆண் குழந்தைகளின் தலைப் பகுதி ஒட்டியே இருந்தன.

அந்தக் குழந்தைகளை அறுவைச் சிகிச்சை செய்து பிரிக்க முடிவு செய்யப்பட்டது. இதையடுத்து அந்தக் குழந்தைகள் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள குழந்தைகள் நல ஆஸ்பத்திரிக்கு கொண்டு செலல்லப்பட்டன.

கடந்த 4 மாதங்களுக்கு முன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அந்தக் குழந்தைகளுக்குப் பல கட்ட சத்திர சிகிச்சைகள் நடந்தன. இரு தலைகளையும் இணைக்கும் தசைகள், நரம்புகள் துண்டிக்கப்பட்டன.

இரு குழந்தைகளையும் தனித்தனியாகப் பிரிக்கும் முக்கியமான இறுதிக் கட்ட சத்திர சிகிச்சை நேற்றுமுன்தினம் நடைபெற்றது. நியூயோர்க் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த 16 டாகடர்கள் இந்த அபாயகரமான சத்திர சிகிச்சையை நடத்தினார்கள்.

பல மணி நேரம் நீடித்த இந்தச் சத்திர சிகிச்சை வெற்றிகரமாக அமைந்தது. குழந்தைகள் இரண்டும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டன. (8)



இரட்டைக் குழந்தைகள் சத்திரசிகிச்சைக்கு முன்னர் மகிழ்ச்சியாக காணப்படுவதையும், சத்திரசிகிச்சைக்குப் பின் குழந்தைகளின் தாயார் அவர்களை கூர்ந்து நோக்குவதையும் படங்களில் காணலாம்.

# அமெ.படைகளை போர் நிறுத்தத்துக்கு அழைக்கிறார் மெக்ராடா சதார்

பகதாத்,ஓக.7

ஈராக்குள் நஜாப் நகரில் உள்ள அமெரிக்கப் படைகளுடன் போர் நிறுத்தம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்திருக்கிறார் ஈராக்கிய ஷியா முஸ்லிம் பிரிவுத் தலைவர் மெக்ராடா சதார்.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற மோதல ஒன்றின்போது குறைந்தது 7 ஈராக்கியர்கள் கொல்லப்பட்டும் ஓர் அமெரிக்க வீரர் கொல்லப்பட்டுமுள்ளனர்.

கடந்த ஜூன் மாதம் இரு தரப்புக்குமிடையில் ஏற்பட்ட போர்நிறுத்தத்தை மீள அமுல்படுத்த வேண்டும் என ஷியாத் தலைவர் சதார் விரும்புவதாக அவரது உதவியாளர் ஒருவர் கூறியுள்ளார்.

நாம் போர்நிறுத்தத்தைப் பற்றுறுதியுடன் ஆதரிக்கின்றோம். அமெரிக்கப் படைகளும் போர் நிறுத்தத்தை மதிக்க வேண்டும் என்று சதார் உதவியாளர் கூறினார்.

நாஜாப் கிளர்ச்சியில் நூற்றுக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டனர். போர் ஓய்வு ஏற்பட்டதன் பின்னர், நஜாப் பெரும்பாலும் அமைதியாகவே இருந்துள்ளது. இப்பொழுது ஏற்பட்டுள்ள மோதல் அமைதியாக முடியுமா என்பதில் சந்தேகம் நிலவுகின்றது.



சில தினங்களாகவே பதற்றம் நிலவி வந்தது இறுதியில் கடந்த வியாழக்கிழமை காலையில் மோதல் வெடித்தது.

சுட்டுவீழ்த்தப்பட்ட ஹெலிகொப்டரின் சிப்பந்திகள் இருவரும் உயிருடன் மீட்கப்பட்டனர்.

கிளர்ச்சியாளர்கள் மறைந்திருந்து தாக்கியதில் ஓர் அமெரிக்கச் சிப்பாய் கொல்லப்பட்டதாகவும் 5 பேர் காயமுற்றதாகவும் இராணுவம் அறிவித்துள்ளது. (ப-8)

# நடைப் பயணத்தை ஆரம்பித்தார் வைகோ



ம.தி.மு.க. பொதுச்செயலர் வைகோ தனது மறுமலர்ச்சி நடைபயணத்தை திருநெல்வேலி யில் கடந்த வியாழக்கிழமை நண்பகல் ஆரம்பித்தார்.

தாமிரபரணி ஆற்றில் நீராடித் தனது பயணத்தைத் தொடங்கிய அவர், 42 நாள்களில் 1,025 கிலோ மீற்றர் தூரம் நடந்து சென்று அண்ணா பிறந்த நாளான செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி சென்னையைச் சென்றடைகிறார்.

மாநிலங்களிடையே ஓடும் நதிகளை இணைக்கவேண்டும் காவிரி நதிநீர்ப் பிரச்சினையில் தமிழகத்தின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்திட வேண்டும். பொதுவாழ்வில் ஊடுருவிவிட்ட சீர்கேடுகளை அகற்றும் உணர்வு [illegible] மக்களிடையே ஏற்படவேண்டும். சாதி, [illegible] மோதல்களைத் தடுக்கவேண்டும் வன்முறை மனப் பாங்கை இளைஞர்கள் கைவிடவேண்டும் என்பவற்றை வலியுறுத்துவதோடு, தமிழ்நாட்டில் அ.தி.மு.க. ஆட்சியின் அராஜகத்தையும், ஊழல்களையும் எதிர்த்து மக்கள் சக்தியைத் திரட்டவும் இந்த நடைப் பயணம் மேற்கொள்ளப்படுவதாக வைகோ அறிவித்துள்ளார்.

இந்த நடைப் பயணமானது கோவில்பட்டி, மதுரை, திருப்பத்தூர், காரைக்குடி, அறந் தாங்கி, புதுக்கோட்டை, திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், காரைக்கால், சிதம்பரம், கடலூர், புதுச்சேரி, திண்டிவனம், செஞ்சி, சேத்துப்பட்டு, ஆரணி, ஆற்காடு, காஞ்சிபுரம், செங்கல்பட்டு வழியாக சென்னையைச் சென்றடையும்.


ஆஸ்திரேலியாவில் இருந்து இறக்குமதிசெய்யப்பட்ட
PI, PII, PIII,
**IBM, Compaq, Samsung** கணனிகள்
குறைந்த விலைகளில்!

| | |
|---|---|
| PI-200 Mhz - Samsung (Tower) | 12,900/= |
| PI-200 Mhz - IBM, Compaq | 13,900/= |
| PII-266 Mhz - IBM | 15,900/= |
| PII-333 Mhz - Compaq | 22,900/= |
| PII-350 Mhz - Compaq | 23,000/= |
| PII-350 Mhz - Compaq(Tower) | 23,900/= |
| PIII-450 Mhz - IBM | 25,900/= |
| PIII-550 Mhz - Samsung(Tower) | 31,900/= |

**CLEARANCE SALE - August 31st**
வரை
**NORTH EAST TECHNOLOGIES (PVT) LTD**
34, Saddanathar Road, Nallur, Jaffna
T/P: 021-2223786 0777-708498 (hotline)
(சி-36453)(34-12-17)



## [illegible] சாயி நிலையங்களின் உறுப்பினர்களுக்கும் ஓர் அறிவித்தல்

வடபிராந்திய சாயி நிலையங்களின் இணைப்புக் குழுத் தலைவராகவும், யாழ். சத்தியசாயி சேவாநிலையத் தலைவராகவும் பதவி வகித்து, தற்போது ஆலோசகராகப் பணிபுரிந்த அமரர் ச. விஜயரட்ணம் ஐயா அவர்களின் ஆத்ம சாந்திக்காக அவருடைய 82 ஆம் இலக்கம், நல்லூர் குறுக்கு வீதியில் அமைந்துள்ள இல்லத்தில் இன்று (07.08.2004) சனிக்கிழமை காலை 7.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை ஓர் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நடைபெறும்.

இந்தப் பிரார்த்தனையில் அனைத்து சாயி நிலையங்களின் உறுப்பினர்களும் பங்குபற்றுமாறு வேண்டுகிறோம்.

தலைவர்,
**வட பிராந்திய சாயி நிலையங்களின் இணைப்புக் குழு.**
(சி.36452)(40-12-17-34)



மட்டுவில் வடக்கு [illegible] மகளிர் விளையாட்டுக்கழக வளர்ச்சி[illegible] நடத்தப்பட்ட
**அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்**

| | |
|---|---|
| முதலாம் பரிசு இல.: | 00266 |
| இரண்டாம் பரிசு இல.: | 02631 |
| மூன்றாம் பரிசு இல.: | 0643 |

பரிசுக்குரியவர்கள் தங்களது பரிசில்களை 20.08.2004 இற்கு முன் பெற்றுக் கொள்ளவும்.

(34969) - நிர்வாகத்தினர்.



## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி முகாமையாளர்
திருமதி
**மகிழறூபியம் இராஜசிங்கம்**
அவர்களின் மறைவினால்
துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன்
அவரின் ஆத்மசாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்.



சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.
அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள்.
(சி-36454)(34-12-17)



## இதய அஞ்சலி



நல்லூர் குறுக்கு வீதியைச் சேர்ந்த
**சண்முகம் விஜயரட்ணம்**
அவர்களின் மறைவைக் கேள்வியுற்று துயரமடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பகவானைப் பிராத்திக்கின்றோம்.
SAI RAM TRADING COMPANY
சாயிராம் வர்த்தக நிறுவனம்
101, Palaly Road, Jaffna.
(34965)(40-12-17)



## மரண அறிவித்தல்

### திருமதி சொர்ணம்மா சபாரத்தினம்



மீசாலை தெற்கு திருமதி சொர்ணம்மா சபாரத்தினம் 04-08-2004இல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பூநகரி மட்டுவில் நாடு விதானையார் ச.வே.சபாரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சரஸ்வதி, ஆறுமுகத்தின் சகோதரியும் கமலராணி (கொழும்பு), சநதிரகுமாரன் (இலங்கை வங்கி, ஸ்ரான்லி வீதிக் கிளை), சிவகுமாரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ரேணுகா, ரேவா, காலஞ்சென்ற பரமசாமி ஆகியோரின் மாமியாரும் துவாரகா, கார்த்திகா, யசோதா, கிரிசா, பிரகாஷ், காயத்திரி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (07-08-2004) சனிக்கிழமை காலை 10.30 மணியளவில் கண்டி வீதி, மீசாலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

*கண்டி வீதி,*
*மீசாலை.*
(34976) (26-34-12-17)
தகவல்:
ச.சந்திரகுமாரன் (மகன்).

வளர்மதி முன்னேற்றக் கழகம் சனசமூக நிலையத்தினால் நடத்தப்படும்

## றஞ்சன் ஞாபகார்த்த துடுப்பாட்ட சுற்றுப்போட்டி — 2004

இடம்: கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானம்
காலம்: 2004.08.08 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பி.ப. 6.00 மணிவரை

தலைவர்
திரு. இ.சிவசங்கர்
(வளர்மதி நிர்வாகச்சபை உறுப்பினர்)
பிரதம விருந்தினர்
திரு.ப.முருகவேள்
(செயலாளர், யாழ்ப்பாண துடுப்பாட்ட மத்தியஸ்தர் சங்கம்)
கௌரவ விருந்தினர்
சுடர் இ.மகேந்திரன்
(முன்னாள் அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி)

றஞ்சன் (சி.சுசேந்திரலிங்கம்) ஞாபகார்த்தமாக கொக்குவில் வளர்மதி சனசமூக நிலையத்தினால் நடத்தப்படும் 6பேர் கொண்ட துடுப்பாட்டச் சுற்றுப்போட்டிக்கு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

சுற்றுப்போட்டிக்குழு
கொக்குவில். வளர்மதி சனசமூக நிலையத்தினர்.
(சி-36464)


## ஏழாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 30 08 1961 | மறைவு 25 07 1997



### திருமதி கனகரத்தினம் சத்தீஸ்வரி

திதி: 07.08.2004

பாசத்துடன் எம்மைப் பேணிக்காத்து
பார்புகழ வைத்தீரே!
பெற்றகடன் தீர்க்கும் முன்
பிரிந்து சென்றீரே
ஆண்டுகள் ஏழாச்சு
ஆறவில்லை தேறவில்லை

எமது சகோதரனிடம் போன நீர்
எண்மரமாய்ப் பூத்த பூக்கள் ஆறு மரமாய்
ஆச்சு அம்மா!
உற்றதுணையும் போனதம்மா!
உறுதுணையும் போனதம்மா!
ஆசீர்வதியுமம்மா!
ஆறவழிகாட்டுமம்மா!

எல்லாம்வல்ல கதிர்காமக் கந்தனை வேண்டுகின்றோம்.

கதிர்வேலவன் அரிசி ஆலை,
கதிர் வேலன் களஞ்சியம்,
கைதடி.
(34989)

பிரிவால் துயருறும்:
கணவன் சி.கனகரத்தினம்,
பிள்ளைகள்.

## முதலாமாண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 - 08 - 1903 | உதிர்வு 07 - 08 - 2003



### வேலுப்பிள்ளை துரையப்பா

(தொண்டைமானாறு)

திதி: 07.08.2004

ஆண்டு ஒன்று ஆனது ஐயா நீங்கள் எங்களை விட்டு
இறைவனுடன் சேர்ந்து
சந்நிதி முருகனின் தொண்டன் ஐயா நீங்கள்
உங்கள் பிள்ளைகளின் பெருமைக்கு வித்திட்ட
ஐயாவே!
நூறாண்டு பூமியிலும் வாழ்ந்து நூற்றோராண்டு சந்நிதி
முருகனுடன் சேர்ந்து விட்டீர்களே ஐயா!
பூமியில் வேதனை தாங்காது தவிக்கின்றோம் ஐயா!
*உங்களின் ஆத்மா சாந்தியடைய*
*சந்நிதி முருகனை வேண்டுகிறோம்.*

இன்று (07.08.2004) சனிக்கிழமை அன்னாரின் ஆத்மசாந்திக்காக சந்நிதி முருகன் ஆலயத்தில் நடைபெறும் பூசையிலும் அன்னதானத்திலும் கலந்துகொள்ளும்படி உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*தகவல்:*
மயில்வாகனம் பரமேஸ்வரி
தொண்டைமானாறு.
(சி-36463)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## சிறப்புத் தியானம்

யாழ்.மரியன்னை பேராலய பெருவிழாவின் சிறப்புத் தியானம் இன்று சனிக்கிழமை தொடக்கம் மூன்று நாளகள் மாலை நான்கு மணி தொடக்கம் 5 மணிவரை நடைபெறவுள்ளன.

இந்தியா சங்கர்நகர், பாளையங்கோட்டை மறை மாவட்ட பங்குத் தந்தை அருட்பணி செங்கோல் - ஜோக்கிம் தியானத்தினை நடத்தவுள்ளார்.

இன்று சனிக்கிழமை திருமணமானவர்களுக்கும், நாளை ஞாயிற்றுக்கிழமை இளைஞர், யுவதிகளுக்கும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சிறுவர், சிறுமியர்களுக்கும் தியானம் நடைபெறவுள்ளது. எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 6 மணி தொடக்கம் 8 மணிவரை குணமாக்கல் திருப்பலி நடைபெறும். (ஒ-7)

## கண்காட்சி

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு, வலிகாமம் மேற்குப் பிரதேச சபையால் நடத்தப்படும் கண்காட்சி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. வலி.மேற்கு பிரதேச சபைச் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் .பிரதம விருந்தினராக, சங்கானை பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் கலந்து கொள்ளவுள்ளார்.

## அறிவுறுத்தல் கூட்டம்

5ஆம்தரப் புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பான அறிவுறுத்தல் கூட்டம் ஒன்று எதிர்வரும் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திட்டமிட்டபடி எதிர்வரும் 15ஆம் திகதி புலமைப் பரிசில் பரீட்சை நடைபெறும் என பரீட்சைத் திணைக்களத்தினால் தீர்மானிக்கப்பட்ட தற்கமைய யாழ். கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலையில பரீட்சையில் கடமையாற்றவுள்ள பாட்சை இணைப்பாளர், பரீட்சை மேற்பார்வையாளர்களை இந்த அறிவுறுத்தல் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் பூவிக்னேஸ்வரன் கேட்டுள்ளார்.

இக் கூட்டத்தில் புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பான ஆவணங்களும் கூட்டத்தில் வைத்துக் கையளிக்கப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

## அமெரிக்கத்....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்பார்க்கும் தமிழ் மக்களுக்கு விசனத்தை தோற்றுவித்துள்ளது என்பதை அன்றாடம் மக்களுடன் நெருங்கிய உறவினை கொண்டுள்ள கூட்டுறவுத்துறை பணியாளர்களாகிய நாம் முற்றுணர்துள்ளோம்.

எனவே, சிங்கள பேரினவாதத்தின் ஏவலாளராகச் செயற்படும் ஸ்ரீலங்கா அரச படைகளுக்கு ஆலோசனை, பயிற்சி மற்றும் ஆயுத தளபாட விநியோகத்தை தங்களது அரசாங்கம் மேற்கொள்வதை நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன் இவ்வகையான செயற்பாடுகள் தமிழ் மக்களால் வெறுக்கப்படுவதாகவே அமைந்துள்ளன என்பதையும் சமாதான செயற்பாடுகளின் இலக்கையே சிதறடிப்பவையாக உள்ளன என்பதையும் தங்களுக்கு அறியத்தருகின்றோம்.
- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


## கலந்துரையாடல்

ஆயுர்வேத பரம்பரை மருத்துவர், கோமியோபதி, அக்குபஞ்சர் மருத்துவர்களுக்கான அவசர கலந்துரையாடல் 07.08.2004 சனி மாலை 5 மணி.

முருகானந்தா வைத்திய நிலையம்
மாம்பழம் சந்தி, அரியாலை.
டாக்டர் க.சோதிதாசன் - T.P. 0776284687
(34990)

நாகம்ஸ் சுன்னாகம்
ரஜனிகாந்த, நக்மா, ரகுவரன், ஜனகராஜ் நடித்த

பாட்ஷா
காட்சிகள்: 11.00,2.00,7.00 (பு.நே.)
9ஆம் திகதி முதல் சரத்குமார் நடித்த
மாணிக்கம்
(C/36415) (12)

[illegible] சங்கானை
நந்தா, ரேகா, வடிவேல் நடித்த
புன்னகை பூவே
வெள்ளி, சனி, ஞாயிறு
தினசரி: 11.00, 2.45, 6.00 பு.நே.
Seving private Ryal (இரவு 8.45 பு.நே.)

லக்சுமி இணுவில்
விஜய், த்திரிஷா, பிரகாஸ்ராஜ் நடிப்பில்

கில்லி
அடுத்த புதிய வெளியீடு
அட்டோ கிராஃப்
புதிய நேரம் 11.00, 3.00, 7.00
(34789) (32)

ராஜா யாழ்ப்பாணம்

சிலதினங்கள் மட்டும்
ம்பு. ரம்யாகிருஷ்ணன். மும்தாஜ்
குத்து
திமநேரம்: 10.30,2.30,6.30,9.30
(சி-36364)(32)


## நூல் வெளியீட்டு விழா

அராலியூர் வி.செல்வரத்தினம் எழுதிய, ஆறுமுகனின் ஆறுபடை வீடுகள், தினசரி விடியும் வேளையில் அர்த்தம் உள்ள ஓர் ஆரோக்கியமான நல்வாக்கு, கந்தசஷ்டி கவசம் ஆகிய மூன்று நூல்களின் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு வட்டுக்கோட்டை மாவடி, அடைக்கலம் தோட்டம் ஸ்ரீகந்தசாமி கோயில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. ஆலயத்தின் பரிபாலனசபைச் செயலாளர் மு.ஜெகநாதன் தலைமையில் இடம்பெறும் இவ்வெளியீட்டு நிகழ்வில் கலாநிதி அருட்கவி சீ.விநாசித்தம்பி ஆசியுரை வழங்கவுள்ளார்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கமலா வரதராஜசிங்கம்



சரவணை, சின்னமடுவைப் பிறப்பிடமாகவும் அரசடி வீதி, வடலியடைப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலா வரதராஜசிங்கம் 01.08.2004 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் -தங்கம்மாவின் மகளும், காலஞ்சென்ற ஐயாத்துரை - இராசம்மாவின் அன்பு மருமகளும் ஐயாத்துரை வரதராஜசிங்கத்தின் அன்பு மனைவியும், ஸ்ரீகாயத்திரி காமகோடிபீடாதிபதி சுவாமி ஸ்ரீ ராஜ்குமார், சுமதி (கனடா), சுமித்திரா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் பாலரட்ணம் (கனடா) கிருஷ்ணரூபன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் பிருஷா, டிவியா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வடலியடைப்பிலுள்ள அவரது இல்லத்தில் நாளை (2004.08.08) ஞாயிற்றுக்கிழமை காலை 11மணிக்கு இடம்பெற்று, தகனக்கிரியைகள் பண்டத்தரிப்பு, விளாவெளி மயானத்தில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அரசடி வீதி,*
*வடலியடைப்பு.*
(34993)(18-11-33)

தகவல்:
ஐ. வரதராஜசிங்கம்
(கணவர்).

### சண்முகம் விஜயரட்ணம்



(ஓய்வுபெற்ற, கமநலசேவை திணைக்களத்தின் பெரும்பாக உத்தியோகத்தரும் யாழ். சத்தியசாயிசேவா நிலைய முன்னாள் தலைவரும், வடபிராந்திய சத்தியசாயி சேவா நிலைய இணைப்புக் குழுவின் முன்னாள் தலைவரும், இவற்றுக்கான தற்போதைய ஆலோசகரும், யாழ்ப்பாணம், கச்சேரி - நல்லூர் வீதி, பாணன்குளம், நாச்சி அம்மன் கோயில் பரிபாலன சபைத் தலைவரும் பரமேஸ் கல்லூரி இயக்குநர் சபையின் முன்னாள் நிர்வாகச் செயலாளரும்)

நல்லூர், குறுக்குத்தெரு 82ஆம் இலக்கத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் விஜயரட்ணம் அவர்கள் (04.08.2004) புதன்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் - பெண் சின்னப்பிள்ளை தம்பதிகளின் அருமைப்புதல்வரும், காலஞ்சென்ற விஜயரட்ணம் கந்தையா - நல்லம்மாவின் ஆசை மருமகனும் காந்திமதி (பெரியக்கா) யின் ஆருயிர்க் கணவரும் காலஞ்சென்றவர்களான ச.வேலாயுதபிள்ளை (மலேசியா), பொ.விஜயலக்சுமி, ம.விஜயாம்பாள் ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்றவர்களான க.பொன்னுத்துரை, மகாதேவன் சோமசுந்தரம் ஆகியோரின் மைத்துனரும் பொ.கனகதுரை (கணக்காளர், லண்டன்), இ.மகாலக்சுமி (அமெரிக்கா), சோ.இவிந்திரன் (கனடா), த.விஜித்தா ஆகியோரின் தாய் மாமனாரும், ந.சற்குணவதி (கனடா), க.கனகாம்பிகை, இ.சியாமளா (லண்டன்), பு.சீந்திரவதனி (கனடா), க.சிவபாதநாதன் (விஜயா, கனடா) ஆகி யோரின் மைத்துனரும், க.நவரத்தினம் (முன்னாள் C.T.B. பொறியியலாளர், கனடா), T.S.மகேந்திரன் (உரிமையாளர், பெனிகுலா, குறுப்) க.திருச்செந்தூர்நாதன் (கணக்காளர், லண்டன்) கு.புனிதவேல் (பொறியியலாளர் - கனடா), த.சுகுமார் (பொறியியலாளர், ஆஸ்திரேலியா), சி.யோகேஸ்வரி (கனடா) ஆகியோரின் சகலனும் Dr.இ.இராசநாயகம் (அமெரிக்கா) ர.ஜெயகலா, பா.தவபாலன் (சட்டத்தரணி ஜே.பி.யு.எம்.) ஆகியோரின் மாமனாரும், இ.லஷ்மி (அமெரிக்கா), க.சிவகணன் (லண்டன்), க.அபிராமி (லண்டன்), க.அருண் (லண்டன்), த.ரஜீவ் (லண்டன்), த.காண்டீபன் (லண்டன), த.சாஜிசஞ்சீவ், த.தவலக்சுமி ஆகியோரின் அன்புப் பேரனும் ந.சுகந்தன் (அமெரிக்கா), இ.சுரேக்கா (கனடா), Dr.யோ.ர்திப்பிரியா (அமெரிக்கா), ம.கஜேந்திரன் (கனடா), தி.கேதீஸ் (லண்டன்), தி.குமரேஸ் (லண்டன்), பி.கௌரி (கனடா), பு.செந்தூரன் (கனடா), சு.விக்னேஸ் (ஆஸ்திரேலியா), சு.முருகேஷ் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பெரியப்பாவும், சி.சிவலக்சுமி (கனடா), சி.கார்திகா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.82, நல்லூர் குறுக்கு வீதி, இல்லத்தில் நாளை (08.08.2004) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றுப் பூதவுடல் காலை 10 மணியளவில் செம்மணி மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அன்புடன் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*இல. 82, நல்லூர் குறுக்குத் தெரு,*
*நல்லூர்.*
*T.P.: 222 6529*
(சி-34462)

தகவல்:
வி.காந்திமதி
(அன்பு மனைவி).

### சிவந்தா எலிசபெத் ராணிமலர் (மானிப்பாய்)



மானிப்பாய் தெற்கு, மானிப்பாயைச் சேர்ந்த திருமதி சிவந்தா எலிசபெத் ராணிமலர் அவர்கள் 05.08.2004 வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி மண்டலநாயகம் தம்பதிகளின் பேர்த்தியும், ஸ்ரீபன், காலஞசென்ற திருமதி ரெஜினா ஸ்ரீபனின் மகளும் காலஞ்சென்ற திரு.திருமதி மகேஸ்வரன் தம்பதிகளின் மருமகளும், சிவந்தா (உரிமையாளர் - பேர்ள்றிச் கொமினிக் கேசன், மானிப்பாய்) அவர்களின் அன்பு மனைவியும் செல்வி ஸ்ரெலா சிவஜா (மாணவி, விவசாய பீடம், யாழ். பல்கலைக்கழகம்), செல்வன் கிரிசாந் (மாணவன், வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி) அவர்களின் பாசமிகு தாயாரும், ஜெயநாயகம், அதிசயமலர், கண்மலர், ஜோய் அவர்களின் அன்புச் சகோதரியும், சாந்தினி, அரியரட்ணம் (இளைப்பாறிய உத்தியோகத்தர் - நெற்களஞ்சிய திணைக்களம், திருகோணமலை), பற்றிக் பிலிப்ஸ் (குயின்ஸ் ஹோட்டல், கண்டி), சிறீஸ்கந்தராஜா (UNHCR) ஆகியோரின் மைத்துனியும் செல்வி அனுஜாவின் மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று காலை (07.08.2004) 8.30 மணியளவில் மானிப்பாயிலுள்ள பிப்பிலி மயானத்திற்கு நல்லடக்க ஆராதனைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மானிப்பாய் தெற்கு,*
*மானிப்பாய்.*
(349921)

தகவல்:
சிவந்தா (கணவர்).

# இந்திய மீனவர் வடக்குக் கடலில் கைது

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைநது மீன்பிடித்த இந்திய மீனவர்கள் 25 பேரை வடபிராந்தியக் கடற்படையினர் கைது செய்துள்ளனர். அவர்களின் 4 ரோலர்களும் கைப பற்றப்பட்டுள்ளன.

பருத்தித்துறைக் கடற்பரப்பிற்குள் நுழைந்து கடந்த புதன்கிழமை இரவு 11.30 மணியளவில் மீன் பிடித்துக்கொண்டிருந்த இந்திய மீனவர்களே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். பொலஸார் அவர்களிடம் மேலதிக விசாரணைகளை நடத்தினர். கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் அனைவரும் நேற்று மல்லாகம் நீதிவான் சரோஜினி இளங் கோவன் முன்னிலையில் ஆஜர் செய்யப் பட்டனர். அவர்களில் படகோட்டிகளான நால்வரை எதிர் வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறிய லில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான், ஏனைய மீனவர்களை இலங்கைக்கடல் எல்லையில் வைதது இந்தியக்கடற்படையினரிடம் ஒப்படைக் குமாறு உத்தவிட்டார். தமிழக நாகபட்டனத்தைச் சேர்ந்த பழனிவேல் பாலமுருகன் (வயது-20), அரியப்பன் கோடிலிங்கம் (வயது-32), ஆறுமுகன் பாலமுருகன் (வயது-21), சிங்காரசா சுரேஷ்குமார் (வயது-24) ஆகியோரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (க-3-9-6-150)

## சிறை அதிகாரி இடமாற்றம்

யாழ். சிறைச்சாலை அத்தியட்சகர் எஸ். சிவசுந்தரம் வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு தற்காலிக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.(ஒ-9)

## கண்காணிப்புக் குழுவுடன் காவல்துறை சந்திப்பு

தமிழீழக் காவல்துறையினருக்கும், இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும் இடையே நேற்றுக்காலை 10 மணியளவில் வவுனியா விளக்குவைத்தகுளம் பகுதியில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்பில் முன்னரங்கக் காவ லரண் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

## மன்னாரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேகுரவீந்திரன் ஆகியோரே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

அதிகாலையில் இரு இளைஞர்களும் நித்திரையில் இருந்தபோது வீட்டுக் கதவை உடைத்துக்கொண்டு உட்புகுந்த இரண்டு ஆயுததாரிகள் இவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

விடுதலைப் புலிகளே இத்துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்தியிருக்கின்றார்கள் எனத் தாம் சந்தேகிக்கின்றார்கள் என இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

## களுதாவளையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் அந்த இடத்திலேயே மரணமானார்.

அவரைச் சுட்டவர்கள் மோட்டார் சைக்கிளில் கல்முனைப் பக்கமாக விரைந்தனர் எனக் கூறப்பட்டது. இராணுவத்தின் துணைப்படையில் இயங்கிய ஒருவரே சுட்டுக்கொல்லப்பட்டார் என முதலில் கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (ஒ-3)

## வெலிகந்தையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக்காலை 7.30 மணியளவில் தமது வீட்டிலிருந்து மோட்டார் சைக்கிளில் தமது வயலுக்குப் புறப்பட்ட இவர் இனந்தெரியாதோரால் வழியில் சுடப்பட்டார்.

உயிரிழந்தவர் முன்னர் கருணா கோஷ்டிக்காகச் செயற்பட்டவர் என்று ஒரு தகவல் தெரிவித்தது. கருணாவின் குழப்பம் ஏற்பட்ட பின்னர் வெலிகந்தைப் பகுதியில் இவ்வாறு மர்மமாகச் சுட்டுக்கொல்லப்பட்ட ஐந்தாவது நபர் இவர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஒ-3)

## உயர்தரப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரீட்சைப் பெறுபேறுகளை இறுதி செய்வதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக இன்று அதிகாலையே முடிவுகள் வெளியிடப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

பரீட்சை முடிவுகளை www.doenets.lk என்ற இணையத்தள முகவரியில் பெற்றுக் கொள்ள முடியும் என பரீட்சை ஆணையாளர் நாயகம் மகிந்த விஜயசிங்க தெரிவித்தார். (ஒ-9-7)

## சந்திரிகா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமாதான நடவடிக்கைகளுக்கு நிபந்தனையற்ற ஆதரவு தரத் தயார் என அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்திருந்தது. அந்தப் பின்னணியிலேயே ஜனாதிபதி சந்திரிகா - ரணில் உத்தேச சந்திப்புப் பற்றிய தகவல்கள் வெளியாகியுள்ளன.

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லாவது எதிரி நாகொட விதாரண மேன்முறையீட்டு நீதிமன்றில் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார். இந்த மனு மீதான விசாரணை எதிர்வரும் 23ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இடம்பெறவிருக்கின்றது என்றும் - அதுவரை இந்த வழக்கை யாழ். நீதிமன்றத்தில் விசாரணை செய்யவேண்டாம் என்றும் - மேன்முறையீட்டு நீதிமன்றம் யாழ். நீதிமன்றுக்கு நேற்று அறிவித்துள்ளது.

இதேவேளை -

இந்த வழக்கில் சம்பந்தப்பட்டவர் சிறுவன் ஆனபடியால் அவரது நலனைப் பாதுகாக்க வழக்கை கொழும்புக்கு மாற்றவேண்டாம் என்று சர்வதேச சிறுவர் அமைப்பு ஒன்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆட்சேபம் தெரிவிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

# சொந்தத் தாயகத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீர, மக்கள் சமாதான அவையின் ஆசாஜி தேரர், கலாநிதி குமார் ரூபசிங்க, தர்சகுமார நவரட்ண, கலாநிதி திஸ்ஸபுன்ன தேரர், அங்கிலிக்கன் திருச்சபையைச் சேர்ந்த அருட்திரு குமார் இலங்கசிங்க, தேசிய பாதுகாப்புச் சபையைச் சேர்ந்த பாலகிருஸ்னன் ஆகியோர் நேற்றுக் கிளிநொச்சிக்கு வந்தனர். இவர்கள் சு.ப.தமிழ்ச்செல்வனை அரசியல்துறை நடுவப் பணிகத்தில் சந்தித்து மூன்று மணிநேரம் உரையாடினர். அப்போது அவர்களிடம் சு.ப.தமிழ்ச் செல்வன் மேலும் தெரிவித்ததாவது:-

எங்களது நிலைப்பாடுகளையும் எண்ணங்களையும் உங்களோடு நாங்கள் பரிமாறிக் கொள்வது இலங்கையில் வாழ்கின்ற சிங்கள மக்களுக்கும் எமது மக்களின் எதிர்பார்ப்புகளையும் சரியான வகையில் எடுத்துச் சொல்வதற்கு அடித்தளத்தைப் போடும் என்று நாம் நம்புகின்றோம்

இந்தச் சமாதான முன்னெடுப்புக்களை முதலில் ஆரம்பித்து வைத்தவர் எங்களுடைய தேசியத் தலைவர் ஆவார். நாங்கள் முதலில் ஒரு யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை பிரகடனப்படுத்தி நாகரிகமான முறையில் எமது மக்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு காணவேண்டும் என்பதில் முதலில் எமது தேசியத் தலைவர்தான் அக்கறை கொண்டிருந்தார் என்பது உங்களுக்கு கடந்த கால அனுபவங்களில் தெரிந்திருக்கும்.

எங்களுடைய மக்கள் தங்களுடைய வாழ்வுரிமையை வேண்டி ஜனநாயக வழியிலும் அஹிம்சை ரீதியாகவும் போராடி வந்திருக்கின்றார்கள். இவை வன்முறை ரீதியாக நசுக்கமுற்பட்டபோது எமது மக்கள் பேரவலத்தையும் பேரழிவையும் சந்தித்த சூழ்நிலையில்தான் இதிலிருந்து விடுபட்டு தங்களை தற்காத்துக் கொண்டு சுதந்திரமாக நாங்கள் வாழவேண்டுமென்ற நோக்கோடு இந்த ஆயுதப் போராட்டத்தை தொடங்கினோம்

ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்து வந்தாலும் ஒவ்வொரு ஆண்டிலும் தேசியத் தலைவர் அவர்கள் மக்களுடைய நிலைப்பாடாக தனது கொள்கை விளக்கத்தை வெளியிடும் போது நாங்கள் சமாதான வழியில் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும் என்பதை ஒவ்வொரு மாவீரர் தின உரையி லும் தெளிவுபடுத்தியுள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகளையும் தமிழ் மக்களையும் பொறுத்தவரை நாம் சிங்கள மக்களை விரோதமாகப் பார்க்கவில்லை

அதேவேளை எங்களுடைய மக்கள் அவர்களுடைய சொந்த தாயகத்திலே சுதந்திரமாக கௌரவமாக வாழவேண்டுமென்ற அடிப்படை அபிலாசைகளோடு இருக்கின்றார்கள் என்பதையும் புரிந்த கொள்ள வேண்டும் அரசியல்வாதிகளையும் அதிகாரத்திற்காக மோதிக்கொண்டிருக்கின்றவர்களையும் புறந் தள்ளி மதத்தலைவர்களும் புத்திஜீவிகளும் வந்து இன்று நேசக்கரம் நீட்டியிருப்பது எங்களைப் பொறுத்தவரையில் மகிழ்ச்சிக்குரிய ஓர் ஆரம்பமாகும்.

ஒரு சிறிய சம்பவத்தின் ஊடாக எமது மக்களுடைய மன உணர்வுகளை நீங்கள் விளங்குவீர்கள் என நம்புகின்றோம் அண் மையில் பிரிட்டனில் இருந்து வந்த 80 வயது மதிக்கத்தக்க வயோதிபர் ஒருவர் என்னை எமது செயலகத்தில் வந்து சந்தித்து கதறி அழுதார். அந்தக் கதறலுக்கும் அந்த ஏக்கத்திற்கும் காரணம் தனது இறுதிக்காலத்திலே தனது சொந்த வீட்டிலே போய் ஒரு பிடி மண்ணை அள்ளிச் செல்ல அங்கு உள்ள இராணுவம் அவரை அனுமதிக்கவில்லை. அந்த ஏக்கத்தோடு புலம்பி அழுதார். இதுதான் இன்று எமது மக்களின் நிலைப்பாடு.

பல வருடங்களுக்கு முன், சென்ற அவர் சமாதானம் வந்துவிட்டது என்ற நம்பிக்கையோடு தனது வீட்டைப் பார்க்கவந்தவர் அவருக்கு சமாதானத்தின் சிறுதுளி நன்மை கூடக் கிடைக்கவில்லை. சிங்கள மக்களுக்கு இப்படியான நிலை வருமாக இருந்தால் அவர்களும் நிச்சயமாகப் போராடி இருப்பார்கள். அது போன்றே எமது மக்களுடைய நிலைப்பாடும் என்பதை புரிந்துகொள்வீர்கள் என்று நம்புகின்றோம். எங்கள் கடலிலே மீன்பிடிக்கவேண்டும், எமது விவசாய நிலத்தில் விவசாயம் செய்ய வேண்டும் இதுதான் எமது மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது. இதற்கு விடையில்லாமல் சமாதானத்தினுடைய அத்திபாரத்தைப் போடுவது கடினமான விடயமாக இருக்கும்.

இதை ஒட்டுமொத்த சிங்கள மக்களும் உணர்ந்துகொண்டு அங்கே அதிகாரத் திற்காக மோதிக்கொண்டிருக்கின்ற சிங்களத் தலைவர்கள மத்தியில் மனமாற்றத்தை ஏற்படுத்தி எல்லோரையும் ஒன்றுபட வைக்காவிட்டால் நிச்சயமாக நாங்கள் ஓர் உறுதியான சமாதானத்தை நோக்கிச் செல்வது மிகக்கடினமாக இருக்கும். - என்றார் தமிழ்ச்செல்வன். (ஒ)

# மனுச் செய்தவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதை நியாயப்படுத்துவதற்கு சட்ட ரீதியான பாதுகாப்போ, காரணங்களோ இல்லை என்று கூறப்படுகின்றது.

இந்நிலையில், பலாலிப் படைத்தளத்தைச் சுற்றியுள்ள பிரதேசத்தைச் சேர்ந்த மூவர் தங்களின் வீடு, வாசல்களுக்குத் தங்களைச் செல்ல விடாமல் படைத்தரப்பு தடுப்பதை ஆட்சேபித்து உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைமீறல் மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

பன்னாலையைச் சேர்ந்த சிவஞானசம்பந்தர், மாவிட்டபுரத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, கொல்லங்கலட்டி, கிளானையைச் சேர்ந்த வி.இராஜதுரை ஆகிய மூவரே வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இவர்களில் சிவஞானசம்பந்தரின் வழக்கு நேற்று உயர்நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. மற்றைய இருவரின் வழக்குகளும் ஒக்ரோபர் 25ஆம் திகதிக்கு விசாரணை செய்யப்படவிருக்கின்றன.

சிவஞானசம்பந்தரை அவரது வீட்டுக்குச் செல்ல அனுமதிக்காத படைத்தரப்பு, இது தொடர்பான அவரது மனு நேற்று உயர்நீதி மன்றத்தில் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, நீதியரசர்கள் ஹெக்டர் எஸ்.யாப்பா, எம்.கே. உடலகம ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, மனுதாரர் தனது வீட்டுக்குப் போய் குடியிருப்பதற்குத் தமக்கு ஆட்சேபனை இல்லை என்று தெரிவித்து, வழக்குத் தொடர்ந்து விசாரிக்கப்படாமல் தவிர்க்க வழிசெய்துகொண்டது.

வழக்குத் தொடர்ந்து விசாரிக்கப்பட்டிருந்தால், இவ்வாறு உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் மக்களின் வாழ்விடங்களைப் படையினர் ஆக்கிரமித்து வைத்திருப்பதற்கு சட்டரீதியான அதிகாரம் ஏதும் கிடையாது. அது தவறான நடவடிக்கை என்ற உயர்நீதி மன்றத் தீர்ப்பு வெளிவரும் என்றும் -

அதன் மூலம் உயர் பாதுகாப்பு வலய ஆக்கிரமிப்பால் தமது வீடு, வாசல்களை இழந்த அனைவருக்குமே ஓரேயடியாக விடிவு கிட்டும் என்றும் - மனுதாரர்கள் தரப்பில் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், மனுதாரரின் வழக்குக்கு எதிர்க் கருத்துக் கூறி, சட்டவாதம் செய்து மோதல், அவர் அவரது வீட்டுக்குச் செல்ல ஆட்சேபனை இல்லை என்று தெரிவித்து, இணங்கிப்போக அரசுத் தரப்பு முன்வந்துவிட்டதால் மனுதாரர்களின் எதிர்பார்ப்புச் சரிவரவில்லை.

ஒரே வழக்கில் ஒட்டுமொத்தத் தீர்ப்பை எதிர்பார்த்த பொதுமக்கள், இதே முறையில் இனி நிவாரணம் பெறுவதனால், பாதிப்புற்ற ஒவ்வொருவரினதும் பெயரில் தனித்தனியாக உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுக்களைத் தாக்கல் செய்யவேண்டும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

நேற்று விவாதமின்றி, இணக்கத்துடன் தீர்த்து வைக்கப்பட்ட சிவஞானசம்பந்தரின் வழக்கில் எதிர்மனுதாரர்களாக பாதுகாப்பு அமைச்சர், இராணுவத் தளபதி, வடபகுதி படைத் தளபதி, சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டிருந்தனர். மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணிகள் கன கேஸ்வரன், வி.எஸ்.கணேசலிங்கம், எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் சட்டத்தரணி மோகன் பாலேந்திராவின் அனுசரணையுடன் ஆஜரானார்கள்.

அரசுத் தரப்பில் சட்டத்தரணி சஞ்சய் ராஜித ஆஜரானார். (ஐ-க)


பாடசாலை மாணவர்களுக்கான டொச் வகுப்புகள்

ஆரம்பம்:
3, 4, 5, 6ஆம் வகுப்புகளுக்கு
BERN, ZURICH
ஆகிய பெரு நகரங்களில்
[illegible] மாஸ்ரரின் கற்பித்தலில்
தொடர்பு: 062 7974164 - 079 3344733
4665, OFTRINGEN, SWISS.
(33927)

O/L கணிதம்
PAPER CLASS
சனி, ஞாயிறு
(3.00 - 4.00 N.T.)
BY:
P. அன்ரனி
N.E.I. நல்லூர்
(34951)

வீடு விற்பனைக்கு

மீசாலை மேற்கில் கண்டி வீதி, பழைய ஸ்ரேசன் அருகில் 4½ பரப்புக் காணியுடன் சகல வசதிகளுடன் கூடிய கல்வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
பஞ்சாட்சரம் ஜெகசீலன்
மீசாலை மேற்கு, மீசாலை.
தொலைபேசி: 0776146900.
(34935)

இந்திய பரம்பரை ஜோதிடர்





அருள்வாக்கு
அம்பிகா அம்மா
மீண்டும் யாழ். புண்ணிய பூமிக்கு வருகை.
கைரேகை, ஜாதகம் பார்க்கப்படும்.
உங்களுக்கு எந்தவகையான பிரச்சினைகள் ஆனாலும் ஜாதக ரீதியாக கிரகதோசம் நீக்கி நீங்கள் வாழ்வில் வெற்றிபெறவும், வியாழன் மாற்றம் உங்களுக்கு எப்படி? என்பதை அறிந்து கொள்ளவும்
இன்றே அருள்வாக்கு அம்பிகா அம்மாவை நேரில் சந்திக்கவும்.
சந்திக்கும் இடம்:
அருள்வாக்கு அம்பிகா அம்மா
121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(ஸ்ரீ முருகன் ஜுவல்லர்ஸ் / லிங்கன கூல்பார் அருகில்)
H.P.No. 077 6127444, 077 6172644.
(34858)(40-16-18)

BEACON கல்வி நிலையம்
யாழ்நகர்.

A/L DAY CLASS
கலை, வர்த்தக பிரிவுகள்
கலைப்பிரிவு
LOG. : S.S. மனோகரன்
TAM. : நாக. தமிழிந்திரன்
GEO. : S.R.பாலா
H.C. : S. ஸ்ரீஷ்
DRA. : T.J.சுதன்
வர்த்தகப் பிரிவு
ACC. : B.பாலவாசன்
ECO. : P.மோகன்
B.St. : T.யசோ
CRI. : மல்லிகா
Pol.Sci. : பிரபல ஆசிரியர்
ஆரம்பம்: 09-08-2004
திங்கள் 7.00 a.m. (ப.நே.)
(34918)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணில் 24 ~ 10 ~ 1924



விண்ணில் 08 ~ 07 ~ 2004

அமரர்

திருமதி பூமணி நடராசா

கடந்த 08.07.2004 இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி பூமணி நடராசா அவர்களின் ஆத்ம சாந்திக்கிரியைகள் இன்று (07.08.2004) சனிக்கிழமை முற் பகல் 10.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறுகின்றன.

அன்னாரின் இந்த ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதன்பின்னர் இடம்பெறும் மதியபோசனத்திலும் பங்கு கொள்ளுமாறும் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முக்கியகுறிப்பு:- இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இராமலிங்கம் வீதி,
முடமாவடி,
திருநெல்வேலி கிழக்கு.

மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.08.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.